பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalāikkathir

விழயல் 01 வள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி 02, சனிக்கிழமை 17.12.2016 கதிர் 42

### இலங்கைக்கு ரூ.20 ஆயிரம் கோடி கடன் உதவி

இன்னும் பதினைந்து வருடங்களில் செலுத்தக்கூடியதாக - ஆகக் குறைந்த வட்டி வீதத்தில் - 1340 மில்லியன் அமெரிக்க டொலர்களை (சுமார் 20 ஆயிரம் கோடி ரூபாவை) உலக வங்கி இலங்கைக்குக் கடனாக வழங்கியுள்ளது. நிதியமைச்சர் ரவிகருணாநாயக்க இத்தகவலை நேற்று வெளியிட்டார். (உ)

## புதிய அரசமைப்பால்

# நாட்டுக்கு பேராபத்து!

## கூட்டு எதிரணி எச்சரிக்கை

கொழும்பு, டிசெம்பர் 17

**அவசர அவசரமாகக் கொண்டு வரப்படும் புதிய அரசமைப்பால் நாட்டுக்குப் பேராபத்து என்று எச்சரித்திருக்கின்றது கூட்டு எதிரணி.**

**இப்போதுள்ள சமாதானம் குழம்பி, இல்லாமல் போய் முழு நாடுமே அழிந்து போகும் என்றும் அது அபாயச் சங்கு ஊதியிருக்கின்றது.**

நல்லாட்சி அரசு நாட்டை சர்வதேச போர்த் தளமாக மாற்றிக் கொண்டிருக்கின்றது எனவும் குற்றம்சுமத்திய முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சி, மீண்டும் ஆயுதங்களைக் கையில்ஏந்தும்நிலைக்கு இளைஞர்கள் தள்ளப்பட்டிருக்கின்றனர்எனவும்தெரிவித்துள்ளது.

நாட்டுக்கு ஆபத்தை ஏற்படுத்துகின்ற புதிய அரசமைப்பை அவசர அவசரமாக எதிர்வரும் ஏப்ரல் மாதம் நாடாளுமன்றத்

பக்கம் 19 »


நேற்றைய மாநாட்டில் கெஹலிய

### இளைஞர் நாடாளுமன்ற தேர்தல் நாளை

நான்காவது இளைஞர் நாடாளுமன்றத் தேர்தல் நாளை 18ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

பக்கம் 20 »

### அளப்பு அருணாசலம்


நாட்டுக்கோ... இல்லை, உவையின்ரை இனவாத அரசியலுக்கோ...?


நேற்றைய மாநாட்டில் டலஸ்

### பொருத்து வீடுகளுக்கு எதிராக கிளிநொச்சியில் திங்களன்று ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி, டிசெ.17

வடக்கு மக்களுக்கு மீள்குடியேற்ற அமைச்சால் பொருத்து வீடுகள் வழங்குவதற்கு எடுக்கப்பட்டு வருகின்ற நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை மறுதினம் திங்கட்கிழமை கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெறவுள்ளதாக தெரியவருகின்றது.

வடக்கு மக்களுக்கு 65 ஆயிரம் வீடுகள் தேவை என மதிப்பிடப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 13 ஆயிரம் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள குடும்பங்களுக்குத் தேவை எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

தாங்கள் பரம்பரை பரம்பரை

பக்கம் 20 »

## புதிய அரசமைப்புக் குறித்து கூட்டமைப்பு இந்தியாவுடன் பேசுவதற்கு விரும்புகிறதாம்!

கொழும்பு, டிசெ.17

உத்தேச புதிய அரசமைப்புக் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவுடன் கலந்தாலோசிக்க வேண்டியுள்ளது என கூட்டமைப்பின் மூத்த தலைவர்களுள்ஒருவரானமாவை சேனாதிராசா கூறியிருக்கின்றார்.

புதிய அரசமைப்புத் தொடர்பாக சர்வதேசத்துடன் கலந்துரையாட வேண்டியுள்ளது என மாவை சேனாதிராசா டெய்லி மிரர் பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார். அதிலும் குறிப்பாக இந்தியாவுடன் கலந்துரையாட வேண்டியுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமஷ்டித் தீர்வில் உறுதியாக உள்ளது என்று தெரிவித்துள்ள மாவை சேனாதிராசா, அண்மையில் தான் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் மாகாணங்களுக்கு நிதி அதிகாரமும் பகிரப்பட வேண்டுமென குறிப்பிட்டார் என்றும் சொன்னார்.

## ஜனாதிபதியின் அதிகாரங்களை இப்போது பிடுங்கிக் கொண்டு விட்டாரா பிரதமர்?

கொழும்பு, டிசெ.17

ஜனாதிபதியின் அதிகாரங்களை இப்போது பிரதமர் பிடுங்கிக் கொண்டு விட்டாரா என்று கேள்வி எழுப்பியுள்ளது கூட்டு எதிரணி.

பாதுகாப்புத் தொடர்பில் கருத்துக் கூற வேண்டிய ஜனாதிபதி மௌனம் சாதிக்கின்றார். அந்த விடயங்களைப் பிரதமர் கையாளுகின்றார் என்றும் அது குற்றம் சுமத்தியது.

நாடு இப்போது பயணிக்கும் பாதை நிச்சயமாக இளைஞர்களை ஆயுதம் ஏந்துகின்ற கட்டாய நிலைக்குத் தள்ளிவிடும் எனவும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளின் சார்பில் அதன் நாடாளு

பக்கம் 19 »

## பொலிஸ் விசாரணைக்கு ஆஜராக வீரவன்ஸவுக்கு நீதிமன்று உத்தரவு

### டிசெ.28,29 இல் நிதிக்குற்றப் பிரிவில் பிரசன்னமாக வேண்டும்

கொழும்பு, டிசெ.17

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவை எதிர்வரும் 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப்பிரிவில் ஆஜராகி வாக்கு மூலம் வழங்குமாறு கொழும்பு நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

அரச வாகனங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்திய விடயம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு ஆஜராகுமாறு நிதிக் குற்ற விசாரணைப் பிரிவு விமல்வீரவன்ஸவுக்கு அழைப்பு விடுத்தது.

ஆனால் விமல் வீரவன்ஸ அதைப் புறக்கணித்தமை தொடர்பாக நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு கொழும்பு நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு வந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ பல தடவைகள்

பக்கம் 20 »

## தமிழகத்தை நோக்கி மீண்டும் புதிய புயல் ஒன்று நகர்கிறது!

### சென்னைக்கு மீண்டும் சிவப்பு எச்சரிக்கை

சென்னை, டிசெ.17

சென்னையை சின்னாபின்னமாக்கிய 'வர்தா' புயலின் தாக்கத்தில் இருந்து சென்னை மக்கள்மீள முடியாமல்தவித்துக் கொண்டிருக்கும் நிலையில், மீண்டும் ஒரு புயல் சென்னையைத்தாக்கக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதுஎனவானிலைஆய்வு

பக்கம் 19 »

## கருணாவின் குண்டு துளைக்காத ஜீப்பை ஜனாதிபதி செயலகத்தில் ஒப்படைக்கவும்!

### நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு நீதிமன்று உத்தரவு

கொழும்பு, டிசெ.17

முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனின் (கருணா) பாவனையில் இருந்த குண்டு துளைக்காத ஆடம்பர வாகனத்தை ஜனாதிபதி செயலகத்தில் ஒப்படைக்குமாறு கொழும்பு நீதிமன்றம் நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு நேற்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஆட்சியின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உப தலைவராக செயற்பட்ட கருணாவுக்கு 8 கோடி ரூபா பெறுமதியான குண்டு துளைக்காத ஜீப் வண்டி வழங்கப்பட்டிருந்தது.

அந்த வாகனத்தின் பெறுமதி 78,633,385 ரூபாய் என நீதிமன்றில் கூறப்பட்டது. அது 2010

பக்கம் 20 »

## ஊறணிப் பகுதி மீனவ இறங்குதுறைகளை விடுவிப்பது குறித்து படையினர் ஆராய்வு

யாழ்ப்பாணம், டிசெ.17

வலிகாமம் வடக்கில் உள்ள தையிட்டி வடக்கு ஊறணிப் பகுதியில் அமைந்திருக்கும் நான்கு மீனவ இறங்குதுறைகளை இயன்றவிரைவில்மீனவர்களின் தொழில் பாவனைக்கு விட்டுக் கொடுப்பது குறித்து சாதகமாகப் பரிசீலிப்பதற்கு வடபகுதி இராணுவத் தளபதி இணங்கியிருக்கின்றார்.

வடபகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவுக்கும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவுக்கும் இடையில் சில தினங்களுக்கு

பக்கம் 19 »

# ஜனாதிபதியும் மலேசிய மன்னரும் நேற்று சந்தித்துக் கலந்துரையாடல்



கொழும்பு டிசெ.17

மலேசியாவுக்குமூன்றுநாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள இலங்கைஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் மலேசிய மன்னர் சுல்தான் முஹம்மதுக்குமிடையேநேற்று வெள்ளிக் கிழமை பிற்பகல் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

மிகவும் சுமுகமாக இடம் பெற்ற இந்தச் சந்திப்பின் போது இலங்கையின் புதிய அரசின் நடவடிக்கைகளைப் புகழ்ந்து பேசியமலேசியமன்னர், ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேனவின் தலைமையிலான இணக்க அரசின் செயற்பாடுகளையும் பாராட்டினார் என்று ஜனாதிபதி செயலகம்நேற்றிரவுவெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு :-

இலங்கைக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குமாறு தான் மலேசிய அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் என இந்தச்சந்திப்பின்போது மன்னர் சுல்தான் முஹம்மத், இலங்கையின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

நல்லிணக்கம், அரசமைப்பு சீர்திருத்தம் மற்றும் பொருளாதார அபிவிருத்தியை நோக்கி புதிய இணக்க அரசின் கீழ் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மலேசிய மன்னருக்கு விளக்கினார்.

மலேசிய அரசு இலங்கைக்கு வழங்கிவரும் உதவி களுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி, இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி இலக்குகளை வெற்றி கொள்வதற்கு மலேசியாவின் உதவி தொடர்ந்தும் கிடைக்கும் எனத் தான் நம்புகிறார் எனவும் தெரிவித்தார்.

2016 ஆம் ஆண்டு அதிகாரத்துக்கு வந்த மன்னர் சுல்தான் முஹம்மத், மலேசியாவின் மன்னர்களில் மிகவும் குறைந்த வயதுடையவர் என்பது குறிப்பிடத்தக்கது. – என்றுள்ளது.

(ம)

# கொழும்பில் நேற்று கவனவீர்ப்பு




கொழும்பு, டிசெ. 17

சிரியாவின் அலெப்போ நகரில் பொதுமக்கள் மீது நடத்தப்பட்டுவரும் தாக்குதலை நிறுத்துமாறு கோரி நேற்றுக் கொழும்பு லிப்டன்சதுக்கப் பகுதியில்அமைதியான போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

'அலப்போவைப் பாதுகாருங்கள்' என்று கோரும் பதாகைகளைத் தாங்கிய வண்ணம் அமைதியான முறையில் இந்த கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

# யாழ்.பல்கலை மாணவர்கள் கொலை: பொலிஸாரின் விளக்கமறியல் நீடிப்பு!



யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் அண்மையில் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களான பொலிஸார் ஐவரினதும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று யாழ் நீதிவான் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது இவர்களது விளக்கமறியல் இந்த மாதம் 30ஆம் திகதி வரை நீடிக்கப்படுகிறது என யாழ். பதில் நீதிவான் நீதிபதி பீ.டி. சிவலிங்கம் உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி வழக்கு தொடர்பான விசாரணை அறிக்கைகள் குற்றப் புலனாய்வு பிரிவினரால் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களிடம்மேலதிக விசாரணைகள் செய்யப்பட வேண்டி இருக்கிறது என குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்தமைக்கு அமையவே இவர்களது விளக்கமறியல் நீடிக்கப்படுகிறது என நீதிவான் தெரிவித்தார். (ம-18)

# மன்னாரில் பண்டிகை வியாபாரிகளால் இவ்வருடம் 70 லட்சம் ரூபா வருமானம்

## *முன்னைய ஆண்டுகளை விட இது அதிகம் என்கிறது நகர சபை*

மன்னார் நகரில் எதிர்வரும் நத்தார் மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு அங்காடி வியாபாரிகளுக்காக மன்னார் நகர சபை வழங்கும் தற்காலிக கடைத் தொகுதிகள்மூலம் இந்தவருடம் 70 லட்சம் ரூபா வருமானம் கிடைத்துள்ளது என நகரசபைச் செயலாளர் எக்ஸ்.எல்.ஆர். பிறிட்டோ தெரிவித்தார்.

கடந்த வருடங்களில் கிடைத்த வருமானத்தைவிடவும் இது அதிகமானது எனவும் அவர் கூறினார்.

வருடந்தோறும் நடைபெறும் கிறிஸ்மஸ் மற்றும் புதுவருட விழாக்களை முன்னிட்டு மன்னார்நகரப்பகுதியில்வெளியூர், உள்ளூர் அங்காடி வியாபாரிகள்வீதியோர வியாபாரத்தில் ஈடுபடுகின்றமை வழமையாகும்.

இந்த வருடம் மன்னார் நகர சபை 185 தற்காலிக கடைகளுக்கு அரச சட்டதிட்டங்களுக்கு அமைவாக விண்ணப்பம் கோரியபொழுது, 1756 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன.

கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள்நேற்றுமுன்தினம்வியாழக்கிழமை மன்னார் நகர சபை மண்டபத்தில் விண்ணப்பதாரிகளின்முன்னிலையில்பரிசீலிக்கப்பட்டன.ஒவ்வொருகடைக்கும் நகர சபையின் கேள்வி கூறல் குறைந்த தொகையாக 13 ஆயிரமாக வைக்கப்பட்டிருந்த போதும்ஒருகடைக்குஅதிகூடிய தொகையாக 67 ஆயிரத்து 800 ரூபா வரைக்கும் கேள்வி கோரப்பட்டிருந்தது.

கூடிய தொகை கோரப்பட்ட அடிப்படையில் 185 பேருக்கும் வழங்கப்பட்ட கடைகளின் மூலம் இவ்வருடம் மன்னார் நகரசபைக்கு70 இலட்சம்ரூபா வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது. இவ்வருமானம்கடந்தவருடத்தைவிட 20 இலட்சம் ரூபா அதிகமாகும். நகரசபையில் கடமைபுரியும் ஊழியர்களின் ஒத்துழைப்பாலேயே இதுகிடைக்கப்பெற்றது என நகர சபை செயலாளர்எக்ஸ்.எல்.ஆர்.பிறிட்டோ தெரிவித்தார்.

கிடைக்கப்பெற்ற இவ் வருமானத்தில் 37 இலட்சம் ரூபா வீதிகளின் புனரமைப்புக்கு செலவிடப்படவுள்ளது. எஞ்சிய நிதி, கிராமிய சங்க பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்து அவர்களது பகுதிகளின் அபிவிருத்தித் திட்டங் களுக்கு செலவழிக்கப்படும் என நகர சபைச் செயலாளர் தெரிவித்தார்.

கடந்தகாலங்களில்இந்த அங்காடி வியாபாரிகளுக்கு இருபது நாள்கள் வியாபாரம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்ட போதும் மன்னார் மாவட்ட வர்த்தகர்களின் நலன்கருதி இவ் வருடம் இவர்களின் வியாபாரநாட்கள்பத்துதினங்களாகக் குறைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித் தார்.

இதற்கமைய இவர்கள் 20 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை வியாபாரத்தை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-112)

# மன்னாரிலுள்ள மூன்று நன்னீர்க் குளங்களில் ஒன்றரை இலட்சம் மீன்குஞ்சுகள் விடப்பட்டன

## *வடக்கு அமைச்சர் டெனிஸ்வரனின் ஏற்பாட்டில்*

மன்னார்,டிசெ.17

வடக்கு மாகாணத்தில்உள்ள நன்னீர் மீன்பிடி சங்கங்களை வாழ்வாதாரத்தில் ஊக்குவிக்கும் திட்டத்துக்கு அமைவாக மன்னார் மாவட்டத்தில் உள்ள மூன்று நன்னீர்க் குளங்களில் நேற்று வெள்ளிக்கிழமை ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மீன் குஞ்சுகள் விடப்பட்டன.

வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனிஸ்வரனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தச் செயற்றிட்டத்தில் அமைச்சரும் கலந்துகொண்டார்.

மன்னார் பூமலர்ந்தான் குளம், கட்டுக்கரைக் குளம், வங்காலைக்குளம் ஆகிய குளங்களில் தலா 50 ஆயிரம் மீன் குஞ்சுகள் வீதம் விடப்பட்டன.

பூமலர்ந்தான் குளத்தில் மீன் குஞ்சுகள் விடப்பட்ட நிகழ்வு நேற்று மதியம் 12.30 மணியளவில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மீன்பிடி அமைச்சர் பா.டெனிஸ்வரன், மடு பிரதேச செயலாளர் எவ்.சி. சத்தியசோதி, இலங்கை தேசிய



நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மன்னார், வவுனியா மாவட்ட பொறுப்பதிகாரி பா.நிருபராஜ், மன்னார் மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.மைக்கல் கொலின், பூமலர்ந்தான் கிராம சேவகர், அந்தப் பகுதி கிராம மட்ட அமைப்புக்களின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கட்டுக்கரைக் குளத்தில் மீன் குஞ்சுகளை விடும் நிகழ்வு நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெற்றது. கட்டுக்கரைக் குளத்திலும் அதனை அண்டிய குளங்களிலும் ஏற்கனவே இந்த வருடம், 4 இலட்சத்து 50 ஆயிரம் மீன்குஞ்சுகளும், 12 இலட்சம் நன்னீர் இறால் குஞ்சுகளும் விடப்பட்டன.

இந்தநிகழ்விலும் அமைச்சர் டெனிஸ்வரனுடன் மேலும் பல அதிகாரிகளும் கட்டுக்கரை நன்னீர் மீன்பிடிச் சங்கத்தின் தலைவர், அந்தப் பகுதி கிராம மட்ட அமைப்புக்களின் உறுப்பினர்கள் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

வங்காலைக் குளத்தில் மீன் குஞ்சுகளை விடும் நிகழ்வு நேற்றுபிற்பகல் 3.00 மணியளவில்இடம்பெற்றது.நானாட்டான் பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட வங்காலை கிராமத்தின் மூத்த பிரஜைகளதுவேண்டுகோளுக்கு இணங்க இந்த மீன் குஞ்சுகள் அந்தக் குளத்தில் விடப்பட்டன.

இந்தநிகழ்விலும்அமைச்சர் டெனீஸ்வரனுடன் பல அதிகாரிகளும் கிராம மட்ட அமைப்புக்களின்பிரதிநிதிகள், நன்னீர்மீன்பிடியில் ஈடுபடும் தொழிலாளர்கள், பிரதேசமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ம -70)

# புனர்வாழ்வு பெற்ற போராளிகளுக்கு தொழில் முயற்சிக்கான உதவிகள்





வவுனியா, டிசெ.17

புனர்வாழ்வு பெற்று வெளியேறிய முன்னாள் போராளிகளின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக தொழில் முயற்சி உதவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று வவுனியா நகர சபை மைதானத்தில் இடம் பெற்றது.

மீள்குடியேற்ற, புனர்வாழ்வு அமைச்சின் செயற்றிட்டத்தின் கீழ் புனர்வாழ்வுஆணையாளர் நாயகம் பணியகத்தின் ஏற்பாட்டில்இவ்வுதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த 200 புனர்வாழ்வு பெற்ற போராளிகளுக்கு கோழி வளர்ப்பு, தையல் வேலைகள் என்பவற்றுக்காக உதவிகளே வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ஜானக ரத்நாயக்க, வவுனியா அரச அதிபர் ரோஹண புஷ்பகுமார, வவுனியா புனர்வாழ்வு நிலையத்தின் பணிப்பாளர் கேணல் எம்.ஏ.ஆர். கமிடோன், புனர்வாழ்வுத் திணைக்கள அதிகாரிகள், முன்னாள் போராளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இந்த நிகழ்வின்போது நட்புறவைப் பேணும் நோக்கில் நடைபெற்று வந்த உதைபந்தாட்ட போட்டியின் இறுதிப் போட்டியும் இடம்பெற்றிருந்தது. (ஐ-100)

## பனம் விதை நடுகையில் மண்டைதீவு இளைஞர்கள்!

*ஆர்வத்துடன் அவர்கள் சிரமதானம்*

மண்டைதீவு, டிசெ.17

மண்டைதீவு கிராமத்தின் அணைக்கட்டுப் பகுதியை அண்டி பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டு வருகின்றன.

மண்டைதீவு வழியில் பிள்ளையார் ஆலய சுற்றாடலிலும் பனம் விதைகள்நடும் வைபவம் இடம் பெற்றுள்ளது. அந்த ஆலயத்தின் ஆல ம்ரத்தைச் சுற்றி 'ப' வடிவில் இருக்கையாக சிமெந்து கட்டுமானம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடல் நீர் தடுப்பணையின் ஓரமாக கிழக்குப் புறமாக பனையடிக்காடு வரையும் அங்கிருந்து தெற்கு நோக்கி, கடற்கரை ஓரமாகவும் மூன்று கிலோமீற்றர் தூரம் வரை பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளன.

மேலும் அணைக்கட்டின் மேற்குப் புற நீட்சிப் பாதையில் கொவ்வை குளிபனம் காட்டு பகுதி வரையும் பனம் விதைகள் நடும் செயற் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டத்தை மண்டைதீவு கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்களே ஸ்தாபன ரீதியாக மேற்கொண்டுள்ளனர்.

· (இ-20)

## கசிப்பு வைத்திருந்த பெண்ணுக்கு சிறை

ஏழாலை மயிலங்காடு பகுதியில் 15ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்தமை, மற்றும் விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைதான பெண்ணுக்கு இரண்டு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. குறித்த வழக்கை புதன்கிழமை விசாரணை செய்த மல்லாகம் மாவட்ட நீதிவான் ஏ.யூட்சன் குறித்த பெண்ணுக்கு 20ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் 5 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

கடந்த 10 ஆம் திகதி இந்தப் பெண் சுன்னாகம் பொலிஸ் நிலைய புலனாய்வுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

## மட்டுவில் மோதல் சம்பவம்: சந்தேகநபர்களுக்குப் பிணை

மட்டுவில், டிசெ.17

மட்டுவில் பகுதியில் இரு தரப்புக்கு இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்கள் நால்வருக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளது.

தலா 50ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் நேற்று முன்தினம் அனுமதியளித்தார்.

வழக்கினைஎதிர்வரும் பெப்ரவரி மாதம் ஒத்திவைத்தார்.

அத்துடன்பிணையில் செல்லப்பட்ட சந்தேக நபர்களும், பிணையாளிகளும்தமதுவதிவிடத்தை உறுதிப்படுத்திக்கிராமசேவையாளரின் கடிதத்தை நீதிமன்ற பதிவாளரிடம் ஒப்படைக்குமாறு கட்டளையிட்டார்.

சந்தேக நபர்கள் பிரதி ஞாயிற்றுகிழமை காலை 6 மணிக்கும் மாலை 7 மணிக்கும் இடையில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகி கையொப்பம் இடுமாறும் உத்தரவிட்டார்.

கடந்த மாதம் மட்டுவில் பகுதியில் இரு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் குறித்த நால்வரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

## விவசாயி எரித்துக் கொலை: சந்தேகநபரின் மறியல் நீடிப்பு

*கிளிநொச்சி, டிசெ.17*

பூநகரி, ஞானிமடம் பகுதியில் விவசாயி ஒருவரைக் கொலை செய்து எரித்து புதைத்த குற்றச்சாட்டில் கைதான சந்தேகநபரைத் தொடர்ந்தும் எதிர்வரும் 29 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிபதி ஏ.ஆனந்தராஜா நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

கடந்த நவம்பர் மாதம் 28 ஆம் திகதி வவுனியாவில் இருந்து பூநகரியில் உள்ள தனது வயலைப் பார்க்க வந்த கந்தையா சபாரத்தினம் (வயது56) என்ற குடும்பஸ்தர் காணாமல் போயிருந்தார்.

இது தொடர்பில் அவரது மனைவி பூநகரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதன் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், பூநகரியில் வீடு ஒன்றைச் சோதனை செய்திருந்தனர்.

இதன்போது வீட்டின் பின்பக்கம் சந்தேகத்துக்கு இடமான முறையில் காணப்பட்ட குழி ஒன்றைத் தோண்டிப் பார்த்தபோது, காணாமல் போனவர் கொலை செய்யப்பட்டு பின்னர் எரியூட்டப்பட்டு புதைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டார்.

இதன் அடிப்படையில் பூநகரி கறுக்காய்தீவு பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

## நீர்வேலி அறநெறிப் பாடசாலை ஆண்டு விழாவும் பரிசில் நாளும்

நீர்வேலி, டிசெ.17

நீர்வேலி ஸ்ரீ செல்லக் கதிர்காம சுவாமி அறநெறிப் பாடசாலையின் ஆண்டு விழாவும், பரிசில் நாளும் நாளை ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு அறிநெறிப் பாடசாலை முன்றிலில்இடம்பெறவுள்ளது.

அறிநெறிப்பாடசாலையின் தலைவர் கு.ஸ்ரீகாணந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.கஜதீபன், கோப்பாய் பிரதேச செயலர்திருமதி சுபாஜினி மதியழகன், வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம், தீவக ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் - நீர்வேலி செல்லக்கதிர்காம சுவாமி திருக்கோயில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ "நீர்வைமணி" கு.தியாகராஜக் குருக்கள், நீர்வேலி றோ.க.த.க பாடசாலை அதிபர் சி.தர்மரட்ணம், இந்து கலாசார திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் திருமதி மா.தெய்வலட்சுமி, திருமதி மகிந்தினி விஜயகுமார்-

புத்தூர் மடிஹே பஞ்சசீல வித்தியாலய அதிபர் திருமதி சிவரஞ்சினி கணேசானந்தன், புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி பிரதி அதிபர் சி.ரதீஸ்குமார், கோப்பாய் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி விரூபி சுமணன் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வின் இறுதியில் சிறப்பம்சமாக அறநெறி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (இ)

## பேருந்துக்குள் குழப்பம் செய்தோர் 10 ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்கினர்!

பேருந்தில் குழப்பம் விளைவித்து பேருந்து நடத்துநருக்கும் சக பயணிகளுக்கும் அசௌகரியம் விளைவித்த தென்னிலங்கை பகுதியைச் சேர்ந்த மூவரை கடுமையாக எச்சரிக்கை செய்த நீதிவான் பாதிக்கப்பட்ட பேருந்தின் நடத்துனருக்கு 10 ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்குமாறும் உத்தரவிட்டார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்று கொண்டிருந்த தனியார் பேருந்தில் ஏறிய தென்னிலங்கை பகுதியைச் சேர்ந்த மூவர் மதுபோதையில் நடத்துநருடன் தகராறில் ஈடுபட்டனர்.

இதனால் பேருந்து சேவையில் இருந்து நிறுத்தப்பட்டு, சாரதி பேருந்தை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு செலுத்திச் சென்று அந்த மூவரையும் பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தார்.

அவர்களைப் பொலிஸார் கடந்த சனிக்கிழமை நீதிவானின் வாசஸ்தலத்தில் முற்படுத்திய போது விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, மன்றுக்கு வருகை தந்த பேருந்தின் நடத்துநர் குறித்த நபர்களின் நடவடிக்கையால் தமது தொழில் அன்றையதினம் பாதிக்கப்பட்டது என்று கூறினார். இதனையடுத்து நீதிவான் 10ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்குமாறு உத்தரவிட்டார். (ஐ-9)

## மக்கள் நலன்பேணும் அமைப்பின் உதவித் திட்டம்

மக்கள் நலன் பேணும் அமைப்பின் நான்காம் ஆண்டு நிறைவு விழாவும் உதவித்திட்ட நிகழ்வும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறும்.

மக்கள் நலன் பேணும் அமைப்பின் தலைவர் செ.ஜெகபாலன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் க.தேவராசா, கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன், இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் ஆகியோரும் -

கௌரவ விருந்தினர்களாக ஓய்வு நிலை அதிபர் ஆர்.குலசிங்கம், வர்த்தகர் எஸ்.சுரேஷ்குமார் ஆகியோரும் பங்குபற்றவுள்ளனர்.

நிகழ்வில் மக்கள் நலன் பேணும் அமைப்புக்கு பல வகையிலும் உதவி ஒத்தாசைகள் புரிந்த நலன்விரும்பிகள், தொழிலதிபர்கள் பலர் கௌரவிக்கப்படவுள்ளனர். (இ)

விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி
இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்ப்பண்ணை, யாழ்ப்பாணம்.
021 221 7860, 077 248 7774

யாழ்ப்பாணத்தில் க.பொ.த உயர்தரப் பிரிவு தொழில்நுட்பப் பாடங்களுக்கு சிறப்பாக இயங்கி வரும் கல்வி நிறுவனம். பொறியியல் தொழில்நுட்பம், உயிர் முறைமைகள், தொழில்நுட்பம் பாடங்களுக்கு மிகச்சிறந்த விரிவுரைகளும் செயல்முறை வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. மாணவர்கள் இறுதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சரியான வழியைத் தெரிவு செய்து NVQ படிநிலை ஊடாக தொழில்நுட்பவியல் பட்டமொன்றுக்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பிடுங்கிய அதிகாரங்களை மீளப் பறிகொடுக்கும் அவலம்

வடக்கு மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா மிக முக்கியமான விடயம் ஒன்றை மாகாணசபையின் வரவு - செலவுத் திட்ட விவாத ஆரம்பத்தில் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

'உரிமை', 'உரிமை' என்று குரல் எழுப்பும் நம்மவர்கள், நமக்கு ஏற்கனவே வழங்கப்பட்டவை எனக் கூறப்படும் உரிமைகளைப் பிரயோகிப்பதில் எவ்வளவு மெத்தனமாகவும், விட்டேத்தியாகவும் செயற்பட்டிருக்கின்றார்கள் என்பதை தமது உரை மூலம் அவர் அம்பலமாக்கியிருக்கின்றார்.

வடக்கு மாகாணசபையின் வரவு - செலவுத் திட்டம் என்ற பெயரில், இதுவரை சபையில் சமர்ப்பிக்கப்பட்டவை எல்லாம் வடக்கு மாகாணசபையின் திட்டங்களே அல்ல என்ற உண்மையையும் அவர் பகிரங்கமாகப் போட்டுடைத்திருக்கின்றார்.

வடக்கு மாகாணசபையில் மீண்டுவரும் செலவினமானாலும், மூலதனச் செலவினமானாலும் எல்லாவற்றையும் மத்திய அரசின் அமைச்சுக்களே இதற்கு, இதற்கு - இவ்வளவு, இவ்வளவு - எனத் தீர்மானித்து, குறித்தொதுக்கி அனுப்புகின்றன. அவற்றை கூட்டிணைத்து மாகாணசபையின் வரவு - செலவுத் திட்டம் என்ற பெயரில் நாம் இங்கு சமர்ப்பிக்கின்றோம். இது வேடிக்கையன்றி வேறில்லை - என மாகாணசபையிலேயே வெளிப்படையாக சுட்டிக்காட்டியிருக்கின்றார் தவராசா.

மாகாணசபை முறைமை அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் கீழ் உருவாக்கப்பட்டது. அதுவும் விசேடமாக வடக்கு, கிழக்குக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் - அல்லது பரவலாக்கும் - நோக்கத்துடன் அது கொண்டு வரப்பட்டது.

ஆகவே, அத்தகைய ஏற்பாடு, ஒழுங்கு முறையாக - உரிய அதிகாரப் பரவலாக்கலின் வழி - செயற்படுகின்றமையை உறுதிப்படுத்தும் பொறுப்பு, விசேடமாக வடக்கு, கிழக்கு மாகாணசபைகளுக்கே உரியது. அதிலும் வடக்கு மாகாணசபைக்கு இதனை முன்னின்று கவனிக்கும் கடப்பாடு அதிகம் உண்டு.

ஏனைய மாகாணசபைகள் இப்படித்தான் செயற்படுகின்றன என்று கூறி, மந்தை போல முன்னால் போகின்ற தரப்பை அப்படியே பின்பற்றும் வேலையை வடக்கு மாகாணசபை செய்ய முடியாது.

அதிகாரப் பரவலாக்கல் இலக்கை நிறைவு செய்வதற்காகக் கொண்டு வரப்பட்ட மாகாணசபை முறைமை, அந்தத் திசையில் இயங்குவதை முன்னின்று வழிகாட்டி, செயற்படுத்தி, உறுதிப்படுத்தும் பொறுப்பு வடக்கு மாகாண சபைக்கே உரியது. அதனை வடக்கு மாகாணசபை தட்டிக் கழித்து விட முடியாது.

வடக்கு மாகாணசபைக்கு தேவையான- போதுமான- நிதியை மத்திய அரசு வழங்க வேண்டும் என்றுதான் அரசமைப்புக்கான 13ஆவது திருத்தம் தெளிவாகக் கூறுகின்றது.

அப்படி ஒதுக்கப்பட்ட நிதியை, இன்ன தேவைக்கு, இப்படித்தான் பயன்படுத்த வேண்டும் என மத்திய அரசு நிபந்தனைகள், வழிகாட்டல்கள் விதிக்கலாம் என்றோ அல்லது மத்திய அரசின் அத்தகைய வழிகாட்டல்படி மட்டுமே மாகாண அரசுகள் செயற்பட வேண்டும் என்றோ அரசமைப்பிலோ அல்லது வேறு பிற நிதி நியதிச் சட்டங்களிலோ கூறப்படவில்லை.

அவ்வாறு இருக்கையில் -

அதிகாரப் பரவலாக்கலுக்காகக் கொண்டு வரப்பட்ட மாகாண சபைகளின் நிதி விடயத்தில் மத்திய அரசின் நிர்வாகக் கரங்கள் தலையிட்டு அதிகாரம் செலுத்தி, மேலாதிக்கம் செய்வது அது கொண்டு வரப்பட்ட நோக்கையே சிதறடிக்கச் செய்யும் செயலன்றி வேறில்லை.

மாகாணங்களுக்கான அதிகாரங்களை கொழும்பு விரும்பிப் பகிர அல்லது பரவலாக்க முன்வரவில்லை. அழுத்தங்களின் மத்தியிலேயே அதற்குக் கொழும்பு அரசு இணங்க வேண்டி வந்தது. அது பரகசியமான விடயம்.

ஆகவே, மாகாணங்களுக்கு அதிகாரத்தை ஒரு கையால் வழங்குவது போல காட்டி, மறுகையால் பிடுங்கும் எத்தனத்தை அது மேற்கொள்ளும். அது எதிர்பார்க்கப்பட வேண்டியதே.

ஆனால் 'உரிமை', 'உரிமை' என்று அதிகாரப் பகிர்வு, அதிகாரப் பரவலாக்கல் என்றும் உரிமைக்குரல் எழுப்பும் நாமே, பரவலாக்கப்பட்ட அல்லது பகிரப்பட்ட அதிகாரத்தை மீளப் பறிகொடுக்காமல் சிக்கெனப் பிடித்து வைத்திருப்பதை உறுதிப்படுத்தி நிற்க வேண்டும்.

வடக்கு மாகாண எதிர்க்கட்சி தலைவர் சுட்டிக்காட்டுகின்றமைப்படி பார்த்தால், இந்த விடயத்தில் நமது மாகாணசபை கோட்டை விட்டுவிட்டது என்றே கருத இடமுண்டு.

நிதி விடயத்தில், மாகாணசபை முறைமையின் கீழ் எமக்கு வழங்கப்பட்டிருந்த நிதி அதிகாரங்களை, மத்திய அரசு தனக்கு உரிமையற்ற நிலையிலும் எம்மிடமிருந்து பறித்துத் தனது கையில் வைத்துக் கொண்டு, ஏதேச்சதிகாரம் செய்ய, நாம் அதை ஏற்றுக் கொண்டு அனுமதித்துவிட்டு , மூன்றாவது வரவு - செலவுத் திட்டத்தையும் சபையில் சமர்ப்பித்து விட்டோம் என்று கூறி மகிழ்கின்றோம். இது கேவலம் இல்லையா?

தற்போதைய, வடக்கு மாகாணசபை தனது முதலாவது வரவு- செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க முன்வந்த சமயத்திலேயே, இந்த விடயத்தில் துள்ளி எழுந்திருக்க வேண்டும். மத்திய அரசின் அதிகார வரம்பு மீறிய - சட்ட வலுவற்ற - கெடுபிடியை ஆட்சேபித்திருக்க வேண்டும். தேவையாயின் நீதிமன்றுக்குக் கூடச் சென்றிருக்க வேண்டும்.

அதனால் தானே நீதித்துறையில் தோய்ந்து எழுந்தவர்களை மாகாணசபைக்கு அனுப்பி வைத்தோம்....!

பகிர்ந்து வழங்கப்பட்ட அதிகாரங்களையே சரியாகப் பிரயோகிக்கவும், எம்முடன் தக்கவைக்கவும் திறமையற்ற நாங்கள், மேலும் அதிகாரப் பரவலாக்கலை அல்லது அதிகாரப் பகிர்வை வலியுறுத்துவதற்குத் தகுதியுடையவர்களா?

வாசகர்களே - வாக்களித்தவர்களே - முடிவு செய்ய வேண்டியவர்கள் நீங்களே...!

# தேர்தல் செலவீனம் வரையறுக்கப்படும்

*பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ.17

தேர்தலில் செலவிடப்படக்கூடிய உச்சபட்சத் தொகை வரையறுக்கப்பட உள்ளதாக பவ்ரல் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

''தேர்தல் ஆணைக்குழுவின் ஒத்துழைப்புடன் வேட்பாளர் ஒருவர் தேர்தலில் செலவிடக் கூடிய உச்சபட்ச தொகையை நிர்ணயம் செய்யும் உத்தேசச் சட்ட வரைவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படவுள்ளது.

தேர்தலில் இடம்பெறக் கூடிய முறைகேடுகளைத் தவிர்க்க இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. இது தொடர்பில் அரசியல் கட்சிகள் மற்றும் புத்தி ஜீவிகளின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த உத்தேசச் சட்ட மூலம் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சரின் ஊடாக அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட உள்ளது.

ஒவ்வொரு தேர்தலின் அடிப் படையிலும் இதற்கான நிதி ஒதுக்கீடுகள் வரையறுக்கப்பட உள்ளது.'' -என்றார்.(எ)

# அரசிடமிருந்து துரிதமாக நாட்டை மீட்பது அவசியம்

*நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் கூறுகிறார்*



கொழும்பு, டிசெ.17

அரசிடம் இருந்து துரிதமாக நாட்டை மீட்க வேண்டும் என்று ஒன்றிணைந்த எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

''தற்போதைய அரசிடம் இருந்து நாட்டை மீட்க வேண்டும். இல்லையேல் எதிர்காலத்தில் நாட்டின் வளங்கள் அனைத்தும் வெளிநாடுகளுக்கு விற்கப்பட்டுவிடும்.

கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் அம்பாந்தோட்டை விமான நிலையங்களை சீனாவுக்கும் வடக்கில் காங்கேசன்துறை துறைமுகம் பலாலி விமான நிலையம் , சாம்பூர் மின்நிலையம் ஆகியவற்றை இந்தியாவுக்கும் திருகோணமலை எரிபொருள் களஞ்சியத்தை அமெரிக்காவுக்கும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக இவற்றைப் பார்த்துக் கொண்டு தான் வருகின்றோம். இப் படியே தொடருமானால் , இதே ஆட்சி தொடர்ந்தும் நடைமுறையில் இருக்குமானால் இலங்கையின் அனைத்துச் சொத்துகளும் வெளிநாடுகளுக்குச் சென்றுவிடும்.

மேலும், இந்த ஆட்சி எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து கொண்டு செல்லுமாயின் பொலிஸ் சேவை, சிறைச்சாலைகள், நீதிமன்றங்கள் தவிர ஏனைய அனைத்தும் தனியார் மயப்படுத்தப்பட்டு விடும்.''-என்றார். (எ)

# ரக்னா லங்காவை கலைப்பதற்கு எதிரான தடை உத்தரவு நீடிப்பு



கொழும்பு, டிசெ.17

பாதுகாப்பு அமைச்சின் கீழ் கடந்த காலங்களில் இயங்கி வந்த ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவனத்தை கலைப்பதற்கு எதிரான தடை உத்தரவு நீதிமன்றத்தால் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 30 ஆம் திகதிவரை அந்தத் தடை உத்தரவை நீடிக்குமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த காலத்தில் நிலவிய பாதுகாப்பு சூழ்நிலையின் கீழ் பொருளாதார கேந்திர நிலையங்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் உள்ளிட்ட முக்கிய இடங்களில் பாதுகாப்புக்காக ஈடுபட்டிருந்த ஆயுதம் ஏந்திய இராணுவத்தினரை அகற்றி நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கை பாது காப்பு தேவையின் நிமித்தம் அத்தகைய இடங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக அந்த நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# நத்தாரை முன்னிட்டு விசேட ரயில் சேவை

நத்தார் பண்டிகையை முன்னிட்டு விசேட ரயில் சேவைகளை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக ரயில் போக்குவரத்து அத்தியட்சகர் விஜய சமரசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

''எதிர்வரும் 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் நீர் கொழும்பு - பாணந்துறை இடையில் இந்த சேவை முன்னெடுக்கப் பட உள்ளது.

அதன்படி அன்றைய இரு தினங்களிலும் காலை 8.05 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து நீர்கொழும்புக்கும், காலை 9.25 மணிக்கு நீர் கொழும்பில் இருந்து பாணந்துறைக்கும் -

பிற்பகல் 2 மணிக்கு பாணந்துறையில் இருந்து நீர்கொழும்புக்கும், பிற்பகல் 4.35 மணிக்கு நீர்கொழும்பில் இருந்து மருதானை வரையிலும் விசேட ரயில் சேவை இடம்பெறவுள்ளது.

இந்த ரயில் சேவைகளுக்கு மேலதிகமாக எதிர்வரும் 22 ஆம் திகதி தொடக்கம் ஜனவரி 3 ஆம் திகதி வரை சில ரயில்களுக்கு மேலதிக பயணிகள் பெட்டிகள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன.''- என்றார். (எ)

# வறட்சியான காலநிலை இருநாள்கள் தொடரும்

கொழும்பு, டிசெ.17

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் வறட்சியான வானிலை எதிர்வரும் இருநாள்களுக்கு தொடரக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்கள் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பல இடங்களில் மழை பெய்யும் வாய்ப்பும் உள்ளது. மேல் சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங் கள் மற்றும் காலி, மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களில் பிற்பகல் 2 மணிக்கு பிறகு மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யலாம்.

இந்தநிலையில் இடியுடன் கூடிய மழை பெய்கின்ற சந்தர்ப்பங்களில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும். மின்னலால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைப்பதற்காக பொதுமக்கள் முன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.(எ)

## நாளை

18.12.2016
ஞாயிற்றுக்கிழமை
திதி : பஞ்சமி முன்னிரவு 11.26 வரை
நட்சத்திரம்: ஆயிலியம் மாலை 8.08
சுபநேரம் : 9.23 – 10.53
இராகுகாலம் : 4.53 – 6.23

# 117 அடுக்கு மாடிகள் கொண்ட 625 மீற்றர் உயரக் கட்டடம்!

கொழும்பு, டிசெ.17
இலங்கையின் உயரமான கட்டடம் என்றால் கொழும்பில் உள்ள 40 மாடியிலான உலக வர்த்தகமையமே நினைவுக்கு வரும்.

இதேபோன்று நான்கு மடங்கு உயரமான கட்டடம் ஒன்று உருவாகவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. நாம் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத மிக உயரமான கட்டடம் ஒன்று இலங்கையில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

2017ஆம் ஆண்டில் நிர்மாணிப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தகவல்களே தற்போது வெளியாகியுள்ளது.

625 மீற்றர் கொண்ட இந்த கட்டடத்தில் 117 மாடிகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இலங்கையின் உயரமான கட்டடம் எனக் கூறப்படும் உலக வர்த்தக மையத்தின் நீளம் 152 மீற்றராகும்.

அதேபோன்று தற்போதுநிர்மாணிக்கப்பட்டு வரும் தாமரைக் கோபுர உயரம் 350 மீற்றராகும். அதனை தவிர கொழும்பில் ஆங்காங்கே நிர்மாணிக்கப்படும் அல்லது நிர்மாணிப்புகளை ஆரம்பித்துள்ள அனைத்து கட்டடங்களுமே 300 மீற்றர் உயரத்துடன் நிறைவடைகின்றன.

இந்த நிலையில் 625 மீற்றர் உயரத்தில் புதிய கட்டடம் அமையவுள்ளது.

அதேபோன்று இந்தக் கட்டடம் உலகின் மிகப் பெரிய நிலப்பரப்பை கொண்ட கட்டடமாகும். 80 ஆயிரம் சதுர அடியாகும்.


கோபுரமாக பார்த்தால் உலகின் அதிக சதுர அடிகளை கொண்ட கட்டடம் இதுவாகும்.

கட்டி முடித்த பின்னர் இலங்கையின் மிகப் பெரிய கட்டடமாக மாறும் என்றும் உலகின் உயரமான கட்டடங்களில் 9 ஆவது இடத்தை பிடித்துக் கொள்ளும் என்றும் கூறப்படுகிறது. முழு உலகுக்கும் தெரியும் வகையில் இலங்கை வானில் ஏறும் இந்த கட்டடம் இலங்கையின் பொருளாதார கேந்திர நிலையமாக மாற்றமடையும்.

முழுமையான கொழும்பு நகரம் போன்று கடலும் அழகாக தெரியும் வகையில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்தக் கட்டடம் 7 நட்சத்திர ஹோட்டல், வீட்டுத்தொகுதிகள் மற்றும் வணிக வளாகங்கள் உட்பட பொருளாதார கேந்திர நிலையத்துக்கு அவசியமான அனைத்து வசதிகளையும் கொண்டிருக்கும்.

வங்கிகள், கல்வி நிறுவனங்கள், மாநாட்டு மண்டபங்கள், பொழுதுபோக்கு இடங்கள் போன்றவைகளுக்காக 50 பகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ள இந்தக் கட்டடத்தின் உள்ளே 3ஆயிரம் கடைகளை கொண்ட இலங்கையின் மிகப் பெரிய வர்த்தக மையமும் நிர்மாணிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

இலங்கையில் நிர்மாணிக்க நடவடிக்கை






## நிதி மோசடி விசாரணையில் நேற்று நாமல் முன்னிலை


கொழும்பு, டிசெ.17
நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நேற்று நிதி மோசடி விசாரணைப் பிரிவில் முன்னிலையாகி யுள்ளார்.

உரிய வாகன அனுமதிப்பத்திரம் இன்றி வாகனங்களைவிற்பனை செய்தவழக்கு தொடர்பாக வாக்கு மூலம் ஒன்றை அளிப்பதற்காகவே நாமல் இவ்வாறு முன்னிலையானார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குமுன்னதாகவும் இந்த விடயம் தொடர்பான விசாரணைகளுக்காக நாமல் அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.. (ஐ)

## எதிர்வரும் இரண்டு மாதங்களில் அரிசியின் விலை 60 ரூபாவாகும்

### அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.17
எதிர்வரும் 2 மாதங்களுக்குள் ஒரு கிலோகிராம் அரிசி 60 ரூபாவுக்கு விற்பனை செய்ய எதிர்பார்க்கப்படுகிறது என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

அரசின் வாழ்க்கைச் செலவுக்குழுகூட்டத்தின் போது சந்தையில் காணப்படும் அரிசி விலை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

இந்த முறை உயர் பருவ காலத்தில் தேவையான மழை பெய்யவில்லை என்பதால் அடுத்தஆண்டு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளது.

அந்த நிலைமையை எதிர்கொள்வதற்கு, இருக்கும் நெற் தொகையைப் பாதுகாக்க வேண்டும். இதனால் வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்ய அரசு தீர்மானித்துள்ளது.

இந்த வகையில் எதிர்வரும் 2 மாதங்களுக்குள் சந்தையில் அரிசியின் விலை குறையும்.- என்றார். (ஐ)

## ஐ.தே.க. கூட்டு அரசு கட்டாயத் திருமணமே!

### லக்ஷ்மன் செனவிரத்ன இப்படி தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.17
நாட்டின் பிரதான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும்வரை தேசிய அரசில் இருந்து வெளியேறப் போவதில்லை என்று இராஜாங்க அமைச்சர் லக்ஷமன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போதே இராஜாங்க அமைச்சர் லக்ஷமன் செனவிரத்ன இந்த கருத்தை தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு-

ஐக்கிய தேசியக் கட்சியுடனான கூட்டு அரசின் உறவு விருப்பமில்லாத கட்டாயத் திருமணம் போன்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை தேசிய அரசில் இருந்து வெளியேறுமாறு கூறுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு எந்தவித அதிகாரமும் இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருக்கும் அதே அதிகாரங்களே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு உள்ளது.

கடந்த தேர்தலில் பிரதான இரண்டு கட்சிகளுக்கும் மக்கள் தனித்து அதிகாரங்களை வழங்கவில்லை.- என்றார். (ஐ)

## இளைஞர் நாடாளுமன்றத்தின் நான்காவது தேர்தல் நாளை

கொழும்பு, டிசெ.17
இளைஞர் நாடாளுமன்ற நான்காவது தேர்தல் நாளை 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாடு முழுவதும் இடம்பெறவுள்ளது.

காலை 7 மணிமுதல் மாலை 4 மணிவரை நாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 661 தேர்தல் மத்திய நிலையங்களில் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது என்று தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தெரிவித்துள்ளது.

தேர்தலுக்காக 916 இளைஞர் யுவதிகள் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர். வாக்களிப்புக்காக 3 லட்சத்து 40 ஆயிரம் வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இளைஞர்நாடாளுமன்றத்தின் 225 ஆசனங்களுக்கு 160 உறுப்பினர்கள் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

பல்கலைக்கழக இளைஞர்கள் யுவதிகள், சட்டக் கல்லூரி மாணவ மாணவிகள், பாடசாலை மாணவத் தலைவர்கள், வேறு இளைஞர் அமைப்பு உறுப்பினர்கள், பல்வேறு திறன்களை கொண்ட வேறு இளைஞர் யுவதிகள் போன்றோர் ஏனைய உறுப்பினர்களாக நியமிக்கப்படுவர் என்று தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தெரிவிக்கின்றது. (ஐ)

### மாங்குளம் பொலிஸார் அதிரடி

## அனுமதிப் பத்திரங்களின்றி மண் அகழ்ந்தோர் சிக்கினர்!

முல்லைத்தீவு, டிசெ.17
முல்லைத்தீவு மாவட்டத்துக்கு உட்பட்ட மாங்குளம் பொலிஸ் பிரிவில் பனிக்கன் குளம் - வடகாடு - விளாத்திகுளம் பகுதியில் மண் அகழ்வு சட்டத்துக்கு முரணான வகையில் மண் அகழ்ந்த குற்றச்சாட்டில் ஐந்து உழவு இயந்திரங்கள், ஒரு டிப்பர் என்பன சிக்கின என்று மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை குறித்த வாகனங்கள் அகப்பட்டன என்று பொலிஸார் தெரி வித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது-

மாங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு ரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இதன் அடிப்படையில் மாங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மாலின்பெரேராவின் உத்தரவுக்கமைய மாங்குளம் பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் உதயகுமார, பொலிஸ் பரிசோதகர் பிரியதர்சன, உப பொலிஸ் பரிசோதகர் அ.சியாஎன், பொலிஸ் பரிசோதகர் லால் தலைமையில் பொலிஸ் உத்தியோகத் தர்களான ராஜபக்ஷ, வசந்த, மில்றோய், ருவான் அடங்கிய குழு நடவடிக்கை மேற்கொண்டது. இதன் போது குறித்த வாகனங்கள் அகப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த வாகனங்களின் சாரதிகள் 6 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-81)




இலவச கல்வியையும், சுகாதாரத்தையும் ஒழிக்கும் அரசின் முயற்சியை தோற்கடிப்போம் என்ற தொனிப் பொருளில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் நேற்று யாழ்ப்பாணத்தில் அரசுக்கு எதிராகத் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டன.

இந்தத் துண்டுப் பிரசுரங்கள் யாழ். பல்கலைக்கழகத்துக்கு அருகிலும் மற்றும் யாழில் பல்வேறுபிரதானஇடங்களிலும்ஒட்டப்பட்டுள்ளன. அதில் மாலபே 'SAITM' திருட்டுக் கல்விக் கடையைக் காக்கும் ரணில் - மைத்திரி அரசுக்கு எதிராக ஒன்றிணைவோம் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. (ஐ-10)

# திருமலை அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் சூடுபிடித்தது கன்னியா நீரூற்று விவகாரம்

## அரச அதிபரைச் சாடினார் மாகாண சபை உறுப்பினர்



திருகோணமலை,டிசெ.17

திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. அங்கு கன்னியா வெந்நீரூற்று தொடர்பான விவகாரம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. அப்போது கிழக்கு மாகாண கூட்டமைப்பு உறுப்பினர் சூடாகக் கேள்விகளைத் தொடுத்தார்.

கன்னியா வெந்நீரூற்று பகுதியை 2017ஆம் ஆண்டு ஜனவரியில் மீண்டும் உப்புவெளி பிரதேச சபைக்கு வழங்குவதாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் கூறியிருந்தார். ஆனால் தற்போது அதற்கு முரணான கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. இந்நிலை தொடருமானால் நல்லிணக்கத்திற்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய வகையில் அப்பகுதியில் இடம்பெறப்போகும் நடவடிக்கைக்களுக்கு அரச அதிபரே பொறுப்புக் கூற வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கன்னியா வெந்நீரூற்று முன்னாள் அரச அதிபர் மேஜர் ஜெனரல் ரஞ்சித் டி சில்வாவினால் எதேச்சதிகாரமாக ஆக்கிரமிக்கப்பட்டது. மேலும் அங்கிருந்த இந்து சின்னங்கள், பதாகைகள் என்பன அகற்றப்பட்டு அங்கு பௌத்த ஆலயம் ஒன்று நிறுவப்பட்டு இராணுவத்தினரால் அங்கு நீராட வருகின்ற பொதுமக்களிடம் நுழைவுச் சீட்டு மூலம் பணம் வசூலிக்கப்படுகிறது.

அவ்வாறு ஓர் அரச அதிபர் மேற்கொண்ட அநீதியான செயற்பாட்டை அதே அதிகாரத்தில் உள்ள இன்னொரு அரச அதிபரால் மாற்ற முடியாமல் உள்ளது. கடந்த 2016 பெப்ரவரி மாதம் இடம்பெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கணக்குகள் பேணுவதில் சிக்கல் உள்ளதால் 2017 முதல் இதனைச் சரி செய்வதாகத் தற்போதைய அரசாங்க அதிபர் வழங்கிய உறுதிமொழியின் அடிப்படையில் எமது மக்களும் நாமும் ஓர் ஆண்டு காலம் பொறுமையாக இருந்தோம். தற்போது மீண்டும் தொல்பொருள் திணைக்களத்தின் அனுமதி கிடைக்கவில்லை எனும் உங்கள் கருத்தை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

### மகாஓயா வெந்நீரூற்று பிரதேச சபையிடமே

மகாஓயாவில் உள்ள வெந்நீரூற்றை அந்தப் பிரதேச சபையே பராமரித்து வருகின்ற போது திருகோணமலையில் நடைபெறும் இந்தச் செயற்பாட்டை எவ்வாறு நாம் நோக்குவது? மாவட்டத்துக்குக் கிடைக்க வேண்டிய வருமானத்தை எல்லாம் வெளியில் விட்டுவிட்டால் மாவட்டம் எப்படி அபிவிருத்தியடையும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் உயரதிகாரிகள் சேர்ந்து எடுத்த இந்த மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்த முடியவில்லை என்றால் இந்த அபிவிருத்திக் குழுவுக்குப் பெறுமதி இல்லையா? - என்று சீற்றத்துடன் கேட்டார் ஜெனார்த்தனன். (இ-ச)

# மட்டக்களப்பு பட்டிருப்பு வலயங்களின் ஆசிரியர் இடமாற்றங்களில் பாரபட்சம்

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு,டிசெ.17

மட்டக்களப்பு பட்டிருப்பு கல்வி வலயங்களின் 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஆசிரிய இடமாற்றங்கள் பாரபட்சமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

-இவ்வாறு மாகாணஇணைப்பாளரும் மட்டக்களப்பு மாவட்ட செயலாளருமாகிய பொ.உதயரூபன் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கையின் சட்ட நியதிக்கு முரணாக, இடமாற்ற சபையின் அனுமதியின்றி மட்டக்களப்பு கல்வி வலயத்தில் ஆசிரியர் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவை யாவும் அரசியல் நிரல்களுக்கு அமைய பொதுச்சேவை ஆணைக்குழுவின் கட்டளைகளை மீறி நடைபெற்றுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் இடமாற்ற சபையின் சட்ட நியதிகளை மீறியுள்ளனர்.

பல ஆசிரியர்கள் இவ்வாறான வெளிப்படைத் தன்மையற்ற ஆசிரியர் இடமாற்றங்களால் மனித உரிமை ஆணைக்குழு மற்றும் மேல் நீதிமன்றங்களில் அடிப்படை உரிமை மீறல் வழக்குகளை தாக்கல் செய்துள்ளனர். இவ்வழக்குகளில் மாகாண கல்விப் பணிப்பாளர், வலய கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இம்முறைகேடான ஆசிரியர் இடமாற்றங்கள் தொடர்பாக மாகாண ஆளுநர், பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோரின் கவனத்திற்கும் கொண்டுவரப்படஉள்ளது.-என்றுள்ளது. (ச)

# கடமைக்கு இடையூறு விளைவித்த இருவர் மீது வழக்குத் தாக்கல்

மட்டக்களப்பு,டிசெ.17

காத்தான்குடி நகரசபைப் பிரிவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் கடமைக்கு இடையூறாக இருந்த ஹோட்டல், பலசரக்குக் கடை ஆகியவற்றின் உரிமையாளர்களுக்கு எதிராக மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

காத்தான்குடி மற்றும் மண்முனைப்பற்று பிரதேசங்களிலுள்ள ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் உணவகங்கள், பலசரக்குக் கடைகள் ஆகியவற்றில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போதே மேற்படி ஹோட்டல் மற்றும் பலசரக்குக் கடை உரிமையாளர்கள் இவர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்திருந்தனர். (ச)

# சிரிய மனிதப் படுகொலைகளுக்கு எதிராக இலங்கை அரசு குரல் கொடுக்க வேண்டும்!

## கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் வலியுறுத்து



உலகளாவிய ரீதியில் இஸ்லாமியர்களை நசுக்குவதற்கு மிக நுணுக்கமாக சதி வலை பின்னப்பட்டுள்ளது. அதற்கான நிகழ்ச்சி நிரலுக்கு அமைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் சிரியாவில் அரங்கேறும் மனிதப் படுகொலைகளுக்கு எதிராக இலங்கை அரசு குரல் கொடுக்க வேண்டும்.

- இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முஸ்லிம் சமூகங்களுக்கு இடையில் பிளவுகளை ஏற்படுத்தி அவர்களை சின்னாபின்னப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்காக முஸ்லிம்கள் சிலர் விலைபோய் இருப்பதுதான் வேதனையான விடயம்.

முஸ்லிம்களை ஒடுக்குவதற்கான செயற்பாடுகள் இலங்கையிலும் இப்போது தீவிரமான கட்டத்தை எட்டியுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் முஸ்லிம் சமூகம் ஒன்றுபட்டு தமக்கு எதிரான அநீதிகளுக்கு குரல் கொடுக்க முன்வர வேண்டும்.

மியன்மாரிலும், சிரியாவிலும் நிகழ்ந்து வரும் மனிதப் பேரவலம் முஸ்லிம் சமூகத்துக்கெதிரான அக்கிரமங்களின் உச்சகட்டமாகும். இலங்கை கடந்த 30 ஆண்டுகளாக யுத்தத்தால் பேரிழப்புக்களை சந்தித்த நாடாகும். இந்த வகையில் மனித உயிர்களின் பெறுமதியை இலங்கை அரசும், மக்களும் அறிந்தே இருக்கின்றார்கள். இந்நிலையில் சிரியாவில் அப்பாவி மக்களைக் கொன்று குவிக்கும் செயற்பாட்டை தடுத்து நிறுத்துவதற்கு இனம், மத மற்றும் மொழி பாராது அனைவரும் ஒன்று திரள வேண்டும்.-என்றார். (ச)

# பெண்ணைத் தாக்கிய நால்வர் கைது

திருகோணமலை,டிசெ.17

கிண்ணியா பிரதேசத்திலுள்ள வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து பெண்ணொருவரைத் தாக்கிய குற்றச்சாட்டின்பேரில் 4 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் தாக்குதலுக்கு உள்ளான பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச)

# நாவிதன்வெளியில் 12 பேருக்கு டெங்கு நோய்

அம்பாறை,டிசெ.17

நாவிதன்வெளி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இவ்வருடத்தின் ஜனவரி மாதம் முதல் இது வரையான காலப்பகுதியில் 12 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று அப்பிரிவு வைத்திய அதிகாரி ஜெ.மதன் நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை முன்னிட்டு அரசாங்கத் திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களை அறிவூட்டும் நடவடிக்கை நடைபெற்றது. இதன்போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ச)

# யானை தாக்கியதில் வயோதிபர் படுகாயம்

அம்பாறை ,டிசெ.17

அம்பாறை பாணமை பிரதேசத்தில் வயல் காவலுக்குச் சென்ற வயோதிபர் ஒருவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு யானை தாக்குதலுக்குள்ளாகி படுகாயமடைந்தார்.

பாணமை முதலாம் பிரிவைச் சேர்ந்த வி.விஜயசிங்க (வயது 57) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார். (ச)

# திருமலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சொகுசு பஸ் முற்றாக எரிந்து நாசம்!

திருகோணமலை,டிசெ.17

திருகோணமலை-கொழும்பு போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் சொகுசு பஸ் ஒன்று நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தீப்பற்றி எரிந்து முற்றாக சேதமடைந்தது.

இந்த பஸ் திருகோணமலை சிவன் கோயிலடியில் வழமை போன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையிலே பின்னிரவு 2 மணியளவில் தீப்பற்றி எரியத்தொடங்கியுள்ளது. நகரசபை தீயணைப்பு வீரர்கள் ஸ்தலத்திற்கு வந்து தீயை அணைக்க முயன்ற போதிலும் அது கைகூடவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பில் திருகோணமலை பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



இதேவேளை கடந்த 2 ஆம் திகதி நள்ளிரவு திருகோணமலை கண்டி வீதியில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த தனியார் பஸ் ஒன்றும் இவ்வாறு தீக்கிரையாகியமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மலேசியாவில் எதிர்ப்பு வெளியிடுவோர் இலங்கைத் தமிழர் அல்லர் என்கிறார் மங்கள

மலேசியா, டிசெ.17

மலேசியாவில் இலங்கைக்கு எதிராகப் போர்க்குற்றச்சாட்டுகளைச் சுமத்தி எதிர்ப்பு வெளியிடுபவர்கள், இலங்கைத் தமிழர்கள் அல்லர் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நேற்று முன்தினம் மலேசியா சென்றுள்ள அவர், கோலாலம்பூரில் கருத்து வெளியிட்ட போதே இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்திய வம்சாவளித் தமிழர்களே இலங்கைக்கு எதிரான போராட்டங்களை நடத்துகின்றனர். புதிய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க செயற்பாடுகளைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் தான் அவர்கள் போராட்டங்களில் ஈடுபடுகின்றனர்.

இலங்கைக்கு எதிராக போராட்டங்களை நடத்தும் புலம்பெயர் தமிழர்கள், இலங்கைக்கு வந்து அங்கு ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பார்க்க வேண்டும்.

போராட்டங்களை ஒழுங்கு செய்துள்ளமைக்காகப் புலம்பெயர் தமிழர்களைக் குற்றம் சாட்டவில்லை. கடும்போக்காளர்களின் குழுவொன்றே இதனைச் செய்கிறது.

புதிய அரசினால் முன்னெடுக்கப்படும், அபிவிருத்தி முயற்சிகளுக்கு இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் அவசியமானது.

அரசின் செயற்பாடுகளைச் சீர்குலைக்கின்ற பல கடும்போக்குவாதக் குழுக்கள் இலங்கையிலும் உள்ளன.



தமிழ், சிங்கள, முஸ்லிம் கடும்போக்குவாதக் குழுக்கள், நாட்டில் செயற்பட்டாலும், தற்போதைய அரசாங்கத்தில் இனவாதத்துக்கு இடமில்லை.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கு அனைத்துலக சமூகத்தின் ஆதரவு உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மூன்று நாள் பயணமாக மலேசியா சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிக்கு எதிராக மலேசியத் தமிழ் அமைப்புகள் போராட்டம் நடத்தின.

இந்நிலையிலேயே மங்கள சமரவீர இவ்வாறு கூறியுள்ளார்.

மலேசிய நேரப்படி நேற்று முன்தினம் பிற்பகல் 2.10 மணியளவில் கோலாலம்பூர் விமான நிலையத்தை சென்றடைந்த ஜனாதிபதி, அந்த நாட்டின் மனிதவள அபிவிருத்தி அமைச்சர் டதோ சிறி றிச்சர்ட் ரியொட் அனக்ஜெம் மற்றும் அதிகாரிகள் வரவேற்றனர். அத்துடன் இலங்கை ஜனாதிபதிக்கு ஆயுதப்படைகளின் அணிவகுப்பு மரியாதையும் அளிக்கப்பட்டது.

நேற்றைய தினம் மலேசியப் பிரதமரைச் சந்தித்த ஜனாதிபதி மைத்திரி, இன்று அங்கிருந்து நாட்டுக்குத் திரும்பத் திட்டமிட்டுள்ளார்.

# இலங்கைக் கடற்படைக்காக கோவாவில் கட்டப்பட்ட இரண்டாவது ஆழ்கடல் ரோந்துக் கப்பல் வெள்ளோட்டம்



கொழும்பு, டிசெ.17

இலங்கைக் கடற்படைக்காக கோவா கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்ட இரண்டாவது ஆழ்கடல் ரோந்துக் கப்பல் நேற்று முன்தினம் வெள்ளோட்டம் விடப்பட்டுள்ளது.

இந்தியாவின் கோவா மாநிலத்தில் உள்ள கோவா கப்பல் கட்டும் தளத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் சித்ராங்கனி வாகீஸ்வரா, இலங்கைக் கடற்படையின் பிரதி தலைமை அதிகாரி றியர் அட்மிரல் நீல் றொசாரியோ ஆகியோர்கலந்து கொண்டனர்.

இலங்கைக் கடற்படைக்காக இரண்டு ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களை கோவா சிப்பிங் யார்ட் நிறுவனம் கட்டி வருகிறது.

முதலாவதாகக் கட்டப்பட்ட ரோந்துக் கப்பல் ஏற்கனவே வெள்ளோட்டம் விடப்பட்டுச் சோதனைகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில், இரண்டாவது கப்பல் நேற்று முன்தினம் வெள்ளோட்டம் விடப்பட்டது.

சோதனைப் பயணங்களின் பின்னர், தேவையான கருவிகள் பொருத்தப்பட்டு, இந்தக் கப்பல்கள் இலங்கைக் கடற்படையிடம் கையளிக்கப்படவுள்ளது.

105.7 மீற்றர் நீளத்தைக் கொண்ட இந்த ஆழ்கடல் ரோந்துக் கப்பலில், உலங்கு வானூர்தியை இறக்கும் தளமும் உள்ளது.

18 அதிகாரிகள் 100 கடற்படையினர் பணியாற்றும் வசதிகள் உள்ள இந்தக் கப்பல் 4 ஆயிரத்து 500 கடல்மைல் தொலைவுவரை சென்று கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளும் ஆற்றலையும் கொண்டுள்ளது.

# இந்தியாவுடன் திறந்த வான் உடன்பாட்டில் இலங்கை அரசாங்கம் கையெழுத்திட்டது

கொழும்பு, டிசெ.17

இந்தியாவுடன் திறந்த வான் உடன்பாட்டில் இலங்கை அரசாங்கம் கையெழுத்திட்டுள்ளது.

நாசோவில் இடம்பெற்ற சர்வதேச சிவில் விமானப் பேச்சுக்களில் இந்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய, இந்தியாவின் ஆறு மெட்ரோ விமான நிலையங்களுக்கு இலங்கை கட்டுப்பாடற்ற விமானப் பயணங்களை மேற்கொள்ள முடியும்.

சென்னை, மும்பை, டில்லி, கொல்கத்தா, ஹைதராபாத், பெங்களூர் ஆகிய விமான நிலையங்களுக்கே கட்டுப்பாடற்ற விமானப் பயணங்களை மேற்கொள்ள இந்த உடன்பாடு இடமளிக்கிறது.

106 நாடுகள் பங்கேற்ற இந்தக் கருத்தரங்கில், 17 நாடுகளுடன் திறந்த வான் உடன்பாட்டை மேற்கொள்வது குறித்து இந்தியா பேச்சுக்களை நடத்தியிருந்தது. இலங்கை உள்ளிட்ட 12 நாடுகளுடன் இதுகுறித்த இணக்கம் காணப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது .

# ஜாலிய விக்ரமசூரியவின் விளக்கமறியல் நீடிப்பு!

கொழும்பு, டிசெ.17

அமெரிக்காவுக்கான முன்னாள் இலங்கைத்தூதர் ஜாலிய விக்ரமசூரியவை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இவர் நிதிமோசடி விசாரணை பிரிவினால் கடந்த மாதம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

2005 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரையில் லொஸ் ஏஞ்சல்ஸுக்கான துணைத் தூதராக இருந்த அவர், பின்னர் அமெரிக்காவுக்கான தூதுவராகப் பதவி உயர்த்தப்பட்டிருந்தார்.

இந்த காலப்பகுதியில், தூதரக காரியாலய சீரமைப்புக்கான ஒப்பந்த வழங்கலுக்காக அவர் 2 இலட்சத்து 45 ஆயிரம் டொலர்களை இலஞ்சமாகப் பெற்றுக் கொண்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# அம்பாந்தோட்டையில் கடற்படை, விமானப்படைத் தளங்கள்!

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.17

அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு அருகே நிரந்தர கடற்படைத் தளம் ஒன்றை அமைக்கவும், மத்தல விமான நிலையம் அருகே நிரந்த விமானப்படைத்தளம் ஒன்றை அமைக்கவும் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்கும் அரசாங்கத்தின் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, துறைமுகப் பணியாளர்கள் போராட்டம் நடத்தி வந்தனர்.

இதன்போது, துறைமுக சொத்துக்களுக்குச் சேதங்கள் ஏற்படுத்தப்பட்டதுடன், வெளிநாட்டுக் கப்பல்களும்



தடுத்து வைக்கப்பட்டன.

இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறாமல் பாதுகாப்பு அளிக்கும் வகையில், அம்பாந்தோட்டைத் துறைமுகம் அருகில் நிரந்தர கடற்படைத் தளத்தை அமைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

மத்தள விமான நிலையத்தையும், சீன நிறுவனம் ஒன்றுக்கு வழங்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எனவே, அங்கும் இதுபோன்ற பிரச்சினைகள் எழுவதற்கு வாய்ப்புகள் இருப்பதால், விமான நிலையம் அருகே விமானப்படைத்தளம் ஒன்றை அமைக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் கடற்படைத் தளபதியுடனான சந்திப்பின் பின்னர், ஊடகவியலாளர்களிடம் பிரதமர் ரணில் இதனைத் தெரிவித்துள்ளார்.

# திஸ்ஸவின் மனு நிராகரிப்பு!

கொழும்பு, டிசெ.17

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்கவினால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவினை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

வெளிநாடு செல்வதற்கு அனுமதி கோரி திஸ்ஸ அத்தநாயக்கவினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவே இவ்வாறு நிராகரிக்கப்பட்டுள்ளது..

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது போலியான ஆவணங்களை வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டில் திஸ்ஸ அத்தநாயக்க கைது செய்யப்பட்டிருந்த நிலையில், தற்போது அவர் பிணையில் விடுதலையாகியுள்ளார்.

# இந்திய- வவுனியா கலைஞர்கள் சந்தித்து கலந்துரையாடல்

வவுனியா,டிசெ.17

இந்திய கலைஞர்களுக்கும் வவுனியா மாவட்ட கலைஞர்களுக்கும் இடையில் வவுனியாவில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இலங்கைக்குவருகை தந்துள்ள இந்திய கலைஞர்கள் வடக்கு நோக்கிய பயணத்தின் ஒரு கட்டமாக வவுனியாவுக்கு வருகை தந்திருந்தனர்.



இதன்போது வவுனியா மாவட்ட கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் அனுசரணையில்வவுனியாசுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் கலைஞர்கள் சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன்தலைமையில் இடம்பெற்ற இச் சந்திப்பில் இந்தியாவைச் சேர்ந்த இஸ்லாமிய கலைஞர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர். இதன்போது இலங்கைக்கும் இந்தியாவுக்குமான கலை ரீதியான தொடர்புகள் உட்பட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டிருந்தன.

இந்தநிகழ்வில்வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், கொழும்பு மாநகரசபையின் முன்னாள் உறுப் பினர் பாஸ்கராவும் கலந்து கொண்டிருந்தனர். (இ-100)

## மாங்குளத்தில் அனுமதிப்பத்திரமின்றி மாடுகளைக் கடத்திய இருவர் கைது

முல்லைத்தீவு டிசெ.17

மாங்குளம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட நீதிபுரம் பகுதியில், அனுமதிப் பத்திரமின்றி மாடுகளை வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் இடம்பெற்றது.

அனுமதியின்றி வாகனத்தில் மாடுகள் கொண்டு செல்லப்படுகின்றன என்று மாங்குளம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், நடவடிக்கையில் இறங்கிய பொலிஸார் மேற்படி இருவரையும் கைது செய்தனர். இவர்கள் கொண்டு சென்ற இரண்டு பசு மாடுகளும் மீட்கப் பட்டன. வாகனமும் பொலிஸாரால் கைப் பற்றப்பட்டது. (ம-81)

## வவுனியா கலாசார விழா இன்றும் நாளையும்

வவுனியா பிரதேச செயலகத்தின் கலாசார விழா இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள்திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வின் முதலாம் நாள் நிகழ்வான ஆய் வரங்கும் இயலரங்கும் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்குபிரதேசசெயலக கலாசார மண்டபத்தில் மொழியரசி செல்வி கலா குமரப்பா அரங்கில் இடம் பெறவுள்ளது.

கலாநிதி தமிழ்மணி அகளங்கன்தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் தி. திரேஸ்குமார் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

இதன்போது ஆய்வரங்குகளை வவுனியா தொல்லியல் வரலாறுகள் எனும் தலைப்பில் தொல்லியல் ஆய்வாளர் அருணா செல்லத்துரையும் வவுனியா பிரதேச கிராமிய கலைகள் எனும் தலைப்பில் நா. தியாகராசாவும் வவுனியா பிரதேசத்தின் நாட்டுக் கூத்தும் நாட்டாரிசையும் எனும் தலைப்பில் கலாபூஷணம் சி. தமயந்தி (தமிழ்கவி) யும் நிகழ்த்தவுள்ளனர். வவுனியா பிரதேச ஊர்ப்பெயராய்வை ஞா. ஜெகநாதனும் வவுனியா பிரதேசத்தின் பண்பாட்டு வழக்காறுகள்எனும்தலைப்பில் சு. ஜெயச்சந்திரனும் ஆய்வுரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

இதனையடுத்து சுழலும் சொற்போரில் தமிழ் மாமன்றத்தின் பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர். வவுனியா கலைத் தொடர்பு மையம் கவியரங்கை நடத்தவுள்ளது.

வவுனியா தமிழ்ச் சங்கத்தின் இலங்கை வேந்தனின் புகழ் கூறுவதில் விஞ்சி நிற்பது இராமாயணமே, இல்லை திருமுறைகளே என்ற தலைப்பில் பட்டிமன்றமும் இடம் பெறவுள்ளது. நாளை இரண்டாம் நாள் நிகழ்வுகள் கலை வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் சித்த ஆயுள்வேத வைத்தியர் செல்லையா பத்மநாதன் அரங்கில் மாலை 2 மணிக்கு நடைபெறவுள்ளன.

வவுனியா மாவட்ட அரச அதிபர் எம்.பி. ஆர். புஸ்பகுமார முன்னிலையில் வவுனியா பிர தேச செயலாளர் கா. உதய ராசா தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் ரிசாத் பதியுதீன் கலந்து கொள்ளவுள்ளார். வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் முதன்மை விருந்தி னர்களாகவும் வட மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் விசேட விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

இதன்போது வரவேற்பு நடனத்தை நிருத்திய ஸ்ருதி நாட்டிய கலாலய மாணவர்கள் வழங்கவுள்ளனர். வேழம்படுத்த வீராங்கனை எனும் முல்லை மோடி நாட்டுக் கூத்தை சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவிகள் நடத்தவுள்ளனர். (ஜ-100)

### முன்னாள் போராளிகள் அடுத்தடுத்து மரணம்

# வலுவடைந்து வருகிறது விஷ ஊசி விவகாரம்

முல்லைத்தீவு, டிசெ.17

புனர்வாழ்வு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு, விஷ ஊசி ஏற்றியிருக்கின்றார்கள் என்ற சந்தேகம் தொடர்ந்தும் வலுப் பெற்று வருகிறது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா அச்சம் வெளியிட்டுள்ளார்.

புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் சமூகத்துடன் இணைக்கப்பட்ட நிலையில், திடீர் காய்ச்சல் காரணமாக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்த முன்னாள்போராளியான முல்லைத்தீவு - வற்றாப்பளைபகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இராசதுரை திக்சனின் இறுதிக்கிரியையில் கலந்துகொண்டு அஞ்சலி உரை நிகழ்த்தியபோதே நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா இவ்வாறு தெரிவித்துள்ளார்.



முல்லைத்தீவு - வற்றாப்பளை பகுதியைச் சேர்ந்த முன்னாள் போராளியான 26 வயதுடைய இராசதுரை திக்சனின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகஅறிவிக்கப்பட்டுள்ள சூழ் நிலையிலேயே தமிழர் பகுதிகளில் வாழும் தாய்மாரின் நெஞ்சில் யுத்தம் கொளுந்துவிட்டு எரிகிறது. தமிழ் மக்களது விடுதலைக்காக ஆயுதம் ஏந்தி போராடிய முன்னாள் போராளிகள் இன்று அங்கவீனர்களாக ஆக்கப்பட்டுள்ளதுடன் சமூகத்தால் கொச்சைப்படுத்தப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலை மாற்றப்படவேண்டும். முன்னாள் போராளிகளும் சமூகத்தில் சாதாரண மனிதர்களாக வாழக்கூடிய சூழல் எற்படுத்தப்படவேண்டும். -என்றார்.

போரின் இறுதியில் இராணுவத்தினரிடம் சரணடைந்த நிலையில் புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்து விடுதலை செய்யப்பட்ட முல்லைத்தீவு - வற்றாப்பளை பகுதியைச் சேர்ந்த முன்னாள் போராளியான 26 வயதுடைய இராசதுரை திக்சன் கடந்த 12 ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

சுகவீனம் காரணமாக திருகோணமலை - குச்சவெளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் உயிரிழந்திருக்கின்றார்.

2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது இராணுவத்திடம் சரணடைந்த இவர், வெலிக்கந்தை - திருகோணமடு புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இதற்கமைய இரண்டரை வருடங்கள் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு, புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் 2012 ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்டார்.

அவரதுகுடும்பத்துடன் இணைந்து வாழ்ந்து வந்த நிலையில் நிரந்தர தொழில் இன்றி நாளாந்தக் கூலித் தொழிலில் ஈடுபட்டார். இந்த நிலையில் திடீரென சுகவீனமுற்ற நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை கிளிநொச்சி - முரசுமோட்டை பகுதியில் வசித்து வந்த முன்னாள் போராளி ஒருவரும் கடந்த 5 ஆம் திகதி திங்கட்கிழமை திடீரென உயிரிழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ-81)

## பெரியகுளம்- இரட்டைப்பனையில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

கிளிநொச்சி,டிசெ.17

பெரியகுளம் - இரட்டைப்பனைப் பகுதியில் இயங்கிவந்த கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று நேற்று முன்தினம் பிற்பகல் முற்றுகையிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்ன தலைமையில் விசேட குழுவால்இந்தநிலையம் முற்றுகைசெய்யப்பட்டது.



இந்தக் கசிப்பு நிலையம் தொடர்பில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ்வெலிகன்னவின் விசேட குழுவினருக்குக் கிடைத்த ரகசியத் தகவலைஅடுத்து குழுவினர் அந்தப் பகுதிக்குச்சென்று சுற்றிவளைத்துள்ளனர் என்றுதெரிவிக்கப்பட்டது.

இதன் போது, சுமார் 5ஆயிரத்து 555 லீற்றர் கசிப்பு, ஆறு பரல்களில் இருந்த 674 ஆயிரத்து 75 லீற்றர் கோடா மற்றும் மது உற்பத்தி செய்வதற்கான உபகரணங்கள் என்பன புளியம்பொக்கணை ,பெரியகுளம் இரட்டைப்பனைப் பகுதியில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. இதனுடன் தொடர்பு டைய இரு சந்தேக நபர் களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

## 'ஒளிரும் வாழ்வு' அலுவலகம் திறப்பு

முல்லைத்தீவு டிசெ:17

முல்லைத்தீவு உடையார் கட்டு கிராமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான 'ஒளிரும் வாழ்வும்' அலுவலகத் திறப்பு விழாவும் பன்னாட்டு வலுவிழந்தோர் தின விழாவும் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (இ)

# 150 கலைஞர்கள் பங்கு பற்றிய பெரும் விழா: பாரிஸில் சிறப்புற நடந்த உலகத் தமிழ் நாடக விழா

■ பிரான்ஸில் இருந்து எஸ்.கே.காசிலிங்கம்

தமிழ் நாடகத்துறை வரலாற்றில் பாரிஸில் இடம்பெற்ற உலகத் தமிழ் நாடக விழா சரித்திரம் படைத்துள்ளது. உலகம் எங்கும் பரந்து வாழும் இலங்கை நாடகக் கலைஞர்கள் பாரிஸில் இடம்பெற்ற உலகத் தமிழ் நாடக விழாவை மிகச் சிறப்பாக நடத்தி முடித்துள்ளதை நாடகக் கலைஞரும் தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவருமான கலாநிதி நாசர் வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

தமிழ் நாட்டில் கூட இப்படியானதொரு நாடக விழா நடத்தப்பட்டிருக்கவில்லை என்று குறிப்பிட்ட தென்னிந்திய நடிகர் நாசர், இலங்கைத் தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் தங்களது கலை, கலாசார விழுமியங்களைப் பேணிப் பாதுகாத்து வருகின்றனர் என்பதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன் என்றும் அவர் கூறினார்.

இரண்டு நாள்கள் நடைபெற்ற உலகத் தமிழ் நாடக விழாவில் ஆஸ்திரேலியா, கனடா, ஜேர்மனி, சுவிஸ், லண்டன், நோர்வே, டென்மார்க், பிரான்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 150 இற்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கு பற்றினர்.

பிரான்ஸிலிருந்து வெளிவரும் 'உடல்' சஞ்சிகையினரின் ஆதரவில் நடைபெற்ற இவ் விழாவுக்கு பிரான்ஸ் ஆர்ஜன்தை தமிழ்ச் சங்கம் அனுசரணை வழங்கியிருந்தது. இளைய பத்மநாதன் எழுதியுள்ள 'பத்தண்ணா' என்ற நூலை வெளியிட்டு வைத்து பத்தண்ணா கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய நாசர், எண்பதுகளிலிருந்து பத்தண்ணாவின் திறமைகள் பற்றித் தாம் அறிந்து வைத்திருந்ததாகவும் அக்காலத்தில் சென்னையில் இடம்பெற்ற பத்தண்ணாவின் நாடகங்களை பார்த்திருப்பதாகவும் குறிப்பிட்டார். பத்தண்ணா நூலை நாசர் வெளியிட்டு வைக்க, மூத்த பத்திரிகையாளர் எஸ்.கே.காசிலிங்கம் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். நாடக ஆசிரியர் தாஸீசியஸ், பேராசிரியர் அரசு ஆகியோர் பத்தண்ணாவின் சிறப்புகள் பற்றி பேசினர்.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் பேணப்படவேண்டும் என்ற நோக்கத் துடன்







பங்கு கொண்டனர். பிரதம விருந்தினராக தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் நாசரும் சிறப்பு விருந்தினராக பாரிஸ் புறநகர்ப் பகுதியான ஆஜன்தை நகர மேஜர் ஜோர்ச் மோட்டனும் கலந்து கொண்டனர். கௌரவ விருந்தினராக லண்டனிலிருந்து நாடக ஆசிரியர் தாஸீசியஸ் பங்கு கொண்டார்.

ஆஸ்திரேலியாவிலிருந்து 'அண்ணாவியார் பத்தண்ணா' என்று அறியப்படும் இளைய பத்மநாதன் குழுவினர், கனடாவிலிருந்து பி.ஏ.ஜெயகரன், லண்டனில் இருந்து கே.பாலேந்திரா ஆனந்தராணி குழுவினர், ஜேர்மனி பிராங்போர்ட் நகரிலிருந்து தியான் குழுவினர், ஜேர்மனி ராதா நாட்டியப் பள்ளியின் நிர்வாகி ராதா சர்மா, சுவிஸில் இருந்து அன்ரன் பொன்ராசா குழுவினர் மற்றும் 'அடம்பன்' நாடகப் புகழ் சிறி குழுவினர், நோர்வேயிலிருந்து 'நர்த்தனா காவ்யா' பரத நாட்டிய குழுவினர் என்று 150 இற்கும் மேற்பட்ட கலைஞர்கள் இதில்

இலங்கையில் 9 மாவட்டங்களிலும் கலை நிகழ்ச்சிகளை இலங்கை அரசு நடத்தி வரும் இவ் வேளையில், வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களும் தங்களது பாரம்பரிய நாடக வடிவங்களைப் பிற நாட்டு மேடையில் பிரபல்யமடையச் செய்வதிலும் அடுத்த இளம் தமிழ் சந்ததியினருக்கு எமது நாடக வடிவங்களைப் புரிய வைக்கும் முகமாகவும் ஏற்பாடு செய் யப்பட்ட உலகத் தமிழ் நாடக விழா பெருமளவில் வெற்றியளித்திருப்பதும் பாராட்டுக்குரியது.

இரண்டாவது உலகத் தமிழ் நாடக விழாவை லண்டனிலும் மூன்றாவது விழாவை கடனாவிலும் நடத்தத் திட்டமிட்டிருப்பதாக இவ் விழாவின் ஒருங்கிணைப்பாளரான 'உடல்' சஞ்சிகையின் ஆசிரியர் என்.அரியநாயகம் தெரிவித்துள்ளார். இவரது தனிமுயற்சியில் இவ்விழா நடந்தேறி இருப்பது குறிப்பிடத்தக்கது. இவரது இப்பணியை மேடையில் பேசிய அத்தனை பேரும் பாராட்டினார்.

## பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நாடு கடந்த அரசின் பிரதிநிதிகள் சந்திப்பு







ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 30/1 தீர்மானம் தொடர்பாகவும் ஈழத்தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வு தொடர்பிலும் காத்திரமான கலந்துரையாடல்களை பிரிட்டன் நாடாளுமன்றப் பிரதிநிதிகளுடன் Siobhain McDonagh கடந்த 12 ஆம் திகதியும் Cllrlinda Kirby கடந்த 10 ஆம் திகதியும் நடத்தினர்.

இலங்கையில் மாறி மாறி வரும் ஆட்சியாளர்களின் கீழ் தமிழ் மக்கள் படுகொலைகளை எதிர்நோக்கிய வண்ணமே வருகின்றனர். அரச பயங்கரவாதம் தமிழர்களை அடக்கி ஆள்வதற்கு படுகொலைகள் மூலம் தொடர்ந்து முயற்சித்த வண்ணமே உள்ளன. ஆயினும் இனிமேலும் தமிழர்கள் மீதான படுகொலைகளை அனுமதிக்க முடியாது என்று வலியுறுத்தினர். இந்த சந்திப்பில் நாடு கடந்த அரசுப் பிரதிநிதிகளான சொக்கலிங்கம், யோகி , விமலாகரன், தேவா, கார்த்திக், சிவதீபன், பகி மற்றும் பலர் கலந்து கொண்டனர். (ஐ)







சர்வதேச மனித உரிமை நாளை முன்னிட்டு ஜேர்மன் தலைநகரத்தில் நடைபெற்ற உலக சமாதானத்துக்கான மக்கள் ஒன்றுகூடலில் நூற்றுக்கணக்கான பல்லின மக்கள் கலந்துகொண்டனர். இந்த ஒன்றுகூடலில் இன்றைய நாள்களில் சிரிய மக்கள் எதிர்கொள்ளும் அவலநிலையை முதன்மையாகக் கொண்டு சர்வமத பிரதிநிதிகள் தமது உரைகளை நிகழ்த்தினார்கள். அத்தோடு உலக சமாதானத்தை வேண்டி ஒன்றுகூடலில் கலந்துகொண்ட மக்கள் சுடர்வணக்கம் செலுத்தினார்கள்.


தமிழின அழிப்பை எடுத்துரைக்கும் வகையில் ஜேர்மன் ஈழத்தமிழர் மக்கள் அவை மற்றும் ஜேர்மன் தமிழ் இளையோர் அமைப்புச் சார்பாக அதன் பேர்லின் மாநிலத்துக்கான ஒருங்கிணைப்பாளர்கள் கலந்துகொண்டனர். (ஐ)



# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?" 33

பொன்.வேணு கிருஷ்ணா

2015ஆம் ஆண்டில், தென் சீனக் கடல் பகுதிகளில் அமெரிக்க கப்பல்கள் மற்றும் விமானங்கள் 700க்கும் மேற்பட்ட ரோந்துகளை செயல்படுத்தியது "வெளிப்படையான அதிகரிப்பே" என்று அறிக்கை குறிப்பிடுகிறது. இது "சீனாவின் தேசிய பாதுகாப்பிற்கான அச்சுறுத்தல் மட்டுமல்லாது, சீனாவிற்கு முக்கியமான கடல்சார் உரிமைகள் மற்றும் நலன்களை சேதப்படுத்தியது மற்றும் சீன அமெரிக்க மூலோபாய பரஸ்பர நம்பிக்கையினை குறைத்து மதிப்பிட்டது. அத்தோடு கடல் மற்றும் வான்வழியாக தற்செயலான மோதல்களுக்கு வழிவகுக்கும் சாத்தியப்பாட்டிற்கும் இட்டுச்சென்



றது."

### ஆசியாவில் அமெரிக்காவின் இராணுவ கூட்டுக்கள் மற்றும் பங்காளிகள்

ஆசியாவில் அமெரிக்காவின் இராணுவ கூட்டுக்கள் மற்றும் பங்காளிகள் உடனான அதன் விரிவடைந்துவரும் கட்டியெழுப்புதல்கள் குறித்தும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. ஜப்பானில் ஒரு உயர்தர விமானம் தாங்கி கப்பலை நிறுத்திவைப்பது; தென் கொரியாவில் THAAD ஏவுகணை எதிர்ப்பு அமைப்பினை ஈடுபடுத்துவது; பிலிப்பைன்ஸ் உடன் ஒரு விரிவான தள ஏற்பாட்டை வடிவமைப்பது; அமெரிக்க கடற்படையினர், விமானம் மற்றும் போர்க்கப்பல்கள் ஆஸ்திரேலிய தளங்களை அணுகுவது சிங்கப்பூர் கடற்படை மற்றும் விமான தளங்களை அதிகளவு பயன்படுத்துவது; வியட்நாம், மலேசியா மற்றும் தாய்லாந்து ஆகியவற்றுடன் பரந்த ராணுவ உறவுகளை மேம்படுத்துவது ஆகியவற்றை இது உள்ளடக்கியது.

தென் சீனக் கடல் பகுதிகளில் அமெரிக்க இராணுவ நடவடிக்கைகளின் நோக்கம் என்ன என்பதுபற்றி சீனாவுக்கு சந்தேகம் ஏதும் இல்லை. தடையற்ற "கப்பல் போக்குவரத்து சுதந்திரத்துடன்" வாஷிங்டனின் நோக்கமான "கடல்வழி ராணுவ தகைமையை முற்றுமுழுதான பலத்துடன் தொடரவும், இந்த பிராந்தியத்தில் ஆட்சி அதிகாரத்துவ ஆதிக்கம் செலுத்தவும், அதன் கூட்டணி மற்றும் கூட்டாண்மை அமைப்புகளை ஒருங்கிணைப்பது..." என்பதையும் இந்த அறிக்கை விவரித்தது.

### சீன ஆட்சியின் இராணுவ பிரதிபலிப்பு என்ன?

NISCSS அறிக்கை, வெளிப்படையாகவே சீனாவின் மூலோபாய நலன்களின் நிலைப்பாட்டில் இருந்து எழுதப்பட்டது. ஆசியாவில் அமெரிக்க கட்டியெழுப்புதல்களுக்கு, கடந்த ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக பீஜிங் தன்னால் இயன்றவரை அதன் தென் சீனக் கடல் தீவுகளில், எதிர்கால இராணுவ நோக்கங்களுக்கு பயன்படுகின்ற வசதிகளை ஸ்தாபித்தது உட்பட, அதன் சொந்த விரிவாக்கத்தை முடுக்கிவிடுவதன் மூலம் விடையிறுத்து வந்தது. அணுஆயுத சக்திகளுக்கு இடையிலான போர் அபாயத்தை மட்டும் எடுத்துக்காட்டும் ஒரு மேல் செல்வந்த அடுக்கின் நியாயாதிக்க குழுவின் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தும் விதமாகவே சீன ஆட்சியின் இராணுவ பிரதிபலிப்பு உள்ளது.


### சீனாவின் இராணுவ நவீனமயமாக்கலுக்கு ஈடாக அமெரிக்க இராணுவ பிரசன்னம்

எவ்வாறாயினும், இந்த NISCSS அறிக்கை, ஆசியா - பசிபிக் பகுதியில் அமெரிக்க இராணுவ விரிவாக்கத்தின் அளவினையே குறிப்பிட்டு காட்டுகிறது. சிங்கப்பூர் சார்ந்த, பிரிட்டிஷ் மூலோபாய ஆய்வாளர் அலெக்ஸ் நெயில், Financial Time இல்" அமெரிக்கா, சீனாவை ஒட்டிய பகுதிகள் முழுமையாக, அதன் கண்காணிப்பு விமானங்களின் தன்மையையும் மற்றும் பலத்தினையும் அதிகரித்துள்ளது என்றும், மேலும் சீனாவின் இராணுவ நவீனமயமாக்கலுக்கு ஈடாக இருந்து வருகிறது என்றே நான் கருதுகிறேன்" என்று கூறினார்.

சீனா, அமெரிக்காவுக்கு "ஈடான" நடவடிக்கைகளை எடுத்தால், மற்றும் அமெரிக்காவின் கிழக்கு மற்றும் மேற்கு கடலோரப்பகுதிகள் ஊடாக, அதே போல் ஹவாய் சுற்றிலும், நூற்றுக்கணக்கான இராணுவ கண்காணிப்பு விமானங்கள் மூலம் இராணுவ உளவும் நடத்தினால் என்ன நடக்கும் என்பதை நெயில் நிச்சயமாக கருத்தில்கொள்ளவில்லை. வினா எழுப்புவது என்பது அதற்கு விடையிறுக்கவும் வேண்டும் என்பதாகும்: அதாவது, இதற்கான பதில் அமெரிக்க அரசியல், இராணுவம் மற்றும் ஊடக ஸ்தாபனங்களில் வெடிப்பு தன்மையுடனான எதிர்விளைவாகவே இருக்கும்.

### ட்ரம்ப் சீனாவுடனான ஒரு வர்த்தக போர் பற்றி முன்னறிவிப்பு செய்துவிட்டார்

அமெரிக்க ஜனாதிபதியாக தீவிர வலதுசாரி ட்ரம்ப் பதவியிருத்தப்பட்டமை ஆசிய பசிபிக் பகுதியில் போர் அபாயத்தை மட்டுமே அதிகரிக்கும். ட்ரம்ப், "அமெரிக்காவை மீண்டும் சிறப்பானதாக்குவோம்" என்ற அவரது தேசியவாத திட்டநிரலின் ஓர் அங்கமாக, ஏற்கனவே சீனாவுடனான ஒரு வர்த்தக போர் பற்றி முன்னறிவிப்பு செய்துவிட்டார். இருப்பினும், அதன் வரலாற்று ரீதியான வீழ்ச்சியில், அமெரிக்க ஏகாதிபத்தியம் அதன் உலகளாவிய் மேலாதிக்கத்தை இன்னும் முன்னெடுப்பதற்கு ஏற்ற பொருளாதார



செல்வாக்கை நீண்டகாலம் தக்கவைக்க இயலாத நிலையில், இராணுவ அச்சுறுத்தல்கள், ஆத்திரமூட்டல்கள் மற்றும் தனது நலன்களை நிலைநாட்ட போரினை நாடுவது இவற்றையே அதிகரித்த அளவில் கையிலெடுத்து வருகின்றது.

சீன ஆளும் வட்டத்திற்குள் காணும் அச்சத்தின் பிரதிபலிப்பாக, கடந்த வெள்ளிக்கிழமை((09.12.2016) NISCSS செயலாளர் வூ பின்வருமாறு அறிவித்தார்: "கிழக்கு மற்றும் தென் சீனக் கடல் பகுதியின் பதற்றங்களினால் ஆசிய-பசிபிக் இல் ஒரு புதிய ஆயுதப் போட்டி உருவாகும் என்பது பற்றியே நான் மிகவும் கவலை கொண்டுள்ளேன்." ஆசிய-பசிபிக் இல் ஏற்கனவே ஓர் அதிகரித்துவரும் ஆயுதப் போட்டி நடந்துகொண்டே இருப்பது மோதலுக்கும், போருக்குமான ஒரு முன்னோடியே, என்பதை வூ நன்கு அறிவார் என்பதில் சந்தேகம் இல்லை.



### தாய்வான் உடனான ட்ரம்பின் தொலைபேசி உரையாடல், சீனாவுடன் அமெரிக்கா பேரம் பேசுவதற்கு களம் அமைத்தலாகுமா?

ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் டொனால்ட் ட்ரம்ப் தாய்வான் ஜனாதிபதி சாய் இங்-வென்னிடம் (Tsai Ing-wen) இருந்து கடந்த இரு வாரங்களுக்கு முன்பு ஒரு தொலைபேசி அழைப்பை ஏற்றுக் கொண்டதன் மூலம், தசாப்தகால இராஜாங்க நடைமுறையை தலைகீழாக்குவதற்கு, அவர் அமெரிக்க ஜனாதிபதிப் பதவியை ஏற்கும் வரை கூட காத்திருக்கவில்லை.

அந்த உரையாடல் 1979 க்கு பின்னர் அவ்விரு நாட்டு தலைவர்களுக்கு இடையிலான முதல் கலந்துரையாடலாகும். சீனா முழுவதற்கும் ஒரே சட்டபூர்வமான அரசாங்கமாக பீஜிங்கை மட்டுமே அங்கீகரிக்கும் அமெரிக்காவின் "ஒரே சீனா" (One China) கொள்கையின் பாகமாக தாய்வான் உடனான இராஜாங்க உறவுகளை 1979இல் அமெரிக்கா நிறுத்தியது.

### சீனாவுடன் ஒரு கடுமையான பாதையைத் திறப்பதற்கு ட்ரம்பை வலியுறுத்தும் கடுமையான ஆலோசகர்களின் கண்ணோட்டம்

அந்த அழைப்பை ஏற்றுக் கொள்வதென்ற ட்ரம்பின் தீர்மானம் தவறானது அல்லது மடத்தனமானது என்ற ஏனைய ஊடக விமர்சனங்களை பின்னர் வெளியான வாஷிங்டன் போஸ்ட் கட்டுரை ஒன்று மறுத்துரைக்கிறது. அதற்குப் பதிலாக, அது, "தாய்வானுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கான ஒரு புதிய மூலோபாயம் குறித்து ட்ரம்ப் ஆலோசகர்களது பல மாதகால சத்தமில்லா தயாரிப்புகள் மற்றும் கலந்துரையாடல்களின் விளைவாகும்," மேலும் "சீனாவுடன் ஒரு கடுமையான பாதையைத் திறப்பதற்கு ட்ரம்பை வலியுறுத்தும் கடுமையான ஆலோசகர்களின் கண்ணோட்டத்தை" அது பிரதிபலித்தது.

அவரது தேர்தல் வெற்றிக்காக ட்ரம்பை வாழ்த்துவதற்காக என்று பெயரளவிற்கு கூறப்படும் சாய் இன் தொலைபேசி அழைப்பை ஏற்பதென்ற முடிவு, இராஜாங்க ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் மற்றும் இராணுவ ரீதியிலும் சீனாவுடனான ஓர் ஆக்ரோஷமான மோதலுக்கு களம் அமைக்க நோக்கம் கொண்ட ஒரு வேண்டுமென்றே திட்டமிடப்பட்ட மற்றும் கணக்கிட்ட ஓர் ஆத்திரமூட்டலாகும் என்கின்றனர் சில விமர்சகர்கள்.

### அது வெறுமனே ஒரு தொலைபேசி அழைப்பு சம்பந்தப்பட்டதல்ல அதைவிட கூடுதலானது

அத்தொலைபேசி உரையாடலுக்குப் பின்னர் ட்ரம்ப் பின்வருமாறு ட்வீட்



செய்ததன் மூலமாக அது வெறுமனே ஒரு தொலைபேசி அழைப்பு சம்பந்தப்பட்டதல்ல அதைவிட கூடுதலானது சம்பந்தப்பட்டிருப்பதை தெளிவுபடுத்தினார்: "(நமது நிறுவனங்கள் போட்டியிடுவதைக் கடினமாக்கும் விதத்தில்) அவர்களது செலாவணியை மதிப்பிறக்கம் செய்வதையோ, (அவர்கள் மீது அமெரிக்கா வரி விதிக்காத நிலையில்) அவர்களது நாட்டுக்கு அனுப்பப்படும் நமது பண்டங்கள் மீது பெரும் வரி விதிப்பதையோ அல்லது தென் சீனக் கடலின் மத்தியில் ஒரு பெரும் இராணுவ அமைப்பை தான் கட்டமைப்பதையோ சரியென நம்மிடம் கேட்டுக் கொண்டிருக்குமா? சீனா அவ்வாறு செய்யுமென நான் நினைக்கவில்லை!" என்று குறிப்பிட்டிருந்தார்.

### சீனா செலாவணி திருகுதாளம் செய்யும் நாடென முத்திரை குத்தியிருந்தார் ட்ரம்ப்

ட்ரம்ப் அவரின் தேர்தல் பிரசாரத்தின் போக்கில் சீனாவை சாடியிருந்தார், அதையொரு செலாவணி திருகுதாளம் செய்யும் நாடாக முத்திரை குத்தி சீன இறக்குமதிகள் மீது 45 சதவீத வரி விதிக்க அச்சுறுத்தி இருந்தார்.

எவ்வாறிருப்பினும் ஒபாமா நிர்வாகம் சீனா மீது அழுத்தத்தை அதிகரிப்பதற்காக மூன்று முறை அதன் கட்டுப்பாட்டிலுள்ள தீவுக்குன்றுகளைச் சுற்றி பன்னிரண்டு கடல் மைல் எல்லைக்குள் போர்க்கப்பல்களை அனுப்பி பதற்றங்களைத் தூண்டிய, அந்த தென் சீனக் கடல் குறித்து ட்ரம்ப் சில குறிப்புகளைக் குறிப்பிட்டிருந்தார்.

(கேள்வி தொடரும்...)

காலைக்கதிர்
Kalaikkathir



இருத்தலில் இருந்துதான் ஒருவனது வாழ்வு தொடங்குகிறது. முதலில் மனிதன் இருப்புக் கொள்கிறான். அந்த இருப்பு நிலையிலிருந்து சுயவிழிப்புக் கொள்கிறான். உலகத்தை அறிகிறான். உலகத்தோடு உறவு கொள்கிறான். அந்த உலகானுபவத்திலிருந்து தன்னைத் தானே உருவாக்கிக் கொள்கிறான். மனிதமாக, மனித அகமாக, சுயமாக, ஆளுமையாக, நானாக உருவாக்கம் பெறும் மனித இயல்பை மனிதனே படைக்கிறான். இருப்பே எல்லாவற்றுக்கும் முன்நிலையானது; அடிப்படையானது. இருப்பில் இருந்துதான் மனித இயல்பு தோன்றுகிறது. இதுதான் இருப்பியத்தின் அடிப்படைத் தத்துவம் என்கிறார் சாத்தர்.

மனிதர்களுக்குப் பொதுவான பண்பு என்று எதுவுமில்லை. தெய்வமோ, விதியோ, மனிதனுக்கு அப்பாலான மறுவுலக சக்திகளோ, மனிதனைப் படைக்கவில்லை. மனிதனே தனது சித்தத்தால், செயலால்,

> “தனிமனிதன் என்பவன் சமூகப் பெரு வெள்ளத்தில் அள்ளுப்பட்டுச் செல்லும் நிலையற்ற நீர்க்குமிழி அல்லன். அன்றி. அவன் ஓர் உணர்வற்ற. உயிரற்ற. அசைவற்ற சடப்பொருளுமல்லன். மனிதன் என்பவன் வாழ்வுலகின் பேருண்மை. இருப்பியக்கத்தின் மையம். அவன் சுயவுணர்வுடன் சீவிப்பவன்: சிந்திப்பவன்: சுயமாக முடிவுகளை எடுப்பவன்; விருப்புக்கேற்ற தெரிவுகளைச் செய்பவன்; எதிர்காலத்தை நெறிப்படுத்தி வாழ்பவன்; பொறுப்புணர்வுள்ளவன்; மற்றவர்களுக்கும் பொறுப்பானவன். தனக்குக் கிட்டிய வாய்ப்புகளைக் கொண்டு. தனது சித்தத்துக்கு ஏற்றவாறு தன்னை உருவாக்கிக் கொள்பவன். அவனது ஒட்டுமொத்தமான செயற்பாடுகளே அவனது தனித்துவத்தையும். சுயத்தையும். வாழ்நிலையையும் நிர்ணயித்து விடுகின்றன. ஒரு தனிமனிதனானவன் மானிடத்தின் பொதுப் படிமம். அந்தத் தனிமனிதன் தன்னை உருவாக்கம் செய்யும்போது மானிடமும் உருவாக்கம் பெறுகிறது.”



# மனிதத்துவம்

## சாத்தர் பற்றிய ஓர் அறிமுகம்

05



தன்னைத்தானே படைத்துக்கொள்கிறான்.

தனிமனிதன் என்பவன் சமூகப் பெரு வெள்ளத்தில் அள்ளுப்பட்டுச் செல்லும் நிலையற்ற நீர்க்குமிழி அல்லன். அன்றி, அவன் ஓர் உணர்வற்ற, உயிரற்ற, அசைவற்ற சடப்பொருளுமல்லன். மனிதன் என்பவன் வாழ்வுலகின் பேருண்மை. இருப்பியக்கத்தின் மையம். அவன் சுயவுணர்வுடன் சீவிப்பவன்; சிந்திப்பவன்; சுயமாக முடிவுகளை எடுப்பவன்; விருப்புக் கேற்ற தெரிவுகளைச் செய்பவன்; எதிர் காலத்தை நெறிப்படுத்தி வாழ்பவன்; பொறுப்புணர்வுள்ளவன்; மற்றவர்களுக்கும் பொறுப்பானவன். தனக்குக் கிட்டிய வாய்ப்புகளைக் கொண்டு, தனது சித்தத்துக்கு ஏற்றவாறு தன்னை உருவாக்கிக் கொள்பவன். அவனது ஒட்டுமொத்தமான செயற்பாடுகளே அவனது தனித்துவத்தையும், சுயத்தையும், வாழ்நிலையையும் நிர்ணயித்து விடுகின்றன. ஒரு தனிமனிதனானவன் மானிடத்தின் பொதுப் படிமம். அந்தத் தனிமனிதன் தன்னை உருவாக்கம் செய்யும்போது மானிடமும் உருவாக்கம் பெறுகிறது.

மனிதன் அகநிலையில் வாழ்பவன். மனித உறவுகளுக்கு எல்லாம் அக நிலைதான் ஆதாரம். எனக்கும் மற்றவனுக்கும் ஏற்படும் உறவு அகவயமானது. அக நிலையில்தான், நான் மற்றவனைத் தெரிந்து கொள்கிறேன்; புரிந்துகொள்கிறேன், உறவாடிக்கொள்கிறேன்; அகநிலை உறவுகளே மனித உறவாக, சமூக உறவாக, கூட்டுறவாகப் பரிணமிக்கின்றன. அகநிலையில்தான், தனிமனிதன் ஒருவன் சமூக உலகில் சங்கமித்துக்கொள்கிறான். “மனித உலகத்தைத் தவிர வேறு உலகம் எதுவுமில்லை. அந்த மனித உலகம் அகவயமானது” ஏன்கிறார் சாத்தர்.

மனிதன் தனக்காக வாழாமல், தன் நலனுக்காக வாழாமல், – தனக்கு அப்பால், தனது சுயத்திற்கு அப்பால், மற்றவர்களுக்காக, மற்றவர்களின் நலனுக்காக, மானுடத்தின் நல்வாழ்வுக்காகத் தன்னை அர்ப்பணித்து வாழும் மாண்பை மனிதத்துவம் என்கிறார் சாத்தர். தன்னைவிஞ்சி வாழ்பவன், சுயத்தின் எல்லைகளைக் கடந்து மற்றவர்களுக்காக வாழ்பவன், மானிடத்தின் உயர்ச்சிக்காக வாழ்பவன், உண்மையான மனிதனாக வாழ்கிறான். மனிதத்துவம் அவனிடம் நிறைவு பெறுகிறது. இதுதான் இருப்பியம் வேண்டி நிற்கும் மனிதாபிமானம் என்கிறார் சாத்தர்.

ஐம்பதுகளில் படைப்பிலக்கியத்துடன் நின்று விடாமல், மூன்றாம் உலகத்து மக்களுக்காகவும் குரல் கொடுத்தார் சாத்தர். பிரெஞ்சு காலனித்துவத்துக்கு எதிராக நிகழ்ந்த வியட்நாமிய, அல்ஜீரிய விடுதலைப் போராட்டங்களையும் ஆதரித்தார்.

அல்ஜீரிய விடுதலை இயக்கத்துக்கு மறைமுகமாக உதவிகளைச்செய்தார். பிரெஞ்சுக் காலனிய கொடுமைகளை அம்பலப்படுத்தினார். அல்ஜீரிய மக்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்களையும் முன் நின்று நடத்தினார். இதனால் பிரெஞ்சு ஆட்சியாளர் அவரைத் தேச விரோதியாகக் கண்டனர். கொலை முயற்சிகளும் நடந்தன. பாரிஸிலுள்ள அவரது வாசஸ்தலம் குண்டு வெடிப்புக்கு இலக்காகியது. உலக சமாதான இயக்கத்துக்குத் தலைமை தாங்கி நின்றமையால் அவரைக் கைது செய்து சிறையில் தள்ளிவிட பிரெஞ்சு அரசு துணியவில்லை.

மேற்குலக காலனித்துவத்துக்கு எதிராகப் போர் தொடுத்து நிற்கும் உலகப் புரட்சி இயக்கங்களைச் சாத்தர் ஆதரித்தார்.

மேற்குலக வல்லரசுகளை மட்டுமன்றி, மேற்குலக மக்களையும் காலனித்துவ சுரண்டல்காரர்கள் என வர்ணித்தார். ஐரோப்பிய மனிதன் ஒவ்வொருவரினதும் அந்தரங்க ஆன்மாவினுள் காலனித்துவ பிசாசு குடிகொண்டிருக்கிறது என அவர் எழுதியமை ஐரோப்பியருக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.

பிராங்ஸ் பனன் எழுதிய ‘பூமியின் இழிநிலைப்பட்டோர்’ (Wretched of the Earth) என்ற நூலுக்கு அவர் எழுதிய அறிமுகக் கட்டுரை மிகவும் பிரபல்யமானது. அதில் காலனித்துவ முகமூடியைக் கிழித்துக்காட்டினார்.

பூமியின் முகத்தைக் காலனித்துவம் சிதைத்து விட்டிருக்கிறது. தேசங்களைப் பிரித்து, சமூகங்களை உடைத்து, பண்பாடுகளைச் சீர்குலைத்து விட்டிருக்கிறது. ஒன்றுபட்டு வாழ்ந்த சுதேசிய மக்களை வர்க்கங்களாகப் பிளவுபடுத்தி, நீங்காத முரண்களைத் தோற்றுவித்திருக்கிறது. மேற்குலக மனிதர்கள் எல்லோருமே காலனித்துவ சுரண்டலால் இலாபமடைந்திருக்கிறார் கள். இந்த வகையில், மேற்குலக மனிதர்கள் எல்லோருமே காலனித்துவ வாதிகள். காலனித்துவம் புரிந்துவரும் பொல்லாத பாவங்களுக்கு எல்லோருமே பொறுப்பாளிகள். ஒடுக்கப்படும் மனிதர்களின் ஆத்திரமும், ஆவேசமும், ஆழமான வெறுப்புணர்வும் வன்முறைப் புயலாகக் கிளம்பும். ஐரோப்பியனுக்கு எதிராக வன்முறையைக் கையாண்டே அடக்கப்படுபவன் தனது மனிதத்துவத்தை நிலைநாட்டிக் கொள்வான். இது தவிர்க்க முடியாத வரலாற்று நிர்ப்பந்தம். “முன்பு கடந்த காலத்தில், நாம் வரலாறு படைத்தோம். இனி எமக்காக வரலாறு படைக்கப்படும்.” என்று எழுதினார் சாத்தர்.’

1964 ஆம் ஆண்டு, இலக்கியத்துக்கான நோபல் பரிசு சாத்தருக்குக் கிட்டியது. அந்தப் பரிசை ஏற்றுக்கொள்ள அவர் மறுத்தார். மேற்குலகின் நலனைப் பேணும் ஒரு முதலாளிய நிறுவனத்திடமிருந்து ‘கலாசாரப் பிரமுகர்’ என்ற பட்டத்தைச் சூட்டிக்கொள்ளத் தாம் விரும்பவில்லை என அவர் பகிரங்கமாக அறிவித்தார். “அல்ஜீரிய நாடு விடுதலை பெறுவதற்கு முன்னராக அல்ஜீரியப் போராட்டத்தில் நான் தீவிரமாக ஈடுபட்ட காலத்தில் இந்தப் பரிசு எனக்கு வழங்கப்பட்டிருந்தால் நான் அதை ஏற்றுக்கொண்டிருப்பேன். அது எனக்குக் கிடைத்த தனிப்பட்ட மதிப்பாக அல்லாமல், அல்ஜீரிய சுதந்திரப் போராளிகளுக்குக் கிடைத்த கௌரவமாக அதனைக் கருதியிருப்பேன்.” என்று குறிப்பிட்டார் சாத்தர்.

(தொடரும்...)

### தேச விடுதலையுடன் மானிடத்தின் விடுதலை குறித்தும் ஆழமாகச் சிந்தித்த தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம்

*ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றிய சிந்தனைப் புரட்சியை முன்வைத்தவர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.*

*அவர் வெறும் அரசியல் மதியுரைஞர் மட்டுமல்லர். அதையும் தாண்டி ஒரு தத்துவாசிரியர். ஓரினத்தின் தேச விடுதலையையும் தாண்டி மனித விடுதலை பற்றியும் ஆழமான ஆத்ம விசாரணைகளைச் செய்த ஓர் ஆய்வறிஞர்.*



*‘விடுதலை’ என்ற தமது நூலிலே அரசியலுக்கு அப்பால், மேலும் பல்துறை சார்ந்த தமது சிந்தனைத் தெறிப்புக்களை அவர் முன்வைத்துள்ளார்.*

*அரசியல், சமூகவியல், உளவியல், பொருளியல், மெய்யியல், வரலாற்றியல், மானிடவியல் போன்ற அறிவியல் பரப்புகளை ஊடுருவி நிற்கும் அர்த்தம் பொதிந்த கட்டுரைகள் அதில் அடங்கியுள்ளன.*

*இந்த விசாரணைகள் அனைத்துக்கும் மூலப் பொருளாக விளங்குபவன் மனிதன். ஆகவே, மனிதன் பற்றியும், மனித வாழ்வு மற்றும் வரலாறு பற்றியும், மனித விடுதலை பற்றியும் ஆழமான விசாரணைகள் செய்த சிந்தனையாளர்கள் சிலரின் புதுமையான, புரட்சிகரமான பார்வைகளை இக்கட்டுரைகள் வாயிலாக அறிமுகம் செய்துவைக்கிறார் ‘தேசத்தின் குரல்’ அன்ரன் பாலசிங்கம்.*

# சக வாழ்வை வலியுறுத்தி புத்தளம் நகரில் பேரணி




புத்தளம், டிசெ.17

புத்தளம் மாவட்ட சர்வமதக் குழுவின் சமய சக வாழ்வு எழுச்சித் திட்டத்தின் கீழ், சக வாழ்வை வலியுறுத்தி விழிப்புணர்வுப் பேரணி ஒன்று நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது. புத்தளம் பிரதான வீதியின் ஊடாகப் புத்தளம் நகர மண்டபம் வரை இந்தப் பேரணி இடம்பெற்றது.

இதனையடுத்து, மதத் தலைவர்கள் மற்றும் பொது மக்களின் பங்குபற்றுதலுடன், நகர மண்டபத்தில் சர்வமதக் குழுவின் கூட்டம் நடைபெற்றது. புத்தளம் ஐயனார் ஆலயத்தின் காணிக்கான உரிமப் பத்திரத்தை, புத்தளம் பௌத்த மத்திய நிலைய விஹாராதிபதி ஆலய பரிபாலன சபைத் தலைவரிடம் இதன்போது கையளித்தார். (எ)

## தினசரி ராசி பலன் 17.12.2016

| | |
|---|---|
| சுபநேரம் | : காலை : 7.45 - 8.45 |
| | மாலை : 4.45 - 5.45 |
| ராகு காலம் | : 9.00 - 10.30 |
| குளிகன் | : 6.00 - 7.30 |
| எமகண்டம் | : 1.30 - 3.00 |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

மேல் நோக்கு நாள்

**மேஷம்:** லாபம் - அதிஷ்டங்கள் மறைமுக வரவுகளாக வளம் நல்கும்.

**ரிஷபம்:** தனம் - திடீர் பொருள் சேர்க்கை ஏற்படும்.

**மிதுனம்:** ஓய்வு - உழைப்பினால் உண்டான களைப்பு நீங்கி ஓய்வு கிடைக்கும்.

**கடகம்:** பயம் எடுத்த காரியங்களில் தளர்வு கண்டு மனம் சோர்வடையும்.

**சிம்மம்:** நன்மை - நீண்ட நாளைய ஆசைகள் நிறைவேறி நன்மைகள் பலவும் தரும் நன்னாள்.

**கன்னி:** விவேகம் - அறிவு மிளிர்ந்து செய்யும் செயல்களில் சிறப்புகள் கூடும்.

**துலாம்:** பக்தி - தெய்வ வழிபாடுகள் செய்ய முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும்.

**விருச்சிகம்:** வெற்றி - செய்யும் காரியங்களில் மேன்மை தந்து வெற்றி நல்கும்.

**தனுசு:** வரவு - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் நிதானத்துடன் செயற்பட்டால் எதிர்பாராத வகையில் வரவுகள் வரும்.
சந்திராஷ்டமம் : பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்.

**மகரம்:** சினம் - வீண்கோபத்தால் அனைவரிடத்திலும் உள்ள மதிப்புக் குறையும்.

**கும்பம்:** சிந்தனை - இன்று உங்கள் சிந்தனைகள் சிறந்துமிளிரும் அறிவு ஒளிரும் நன்னாள்.

**மீனம்:** மேன்மை - இன்று எதிர்பாராத வரவால் மேன்மை அடையும் நன்னாள்.

# கொக்கைனை அழிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை

## பிரதி அமைச்சர் விக்ரமரத்ன தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.17

அண்மைய காலங்களில் பறிமுதல் செய்யப் பட்ட கொக்கைன் போதைப் பொருள்களை பகிரங்கமாக அழிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்பதாக பிரதி அமைச்சர் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கொக்கைன் தொகைகளை காலிமுகத்திடலில் வைத்து அழிப்பதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பறிமுதல் செய்யப்பட்ட யானைத் தந்தங்களைக் காலி முகத்திடலில் பகிரங்கமாக அழித்தமை உதாரணமாகக் கொள்ளப்பட வேண்டும். மீட்கப்பட்ட கொக்கைன் தொகைகள் விசாரணை நோக்கங்களுக்காக வைக்கப்பட்டுள்ளது. என்றார்.

அண்மையில் 800 கிலோ கிராம் கொக்கைன் தொகைகளை கொழும்புத் துறைமுகத்தில் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் பறிமுதல் செய்தனர். இதற்கு முன்னரும் 200 கிலோ கிராம் கொக்கைன் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

# பெரும்போகச் செய்கையில் கூடிய விளைச்சலை எதிர்பார்க்க முடியாது

## விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.17

பெரும்போகத்தில் கூடுதலான விளைச்சலை எதிர் பார்க்க முடியாது என்று தெரிவித்தார் விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ரொஹான் விஜயகோன்.

குறுகிய கால பயிர்ச் செய்கை அடிப்படையில் மேலதிக பயிர்களைப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்த வேண்டும் என்று விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கியதாக அவர் குறிப்பிட்டார்.

கௌபி, சோயா, உழுந்து போன்ற பயிர்களைப் பயிரிடும்படி ஆலோசனை வழங்கப் பட்டுள்ளது.

இந்தப் பயிர்களுக்கான விதைகள் இலவசமாக விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இதுவரை கிடைத்த தகவல்களின் அடிப்படையில் ஆறு லட்சம் ஹெக்ரெயர் நிலப் பரப்பில் இரண்டு லட்சத்து 53 ஆயிரம் ஹெக்ரெயர் நிலப்பரப்பில் மட்டுமே நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# இயற்கை அனர்த்தங்களின்போது பாதிக்கப்படுவோருக்கு தங்குமிடம்

கொழும்பு, டிசெ.17

இயற்கை அனர்த்தங்களின் போது பாதிக்கப்படுபவர்களுக்காக பாதுகாப்பான தங்குமிடம் ஒன்றை அமைப்பது குறித்து அரசு விசேட கவனம் செலுத்தியுள்ளது.

கடும் மழை காரணமாக அடிக்கடி மண்சரிவு போன்ற அனர்த்தங்கள் இடம்பெறுகின்றன. கூடுதலாக அனர்த்தங்களை எதிர்கொள்ளும் பகுதியாக பதுளை மாவட்டம் விளங்குகின்றது.

இதனால் இந்த மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பாதுகாப்பு மத்திய நிலையம் அமைக்கப்படும். பதுளை மாவட்டத்தில் பலாங்கொட தோட்ட நிறுவனத்துக்குச் சொந்தமான அரை ஏக்கர் காணி இதற்காகப் பயன் படுத்தப்படும். இதற்காக அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா சமர்ப்பித்த ஆவணத்தை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. (எ)



ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, பிரதமர் நரேந்திர மோடியை நேற்று முன்தினம் டில்லி நாடாளுமன்றத்தில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் சந்தித்தார். இதன் போது இலங்கை அரசின் மீனவர் தொடர்பான புதிய சட்டத்தை நிறைவேற்றவிடாமல் தடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி இருந்தார்.

# ஹெரோயினுடன் இளைஞன் கைது

கொழும்பு, டிசெ.17

சிவனொளிபாதமலைக்கு ஹெரோயின் கொண்டு சென்றதாகக் கூறப்படும் 36 வயதுடைய இளைஞர் ஒருவரை நேற்று முன்தினம் மாலை பொலிஸார் கைது செய்தனர்.

மிஹிரிகமயிலிருந்து தனது நண்பர்களுடன் வான் ஒன்றில் சிவனொளிபாதமலைக்குச் சென்று கொண்டிருந்த அவர்களை நல்லதண்ணி மவுசாகலை சோதனைச் சாவடியில் வழிமறித்து பொலிஸார் சோதனையிட்டனர். இதன்போது, அந்த இளைஞனின் காற்சட்டைப் பையில் 100 மில்லி கிராம் ஹெரோயின் இருந்தமை தெரிய வந்தது. தான் குடிப்பதற்காகவே ஹெரோயினைக் கொண்டுவந்தார் என்றும் மிஹிரிகமவிலேயே இதைப் பெற்றுக்கொண்டார் என்றும் வாக்குமூலத்தில் அந்த இளைஞர் தெரிவித்துள்ளார். (எ)

## 100 அடி பள்ளத்தில் பாய்ந்தது ஓட்டோ!

லிந்துலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட லெமலியர் பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஓட்டோ ஒன்று 100 அடி பள்ளத்தில் விழுந்ததில் அதில் பயணித்த மூன்று பேர் படுகாயமடைந்துள்ளனர்.

அவர்கள் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ)

# பலாங்கொடையில் விபத்து ஒருவர் பலி; 9 பேர் காயம்

கொழும்பு, டிசெ.17

பலாங்கொடை, எல்லேபொல பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற பஸ் விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் 9 பேர் காயமடைந்தனர்.

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ் ஒன்றும், கொழும்பில் இருந்து பலாங்கொடை நோக்கி ஆடைத் தொழிற்சாலைக்குத் துணிகளை ஏற்றிச்சென்ற லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த 36 வயதுடைய லொறிச் சாரதி பலாங்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். (எ)

# சைக்கிள் திருடியவருக்கு 10 வருடம் ஒத்திவைத்த 3 வருட கடூழியச் சிறை!

## தண்டமாக 3 ஆயிரம் ரூபா

அச்சுவேலி, டிசெ.17

7ஆயிரத்து 500 ரூபா பெறு மதியான சைக்கிளைத் திருடிய குற்றவாளிக்கு 10 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட மூன்று வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்த மல்லாகம் நீதிவான் ஏ.யூட்சன், அவருக்கு 3 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்தார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏழாலை தெற்கு மயி லங்காட்டில் உள்ள வீடு ஒன்றுக்கு கடந்த 2015 ஆம் ஆண்டு மாசி மாதம் 13 ஆம் திகதி அத்து மீறி உள் நுழைந்த மேற்படி நபர் அங்கிருந்த பெண்களுக்கான சைக்கிள் ஒன்றைத் திருடியிருந்தார்.

இச் சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

விசாரணை மேற்கொண்ட பொலிஸார், மின்சார நிலைய வீதி சுன்னாகம் பகுதியைச் சோந்த நபர் ஒருவரை சைக்கிளுடன் கைதுசெய்திருந்தனர்.

அவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மன்றில் வாசிக்கப் பட்டது. சந்தேக நபர் தனது குற்றத்தை ஏற்றுக்கொண்டிருந்தார்.

முதலாவது குற்றமான வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த மைக்காக 1,500 ரூபா தண்டமும் 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சிறையும், இரண்டாவது குற்றச்சாட்டான திருடிய பொருளை உடைமையில் வைத்திருந்தமைக்கு 10வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார். (ம-9)

# புதிய அரசமைப்பினூடாக எந்தவித மாற்றமும் வராது

## சம்பிக்க சுட்டிக்காட்டு

கொழும்பு,டிசெ.17

புதிய அரசமைப்பின் ஊடாக நாட்டின் ஒருமைப்பாடு, மதச் சுதந்திரம் மற்றும் பௌத்த மதத்துக்கு உள்ள முன்னுரிமை ஆகியவற்றில் எவ்வித மாற்றமும் ஏற்படப் போவதில்லை.

இவ்வாறு நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் உருவாக்கப் பட்ட அரசமைப்பானது ஒரு கட்சி அல்லதுஒருதலைவரின் தேவைகளுக்கு ஏற்பவே அமைந்தது.

ஆனால், புதிய அரசமைப்புத் திருத்தம் அனைவரினதும் ஒப்புதலுடனேயே மேற்கொள்ளப்படும்.



வெளிநாட்டு சக்திகளினதோ அல்லது அடிப்படைவாதிகளினதோ அழுத்தங்களுக்கு அமைவாக அது இடம் பெறமாட்டாது என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (ஐ)

# எமிலுக்கும் சர்வதேச பிடியாணை பிறப்பித்தது கொழும்பு நீதிமன்றம்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் நிதிப்பிரிவைச் சேர்ந்தவர் என அரசால் அறிமுகப் படுத்தப்பட்ட எமில்காந்த னுக்கு கொழும்பு உயர்நீதிமன்றம் சர்வதேசப் பிடியாணை பிறப்பித்துள்ளது.

ராடா நிறுவனத்தில் இடம்பெற்ற மோசடி தொடர்பான வழக்கு நேற்று முன்தினம்விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்தப் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

ராடா நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான டிரான் அலஸ், எமில்காந்தன் , ராடாவின் முன்னாள் நடவடிக்கைப் பிரிவுத் தலைமை அதிகாரி சாலிய விக்ரமசூரிய, கலாநிதி ஜயந்த டயஸ் சம ரசிங்க ஆகிய நால்வரும் இந்த வழக்கில் சந்தேகநபர்களாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

வழக்கு விசாரணைகளின் போது நீதிமன்றத்தில் முன்னிலையாவதை எமில்காந்தன் தொடர்ந்தும் தவிர்த்துவரும் நிலையில் நேற்று முன்தினம் அவருக்கு சர்வதேசப் பிடியாணை உத்தரவை நீதிபதி பிறப்பித்துள்ளார்.

2004 ஆம் ஆண்டு பெரும் அழிவை ஏற்படுத்திய சுனாமி அனர்த்தத்தைத் தொடர்ந்து வீடமைப்புத் திட்டத்துக்கென ஒதுக்கப்பட்ட 200 மில்லியன் ரூபாவை முறைகேடாகப் பயன் படுத்தினர் என சந்தேகநபர்களுக்கு எதிராகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்கு மீண்டும் அடுத்த ஆண்டு ஜனவரி 19 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்படும் என நீதிபதி கூறினார்.

# டெங்கு பரவும் சூழல்; மூவருக்கு ரூ.25 ஆயிரம் அபராதம்

அச்சுவேலி, டிசெ.17

டெங்கு நுளம்பு பரவக்கூடிய வகையில் சுற்றுச் சூழலை வைத்திருந்த மூன்று காணி உரிமையாளர்களுக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்த மல்லாகம் மாவட்ட நீதிபதி ஏ.யூட்சன் அந்தக் காணி உரிமையாளர்களைக் கடுமையாக எச்சரிக்கை செய்து விடுவித்தார்.

சுன்னாகம் சுற்றுச் சூழல் பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு மூன்றும் நேற்று முன்தினம் தனித்தனியாக விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

இதில் டெங்கு நுளம்பு அதிகமாக பரவி இருந்த சூழலை துப் பரவு செய்யாததுடன், பொலிஸாரின் அறிவுறுத்தலைப் பின்பற்றாத காணி உரிமையாளர்கள் இருவருக்கு தலா 10 ஆயிரம் ரூபா அதிக தண்டம் விதிக்கப்பட்டது.

சுன்னாகம் நகரப் பகுதியில் மழை நீர் தேங்கி நிற்கக் கூடிய வகையில் இளநீர் கோம்பைகள் மற்றும் ஐஸ்கிறீம் வெற்றுக் கிண்ணங்களை வீசியிருந்த வீட்டு உரிமையாளர் ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ம-9)

# ஆளுநரின் செயல் சரியா? ரவிகரன் கேள்வி

''கடந்த வாரம் முல்லைத்தீவு கச்சேரிக்குச் சென்று ஆளுநர் திடீர் நடவடிக்கைகளை மேற்கொண்டார். காணிச் சட்டத்தின்படி காணிப் பிணக்குகளை தீர்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் அவர் ஒரு தலைப்பட்சமாக முறைப்பாட்டாளர்களை மட்டும் அழைத்து நடவடிக்கை எடுத்துள்ளார். அது பற்றி முறைப்பாடுகள் எனக்குக் கிடைத்துள்ளன. பிரதேச செயலாளர்கள் தீர்க்க முடியாதுவிட்டால் காணிப் பிணக்குகள் காணி அமைச்சு நடமாடும் சேவை மூலம் தீர்க்கப்பட வேண்டும் என துணைவிதிகள் கூறுகின்றன. ஆனால் 2013/1 இன் கீழ் இலங்கை அரசாங்கத்தின் கீழ் உருவாக்கிய சுற்று நிருபம் சரியா? பிரச்சினைகள் காணி அமைச்சு மூலம் தீர்க்கப்பட்டது சரியா? அல்லது ஆளுநர் தனக்கு முறைப்பாடுகள் கிடைத்ததாகக் கூறி 16 பேரின் விடயங்களை கையாண்டமை சரியா?

இவ்விடயம் குறித்து ஜனாதிபதி, பிரதமருடன் நாம் பேசவேண்டும். சட்டத்தையும் மத்திய அரசுதான் போடுகிறது. காணி அமைச்சும் மத்திய அரசுதான் வைத்துள்ளது. இவ்வாறு நிலைமை இருக்க ஆளுநரின் செயல் சரியா?'' எனக் கேட்டார் ரவிகரன்.

# முதலமைச்சர் நிதியத்தை ஆளுநர் இன்னும் ஏன் அங்கீகரிக்கவில்லை?

## சிவாஜி சினத்துடன் கேள்வி



ஆளுநர் செயலகம், மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழு, பேரவைச் செயலகம் ஆகியவற்றின் நிதி ஒதுக்கீட்டுப் பிரேரணைகளைப் பரிசீலிக்க அவை குழு நிலைக்கு மாறியது.

முன்மொழிவை முதலமைச்சரை மேற்கொள்ளுமாறு அவைத்தலைவர் கேட்டுக்கொண்டார்.

வடமாகாண சபையில் முன்மொழிவுகளை ஒதுக்கீட்டு நியதிச் சட்டமாக சமர்ப்பித்தார் முதலமைச்சர். ஆளுநர் செயலகத்தின் மீண்டு வரும் செலவீனம், மூலதனச்செலவீனம் ஆகியன அங்கீகரிப்புக்கு எடுக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது.

''கௌரவ ஆளுநரின் நிதிகளை அங்கீகரிப்பதற்கு முன்னர், கௌரவ ஆளுநர் முதலமைச்சர் நிதியத்தை இன்றும் அங்கீகரிக்கவில்லை. பூசி மெழுகி வர்ணம் பூசுவதுபோல தற்போதைய மாகாணசபை முறைதான் தீர்வாக வரும். கடந்த ஆளுநர்கள் மறுத்தனர். 'சுகம் வரும் ஆனால் ஆள் 'தப்பாது' என்பது போல உள்ளது நிலைமை. முதல்வர் நிதியத்துக்கு அங்கீகாரம் வழங்காமை ஒட்டுமொத்த அரசகொள்கையாக வுள்ளது.'' எனக் குறை கூறினார் சிவாஜிலிங்கம்.

''மாகாணத்தின் 900 வாகனங்களுக்கு தென்னிலங்கை முகவர்கள் மூலம் காப்புறுதி வழங்கப்பட்டது. இப்பொழுது அவ்வாறான நிலைமை உள்ளதா?'' எனவும் கேட்டார் சிவாஜி. காப்புறுதி வழங்கும் செயற்பாட்டில் இங்குள்ள காப்புறுதி நிறுவனங்களுக்கும் சந்தர்ப்பம் கொடுக்குமாறும் கோரினார் சிவாஜி.

வடக்கு மாகாண சபையில் 69 ஆவது அமர்வு புதன்கிழமை இடம்பெற்றது. அப்போது அங்கு இடம்பெற்ற சுவையான சொல்லாடல்களில் ஒரு பகுதி நேற்று வெளியானது. மிகுதி இங்கு பிரசுரமாகிறது.

# முல்லைத்தீவில் பட்டினிச்சாவை அனுமதிக்கலாமா?



*''முல்லைத்தீவு வறுமையான மாவட்டம். கடலும் மறுக்கப்படுகிறது; தரையிலும் மகாவலி 'எல்'வலயத்துடன் சேர்த்து காணியும் அபகரிக்கப்படுகிறது. அங்கு 21 ஆயிரத்து 700 பேர் வேலையில் லாதவர்கள். அதில் 11ஆயிரம் பேர் ஜி.சீ.ஈ.சாதாரண தராதரம் இல்லாதவர்கள்''- எனக் கவலை தெரிவித்தார் ரவிகரன்.*

*நான் முல்லைத்தீவில் 548 கிராமங்களுக்குச் சென்று மதிப்பிட்டேன். தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டு அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவது அவசியம்.*


*பல மாற்றுத்திறனாளிகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் - விரைவில் வறியோராகி, பட்டினிச்சாவை எதிர்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. ''வறிய மாகாணம், கல்வியில் பின்தங்கிய மாவட்டம் என்று தொடர்ந்து கூறிக் கொண்டிருப்பதா? உரிய திட்டங்களை உருவாக்கி முல்லைத்தீவை அபிவிருத்தி செய்யுங்கள்.'' - எனக் கேட்டுக் கொண்டார் ரவிகரன்.*

### உத்தியோகத்தருக்கு பேரவையின் டயறி

*''அனைத்து விவரங்களும் கொண்ட டயறியை பேரவைச் செயலகம் தயாரித்துள்ளது. ஆகவே திணைக்களங்கள் தத்தமக்கென்று தனித்தனியாக டயறிகள் தயாரிக்க வேண்டியதில்லை'' எனத் தெரிவித்தார் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம். குறுக்கிட்ட விந்தன் கனகரட்ணம் ''டயறியில் தொலைபேசி இலக்கங்களுடன் 'ஈமெயில்' முகவரிகளும் இடம் பெறவேண்டும். ஏனைய மாகாண திணைக்களங்கள் டயறி வெளியிடும்போது அவற்றைச் சேர்க்கலாம்தானே என்றார்.*

*''இல்லை, டயறி வெளியீட்டை பேரவைச் செயலகம் எல்லா விவரங்களுடனும் செய்துள்ளது. ஏனைய திணைக் களங்கள் அதற்கு செலவிடவேண்டியதில்லை'' - என்றார் சி.வீ.கே.*

## நாடாளுமன்றம் முடக்கத்தால் அத்வானி பதவி விலக முடிவு



டில்லி, டிசெ.17

நாடாளுமன்றம் தொடர்ந்து முடங்கி உள்ளதால் அத்வானி குழப்பம் அடைந்துள்ளார் என்றும் இதனால் ராஜினாமா செய்ய முடிவெடுத்துள்ளார் என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

ரூபா தாள்கள் ஒழிப்பு நடவடிக்கை தொடர்பில் எதிர்க் கட்சிகளின் தொடர் போராட்டம் காரணமாக நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடர் செயற்படாமல் முடங்கி உள்ளது. நாடாளுமன்றத்தின் தற்போதைய நிலையால் பாரதிய ஜனதாக் கட்சியின் சிரேஷ்ட தலைவர் அத்வானி குழப்பம் அடைந்துள்ளார் என்று கூறப்படுகிறது.

இதுதொடர்பில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இத்ரிஸ் அலி தெரிவித்ததாவது:-

"நான் அத்வானியிடம் உடல் நிலை தொடர்பாகப் பேசினேன். அவர் என்னுடைய உடல்நிலை சரியாக உள்ளது. ஆனால் நாடாளுமன்றத்தின் நிலைதான் நன்றாக இல்லை என்றார்.

நாடாளுமன்றத்தில் இதுபோன்ற சூழ்நிலையை என்னுடைய வாழ்நாளில் பார்த்தது இல்லை.

விவாதம் நடைபெற வேண்டும், இல்லையென்றால் நான் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்பது போல் உணர்கின்றேன் என்று அத்வானி பேசினார்."- என்றார். (எ)

# ஊழலை ஒழிக்க தவறியது காங்.

## பிரதமர் மோடி சாடல்



டில்லி, டிசெ.17

ஊழலை ஒழிக்க காங்கிரஸ் கட்சி தவறி விட்டதாக பிரதமர் மோடி சாடியுள்ளார்.

பாரதிய ஜனதாக் கட்சியின் நாடாளுமன்றக் கூட்டம் நேற்றுக் காலை நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது. பிரதமர் மோடி, பா.ஜ.க. தலைவர் அமித் ஷா, மூத்த தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் பிரதமர் மோடி பேசியதாக டில்லி வட்டாரங்கள் தெரிவித்தவை வருமாறு:-

"ரூபா தாள்கள் மீளப் பெறப்பட்ட விவகாரத்தில் மக்களுக்கு பிரதமர் மோடி பாராட்டுத் தெரிவித்தார். டிஜிட்டல் பொருளாதாரம், மக்களுக்கு நல்ல வழி காட்டும். டிஜிட்டல் பொருளாதாரம் வெளிப்படையானது. திறமையானது. 1998 இல் பினாமி சொத்து தொடர்பாக காங்கிரஸ் கட்சி வரைவுச் சட்டம் கொண்டு வந்தது. ஆனால், இதனை நடைமுறைப்படுத்தத் தவறிவிட்டது. ரூபா தாள்கள் மீளப்பெற்ற விவகாரம் தொடர்பாக முன்னர் ஆதாரம் கேட்காத எதிர்க்கட்சிகள் தற்போது ஆதாரம் கேட்கின்றன.

முந்தைய காலங்களில் அரசின் ஊழல் மற்றும் முறைகேட்டை எதிர்க் கட்சிகள் வெளிப்படுத்தும். ஆனால் தற்போது எதிர்க்கட்சிகளின் முறைகேட்டை அரசு வெளிப்படுத்துகிறது.

2 ஜி, நிலக்கரி ஊழல் என பல பிரச்சினைகளில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகள், கறுப்புப் பணத்துக்கு எதிராகவும், தற்போது ஊழலுக்கு எதிரான நடவடிக்கைக்கும் ஒன்றாகச் சேர்ந்துள்ளன. காங்கிரஸ், நாட்டை விடக்கட்சி பெரியது என்று நினைக்கிறது. பாரதிய ஜனதாக் கட்சியைப் பொறுத்த வரை நாட்டு நலனே முக்கியமானது. ஊழலை ஒழிக்க காங்கிரஸ் தவறி விட்டது. ரூபா தாள்கள் மீளப்பெறப்பட்டமை தொடர்பில் கோவா மாநில ஆளுநர் வாங்கூ குழு இந்திராவிடம் அறிக்கை அளித்தது. ஆனால், அதனை அவர் புறக்கணித்து விட்டார். ரூபா தாள்கள் மீளப்பெற்றப்பட்ட விவகாரத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சிகள் தான் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. கறுப்புப் பணம் அனைத்தும் செல்லாதனவாகி விட்டன."- என்றார். (எ)

## நலமாக உள்ளார் கருணாநிதி; காவேரி மருத்துவமனை தகவல்



சென்னை, டிசெ.17

உடல்நலக் குறைவு காரணமாக மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள கருணாநிதியின் உடல் நிலை சீராக உள்ளதாக காவேரி நிர்வாகத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தி.மு.க. தலைவர் கருணாநிதி உடல்நலக் குறைவு காரணமாக மீண்டும் சென்னை காவேரி மருத்துவமனையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாகக் காவிரி மருத்துவமனை நிர்வாகம் தரப்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் சிகிச்சைக்குப் பின் கருணாநிதியின் உடல் நிலை சீராக உள்ளது. தொண்டை மற்றும் நுரையீரல் தொற்றுக் காரணமாக கருணாநிதி மருத்துவமனையில் அனும்திக்கப்பட்டுள்ளார்.

நோய்த் தொற்றால் மூச்சுவிடுவதில் சிரமம் ஏற்பட்டது. நோய்த் தொற்றைக் குணப்படுத்த மருத்துவர்கள் குழு அவருக்கு சிகிச்சை அளித்து வருகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக, காவேரி மருத்துவமனையில் கடந்த முதலாம் திகதி முதல் சிகிச்சை பெற்று வந்த கருணாநிதி கடந்த 7 ஆம் திகதி வீடு திரும்பினார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## மும்பையில் மாடி வீடு இடிந்து விழுந்ததில் மூவர் பலி; 10 பேர் காயம்

மும்பை, டிசெ.17

மும்பை அருகே மூன்று மாடி வீடு இடிந்து விழுந்ததில், மூன்று பேர் உயிரிழந்தனர்; 10 பேர் படுகாயம் அடைந்தனர்.

மும்பை புறநகர் பகுதியில், மூன்றுமாடி வீடு ஒன்றில், நேற்று முன்தினம் திடீரென தீப்பிடித்தது. அடுத்த சில நிமிடங்களில், அந்த வீடு இடிந்து விழுந்தது. தீயணைப்புப் படையினர் விரைந்து சென்று மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இடிபாடுகளில் சிக்கியிருந்த, சிலரை மீட்டனர். இந்த விபத்தில் 3 பேர் இறந்தனர். மேலும், 10 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (எ)

## கௌரவக் கொலைகளை தடுக்க தனிச்சட்டம் தேவை

### மத்திய அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு

டில்லி, டிசெ.17

கௌரவக் கொலைகளைத் தடுக்க தனிச்சட்டத்தை மத்திய அரசு விரைவாகக் கொண்டு வர வேண்டும் என்று உயர் நீதிமன்ற நீதிபதிகள் உத்தர விட்டுள்ளனர்.

தமிழகத்தில் உள்ள முக்கிய அரசியல் கட்சிகள், தங்களது அரசியல் சுய நலத்துக்காகக் கௌரவக் கொலைகளைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதில்லை. இதனால், கடந்த 3 ஆண்டுகளில், கலப்புத் திருமணம் செய்த 81 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

எனவே தமிழகத்தில் நடைபெறும் கௌரவக் கொலைகளைத் தடுக்க புதிதாகச் சட்டம் இயற்றவும், எஸ்.சி. பிரிவு மக்களுக்குத் தற்காப்புக்காக ஆயுதங்கள் வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய மக்கள் மன்றத்தின் தலைவர் வாராகி என்பவர் பொது நல வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. இதன்போதே கௌரவக் கொலை குறித்து மத்திய அரசு தனிச் சட்டத்தை விரைவாக இயற்றும் என்பதை நம்பி இந்த வழக்கை முடித்து வைக்கிறோம் என்று நீதிபதிகள் உத்தர விட்டனர். (எ)

# ஜெயலலிதாவின் இறப்பிலுள்ள மர்மம் விலகாவிட்டால் நீதிமன்றம் செல்வேன்

### இவ்வாறு கூறுகிறார் சுப்பிரமணிய சுவாமி

டில்லி, டிசெ.17

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா இறப்பில் மர்மம் விலகாவிட்டால் நீதிமன்றம் செல்வேன் என்று பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதாவின் மரணம் தொடர்பில் சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடவேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் ஏற்கனவே பொதுநல மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனு உச்ச நீதிமன்றத்தின் குளிர்கால விடுமுறைக் காலம் (டிசெம்பர் 21-30 ஆம் திகதி வரை) முடிவடைந்த பின்னர் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் பாரதிய ஜனதா கட்சியின் சிரேஷ்ட தலைவர் சுப்பிரமணிய சுவாமி 'தி இந்து' பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில்,

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் மரணத்தில் மர்மம் விலகாவிட்டால் நீதிமன்றம் செல்வேன் என்று கூறி உள்ளார்.

ஜெயலலிதா இறப்பில் மர்மம் இருப்பதாகக் கூறுவது பற்றிய செய்தியாளர் கேள்விக்குப் பதிலளித்துள்ளபோதே இவ்வாறு கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-


"ஜெயலலிதாவின் இறப்பில் மர்மம் இருப்பதால்தான் யாரையும் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. இதுதொடர்பில் ஒரு நல்ல விசாரணை நடத்தப்படும் வரையில் அது குறித்து பல கேள்விகள் தொடரும். சிகிச்சைக் காக 75 நாள்கள் இருந்தபோது, செவிலியர்களிடம் அவர் பேசியதாகச் சொல்லப்படுகிறது. இது உண்மை என்றால் அவரது குரலைக் கட்சித் தொண்டர்களுக்காகப் பதிவு செய்திருக்கலாமே. அமெரிக்க மருத்துவமனையில் எம்.ஜி.ஆர் இருந்தபோது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை போல் காணொலிப்பதிவு கூட வெளியிட்டிருக்கலாம்.

இதுபோல், அங்கு நடைபெற்ற தவறுகளை விசாரித்து, அதற்கான ஆதாரங்களைத் திரட்டிக் கொண்டிருக்கிறேன். எனக்கு அப்பலோ, தமிழக பொலிஸ் அதிகாரிகள் என பலதரப்பினரின் தொடர்பு உண்டு. அவர்களிடம் கிடைக்கும் ஆதாரத்தில் மர்மம் விலகாவிட்டால், நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பேன்"- என்று கூறி உள்ளார்.

இதேவேளை சொத்துக் குவிப்பு வழக்கின் நிலை தொடர்பான கேள்விக்கு பதிலளித்துள்ள சுப்பிரமணிய சுவாமி,

"இறப்பின் காரணமாக ஜெயலலிதாவின் பெயர் வழக்கில் இருந்து நீக்கப்படாது. அதன் தீர்ப்பில் குற்றங்கள் ஏற்கப்பட்டு, தண்டனை அளிக்கப்பட்டால் அதில், ஜெயலலிதா மறைவு காரணமாக அவருக்கு மட்டும் தண்டனையைச் செயற்படுத்த முடியாது.

மேலும் சுப்பிரமணிய சுவாமி, ஜெயலலிதாவின்



குடும்பத்தார்தான் அவரது சொத்துகளுக்கு வாரிசாக முடியும். ஜனநாயக முறைப்படி கட்சிதான் ஒரு பொதுச் செயலாளரைத் தெரிவு செய்ய முடியும். அ.தி.மு.கவினர் அனைவரும் சேர்ந்து சசிகலாவை பொதுச் செயலாளராகத் தெரிவு செய்தால் அதை எதிர்க்க யாருக்கும் சட்டத்தில் இடம் இல்லை" என்று குறிப்பிட்டார். (எ)

## கனடாவில் மிதமான நிலநடுக்கம்

டொரன்ரோ, டிசெ.17

கனடாவில் நேற்று முன்தினம் மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிச்டர் அளவில் 3.0 ஆகப்பதிவாகியுள்ளது.

கனடவின் நோவாஸ்கோடியா நகரின் டிக்பி என்ற தென்மேற்குப் பகுதியில் சுமார் 42 கிலோமீற்றர் தொலைவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இதனால் பெரிதும் அச்சமடைந்த மக்கள் அந்தப்பகுதியை விட்டு உடனடியாக வெளியேறி உள்ளனர் என்று கனேடிய வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் கடந்த 2015ஆம் ஆண்டு நோவா ஸ்கோடியா மாகாணத்தில் 3.8 ரிச்டர் அளவிலும், கடந்த ஆண்டு ஜூன் மாதமளவில் 3.2 ரிச்டர் அளவிலும் நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (எ)

# கலப்பு நீதிமன்ற பொறிமுறை தென்சூடானில் உடன் நிறுவுக

## ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் ஆபிரிக்க ஒன்றியத்துக்கு வலியுறுத்து



நியூயோர்க், டிசெ.17

தென் சூடானில் கலப்பு நீதிமன்றப் பொறிமுறை ஒன்றை ஆபிரிக்க ஒன்றியம் உடனடியாக நிறுவ வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் செய்ட்ராட் அல் ஹுஸைன் வலியுறுத்தியுள்ளார்.

மனித உரிமைகள் பேரவையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார் என்று ஐக்கிய நாடுகளின் உத்தியோகபூர்வ டுவிட்டர் வலைத்தளத்தில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பலவந்தமாக வெளியேற்றப்படல் உள்ளிட்ட தென் சூடானில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தாம் அதிக கரிசனை கொண்டுள்ளார் என்று அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''ஊடகவியலாளர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் பாதுகாப்புத் தரப்பினரால் இலக்கு வைக்கப்படுகின்றனர்.

இவ்வாறான மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணைகளை முன்னெடுப்பதற்காக கலப்பு நீதிமன்ற பொறிமுறை ஒன்றை ஆபிரிக்க ஒன்றியம் நிறுவவேண்டும்.

அத்துடன், தென் சூடானில் பொறுப்புக்கூறும் நடவடிக்கைகளை முன்னெடுத்து இனங்களுக்கு இடையே முரண்பாடுகள் களையப்பட வேண்டும்.

இந்நிலையில், தென் சூடானில் வன்முறையைத் தவிர்ப்பதற்கும், சமாதானத்துக்கான பேச்சுகளை ஊக்குவிப்பதற்குமான செயற்பாடுகளை ஐக்கிய நாடுகள் முன்னெடுக்கும்.''-என்றார். (எ)

## துருக்கியில் சர்வஜன வாக்கெடுப்பு?

துருக்கியில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் மார்ச் மாத ஆரம்பத்தில் இவ்வாறு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படக் கூடிய சாத்தியம் உண்டு என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் சாசனத்தில் திருத்தங்களைச் செய்து ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்றும் இது தொடர்பில் மக்களின் கருத்தை அறிந்து கொள்வதற்காக சர்வஜன வாக்கெடுப்புநடத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. கடந்த வார இறுதியில் ஆளும்கட்சி அரசியல் சாசனத் திருத்தம் தொடர்பில் நாடாளுமன்றில் யோசனைகளைச் சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் அலெப்போவில் வெளியேற்றம்



டமாஸ்கஸ், டிசெ.17

சிரியாவின்அலெப்போ நகரில் முற்றுகையில் இருக்கும் கிளர்ச்சியாளர்களின் பகுதியில் இருந்து 3 ஆயிரத்துக்கும் மேலானோர் பஸ்கள் மற்றும் அவசர மருத்துவ ஊர்திகள் மூலம் வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் கிழக்கு அலெப்போவில் மேலும் 50 ஆயிரம் பொது மக்கள் இருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது

எனினும் அந்தப்பகுதியில் இருக்கும் பொது மக்கள் அனைவரையும் வெளியேற்ற பல நாள்கள் செல்லும் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கூறியிருக்கிறது.

ரஷ்யாவின் ஆதரவோடு சிரியா அரச படைப்பிரிவுகள் எஞ்சியிருக்கும் அலெப்போவின் எல்லா பகுதிகளையும் கைப்பற்றியிருக்கின்றன.

அலெப்போவுக்கு விடுதலை கிடைத்திருக்கிறது என்றும், வரலாறு உருவாக்கப்பட்டுள்ளது என்றும் இந்த வெற்றியைப் பற்றி சிரிய ஜனாதிபதி அசாத் தெரிவித்திருக்கிறார். (எ)

## பார்க் போராளிகள் 110 பேருக்கு கொலம்பியா பொதுமன்னிப்பு

பார்க் பேராளிகள் 110 பேருக்கு கொலம்பியா பொதுமன்னிப்பு வழங்கியுள்ளது.

அண்மையில் பார்க் கெரில்லாக்களுக்கும் கொலம்பிய அரசுக்கும் இடையில் சமாதான உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது.

அரசியல்' ரீதியான குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

கொலைகள் மற்றும் பாலியல் வன் கொடுமைகளில் ஈடுபட்டவர்கள் மன்னிக்கப்படவில்லை என்று கொலம்பிய நீதி அமைச்சர் ஜோர்ஜ் டொன்டோனா தெரிவித்துள்ளார்.

அனைத்து மன்னிப்பு வழங்குதல் பரிந்துரைகளும் நீதிவான்களால் பரிசீலனை செய்யப்பட்டு இறுதித் தீர்மானம் எடுக்கப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார். (எ)

## உலகில் இளமைத்தோற்றத்துடன் 80 வயது விமானப் பணிப்பெண்!



நியூயோர்க், டிசெ.17

அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமானப் பணிப்பெண்ணான (வயது 80) பேட்டே நாஷ் என்பவர் உலகின் மிக இளமையான விமானப் பணிப்பெண்ணாகக் கருதப்படுகின்றார்.

அமெரிக்காவின் ஜனாதிபதியாக டுவைட் எய்சென்ஹோவர் என்பவர் பதவியேற்றிருந்த காலத்தில் பேட்டே நாஷ் தனது 21 ஆவது வயதில் ஈஸ்டர்ன் ஏர்லைன்ஸ் விமான நிறுவனத்தில் (தற்போது அமெரிக்கன் ஏர்லைன்ஸ்) விமானப் பணிப் பெண்ணாக நுழைந்தவர். அதே நிறுவனத்தில் இதுவரை விமானப் பணிப் பெண்ணாக இன்முகத்துடன் பணியாற்றிவரும் இவர், பணி ஓய்வைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்க நேரமில்லை என்கிறார்.

வொஷிங்டன் நகரில் இருந்து பாஸ்டன் நகருக்குச் செல்லும் விமானத்தில் தொடர்ந்து பணியாற்றிவரும் நாஷ், தனது பணிக்காலத்தில் கென்னடி உள்ளிட்ட அமெரிக்க ஜனாதிபதிகளுக்கு சேவை செய்துள்ளதாக மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறார்.

இந்த வழித்தடத்தில் வழக்கமாகச் செல்லும் பலரைத் தோழமையுடன் நலம் விசாரித்து, அன்புடன் உபசரிக்கும் இவருக்கு பலபேர் நண்பர்களாக உள்ளனர். தனது நண்பர்களைக் கட்டி அணைத்து பரவசப்படுத்தும் இவர் உடலில் சக்தி இருக்கும் வரை உழைத்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்.

எப்போது ஓய்வு? என்று யாராவது கேட்டுவிட்டால், ஏன்? வேலை செய்வது ஆனந்தமாகத்தானே இருக்கிறது? இங்கிலாந்து ராணி போல் எனது பணிக்காலத்தில் வைர விழாக்காண வேண்டும்.'' என்று தெரிவித்தார். (எ)

# சீனாவில் வேலைவாய்ப்புகளை கபளீகரம் செய்யும் ரோபோக்கள்

பீஜிங், டிசெ.17

சீனாவில் தயாரிப்புத் துறையில் ரோபோக்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. இதனால், பலர் வேலைவாய்ப்பை இழப்பது தெரியவந்துள்ளது.


இதுதொடர்பில் சீன ரோபோ தொழிலக கூட்டமைப்பின் தலைவர் டவோகுயி தெரிவித்ததாவது:-

சீனாவில் 2015 ஆம் ஆண்டில் தயாரிப்புத் துறையில் ஈடுபடுத்தப்படும் 68 ஆயிரம் ரோபோக்கள் விற்பனையாகின.

இவற்றில், சீனாவில் 22 ஆயிரத்து 257 ரோபோக்கள் தயாரிக்கப்பட்டன.

நடப்பு ஆண்டின் முதல் 11 மாதங்களில் சீன-வெளிநாட்டு கூட்டுத் தயாரிப்பில் 64 ஆயிரம் தொழில்துறை ரோபோக்கள் விற்பனையாகியுள்ளன.

2015 ஆம் ஆண்டின் இதே கால அளவில் இதன் விற்பனை 32 ஆயிரத்து 996-ஆக இருந்தது.



நடப்பு ஆண்டில் சீனாவில் ரோபோக்களின் விற்பனை 70 ஆயிரத்தைத்தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பொருள்களைத் தூக்குதல் மற்றும் இறக்குதல், கொண்டு செல்லுதல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் ரோபோக்களைப் பயன்படுத்துவது கணிசமாக அதிகரித்து வருகிறது.

இதற்கு எடுத்துக்காட்டாக, கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது நடப்பு ஆண்டின் முதல் 11 மாதங்களில் இவ்வகை ரோபோக்களின் விற்பனை 94.3 சதவீதம் அதிகரித்துள்ளது- என்றார்.

தயாரிப்புத் துறையில் ரோபோக்களின் ஆதிக்கம் அதிகரித்து வருவதை அடுத்து, அதனைச் சார்ந்து இருக்கும் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி உள்ளது. (எ)

## இன்று இலவச கண்சிகிச்சை

பருத்தித்துறை ஞானாலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வசதி குறைந்தவர்களுக்கான இலவச கண் வைத்திய சிகிச்சை முகாம் நடைபெறும்.

கண் வைத்திய நிபுணர் எஸ். சந்திரகுமார் சிகிச்சைகளை மேற்கொள்வார் என்று ஞானாலயம் நிர்வாகி அறிவித்துள்ளார். (இ)

## 'சீத்துவக்கேடு' கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,டிசெ.17

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் நடத்தும் கவிஞர் கு.றஜீவனின் 'சீத்துவக் கேடு' கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் நாவலர்கலாசார மண்டபத்தில் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத் தலைவர் கலாநிதி மனோன் மணி சன்முகதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் வாழ்த்துரையை 'கோப்பாய் சிவம்' பிரம்ம ஸ்ரீ ப.சிவானந்தசர்மாவும் வெளியீட்டுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள்தமிழ்த்துறைத் தலைவர் ஓய்வுநிலைப் பேராசிரியர் சி.சிவலிங்கராசாவும் ஆய்வுரையை கவிஞர் சோ.பத்மநாதனும் நிகழ்த்துவார்கள். (இ-54)

## அனுமதியின்றி மண் ஏற்றியவருக்கு அபராதம் விதிப்பு

சாவகச்சேரி, டிசெ.17

அனுமதிபத்திரம் இன்றி சட்டவிரோதமான முறையில் மண் ஏற்றி சென்ற உழவு இயந்திர சாரதிக்கு நேற்று முன்தினம் 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார் சாவகச்சேரி நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன்.

அத்துடன் மண்ணை பறிமுதல் செய்ய உத்தரவிட்டார். உழவுஇயந்திரத்தையும் பெட்டியையும் பதிவு பெற்ற உரிமையாளரிடம் ஒப்படைக்க கட்டளையிட்டார்.

இதேவேளை, அனுமதி யின்றி வயாவிளான் பகுதியில் கல் அகழ்ந்து எடுத்து சென்ற டிப்பர் வாகனத்தை அச்சுவேலி பொலிஸார் தடுத்து வைத்துள்ளனர். அத்துடன் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை அச்சுவேலி பகுதியில் வீதி ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் குறித்த டிப்பர் வாகனத்தை மறித்து சோதனை மேற்கொண்டனர். இதன் போது அனுமதிப் பத்திரம் இன்றி கல் அகழ்ந்து சென்றமை கண்டு பிடிக்கப்பட்டது. (ஐ-9)

# யாழ். இலக்கிய ஆர்வலர்களுடன் இந்திய, மலேசிய அறிஞர்கள் சந்திப்பு



உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கொழும்புக்கு வருகைதந்த இந்திய மற்றும் மலேசிய நாட்டு அறிஞர்கள் 35 பேர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தனர்.

இவர்களுக்கான வரவேற்பும் யாழ். இலக்கிய ஆர்வலர்களுடனான சந்திப்பும் வியாழன் மாலை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள கம்பன் கோட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் மறைந்த ஈழத்து ஆக்க இலக்கியவாதிகளான கவிஞர் கல்வயல் வே.குமாரசாமி, சாகித்யரத்னா முல்லைமணி மற்றும் கலாநிதி ஆறு.திருமுருகனின் தாயார் சரஸ்வதி ஆறுமுகம் ஆகியோரது ஆன்ம சாந்தி வேண்டி ஒரு நிமிட மௌனப்பிரார்த்தனை இடம்பெற்றது.

நிகழ்வில் செல்வி ச.ரவிச்சந்திரன் தமிழ்த்தெய்வ வணக்கம் இசைத்தார். கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் ச.லலீசன் தலைமையுரை ஆற்றினார்.

தலைவர் தனது தலைமையுரையில்-

"இனத்தால், மதத்தால், தேசத்தால் நாம் வேறுபட்டிருப்பினும் தமிழால் இணைந்திருக்கின்றோம். தமிழின் பெயரால் நாம் ஒற்றுமையாக வாழ்வோம்.

"எங்கள் மண்ணின் தாகங்களை ஏக்கங்களைச் சுமந்து செல்லுங்கள். உங்கள் ஊர்களில் எங்கள் கதைகளைச் சொல்லுங்கள். இங்கு தமிழ் வாழ்வு பெற்றால் உலகில் தமிழ் உன்னத நிலையில் வாழும்'' என்றார்.

தொடர்ந்து கருத்துரைத்த பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, சீறாப்புராணம் எழுதுவதற்கு எழுத்தாணி வழங்கியது யாழ்ப்பாணமே என்று தெரிவித்தார். அத்துடன் கடந்த காலங்களில் நிகழ்ந்த கசப்பான நிகழ்வுகளுக்காகத் தனது வருத்தத்தைத் தெரிவித்தார்.

மூத்த கவிஞர் சோ.ப. இலங்கையில் உள்ள கவிதைகள் பற்றியும் கவிஞர்கள் பற்றியும் கருத்துரைத்தார். இலங்கைக் கவிதைகள் பெருமை மிக்கவை. அவற்றுள் கிழக்கிலங்கை இஸ்லாமியக் கவிஞர்களின் கவிதைகள் முக்கியமானவை எனவும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ், உலகளாவிய நிலையில் தமிழை உயர்த்த வேண்டும் என்றும் உலக நிலையில் தமிழ் மொழி வாழ்த்து ஆக்கப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.





வடமாகாண அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம், இஸ்லாமியர்களின் மீள்குடியமர்வு முக்கியமானது. இதற்குத் தன்னாலான பங்களிப்பு என்றும் உண்டு என்று குறிப்பிட்டார்.

வடமாகாண உறுப்பினர் அஸ்மின், இஸ்லாமிய எழுத்தாளர்களது வருகைக்கும் அவர்களுடனான சந்திப்புக்கும் அதிக எண்ணிக்கையில் இலக்கியகாரர்கள் வந்திருப்பது மகிழ்வைத் தருவதாகக் கூறினார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன், தமிழகத்தில் தமிழ் ஊடகங்கள் கட்சி சார்ந்து இயங்குகின்றன. அத்துடன் அவற்றின் மொழிப் பிரயோகம் தமிழைத் தரம் தாழ்த்துவதாக அமைகின்றது. இந்த ஊடகங்கள் எம்மவர்களிடையேயும் செல்வாக்குச் செலுத்துகின்றது இவற்றுக்கு எதிராகப் போராட வேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம் என்றார்.

நிகழ்வில் கலந்து கொண்ட மாநாட்டு வருகையாளர் யாவரும் கருத்துக்களை வழங்கினர். யாழ். மண்ணில் தாம் கால்மிதித்தமை தமக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது என்று குறிப்பிட்டனர்.

கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் சி.பாஸ்கரா நிறைவுரையாற்றினார்.

வருகை தந்த குழுவில் கல்லூரிப் பேராசிரியர்கள், தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள், கவிதையாளர்கள், கட்டுரையாளர்கள், நாவலாசிரியர்கள், சிறு கதையாசிரியர்கள், குறும்பட இயக்குநர்கள், திரைப்படப் பாடலாசிரியர்கள் எனப் பலர் அடங்கியிருந்தனர். (ஐ)

## திருவாசக பெருவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.17

யாழ்ப்பாணம் இந்து சமயப்பேரவை நடத்தும் திருவாசகப் பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்குப் பேரவை நடராஜர் மண்டபத்தில் பேரவையின் செயலாளர் ஸ்ரீசிவ சக்திகிரீவன் தலைமையில் இடம் பெறும்.

ஆசியுரையை நல்லை ஆதின குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச் சாரிய சுவாமிகளும், தொடக்கவுரையை இந்து சமயப் பேரவைத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சி.க சிற்றம்பலமும் நிகழ்த்தவுள்ளனர். (இ)

## பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ.17

அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான இந்து தர்மாசிரியர் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை 9 மணிக்கு, யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியிலுள்ள குருகுல அலுவலகத்தில் நடைபெறும்.

இந்தக் கருத்தரங்கில், 'வேதங்களும், ஆகமங்களும்' எனும் தலைப்பில் சைவப் புலவர் நித்திய தசிதரனும், 'சமய ஞானிகளும் பெரியார்களும்' எனும் தலைப்பில் கலாபூஷணம் சிவமகாலிங்கமும் 'சைவசமய வரலாறும்' எனும் தலைப்பில் கு.பாலசண்முகனும், 'பன்னிருதிருமுறைகள்' எனும் தலைப்பில் திருமதி மா.அனந்த லக்சுமியும், 'கோயில் களும் கலைகளும்' எனும் தலைப்பில் கந்த.சத்தியதாசனும் விரிவுரையாற்றுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## வீட்டில் வைத்து கள் விற்ற இருவர் நீதிமன்றில் ஆஜர்

### 3 ஆயிரம் ரூபா அபராதம்

அச்சுவேலி டிசெ.17

இறக்கிய கள்ளை தவறணைக்கு வழங்காமல் வீட்டில் வைத்து விற்பனை செய்த இருவருக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார் மல்லாகம் மாவட்ட நீதிபதி ஏ.யூட்சன்.

மல்லாகம் மதுவரிநிலைய அதிகாரிகளின் திடீர் நடவடிக்கை கடந்த வாரம் மானிப்பாய், பன்னாலைப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது வீட்டில் வைத்து கள் விற்பனை செய்த மானிப் பாய் பகுதியைச் சேர்ந்த சீவல் தொழிலாளிக்கு ஆயிரம் ரூபாவும், கடந்த வழக்கு தவணை யின் போது மன்றில் ஆஜராகாத பன்னாலைப் பகுதியைச் சேர்ந்த தொழிலாளிக்கு 2 ஆயிரம் ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டது. (ம-9)

## சுகாதாரத்துக்கு கேடான மாட்டிறைச்சி விற்பனை செய்த இருவருக்குப் பிணை

ஊர்காவற்துறை, டிசெ.17

சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியின்றி வெட்டப்பட்ட சுகாதாரத்துக்கு ஒவ்வாத மாட்டிறைச்சியைக் கடையில்வைத்துவிற்பனை செய்த இருவரையும் தலா 50ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டுள்ள நீதிவான் வழக்கு விசாரணையை அடுத்த மாதம் 25ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார்.

ஊர்காவற்துறைப் பிரதேசத்தில் நகர்ப் பகுதியிலுள்ள மாட்டிறைச்சியைக் கடை ஒன்றில் சுகாதாரத்துக்குக் கேடு விளைவிக்கும் மாட்டிறைச்சி விற்பனை செய்யப் படுவதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.சஞ்ஜீவனுக்கு தகவல் கிடைத்தது. அதைத் தொடர்ந்து அக்கடைக்கு விரைந்து சென்ற சுகாதாரப் பரிசோதகர் இதுபற்றி விசாரணையில் ஈடுபட்டபோது யாழ்ப்பாணத்திலிருந்து இறைச்சி எடுத்து வரப்பட்டதாகத் தெரிய வந்தது.

அதை அடுத்து, கடையிலிருந்த 18 கிலோ இறைச்சியைக் கைப்பற்றி ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் ஒப்படைத்த சுகாதாரப் பரிசோதகர் கடை முதலாளிக்கும் விற்பனையாளருக்கும் எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

வழக்கு விசாரணை செய்த நீதிவான் இது வரையும் தலா 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டு மேல் விசாரணையை அடுத்த மாதம் 25ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார். (இ-59)

# உலக கிரிக்கெட் துறையை மேம்படுத்த ஐ.சி.சி., ஆசிய கிரிக்கெட் சபை இணக்கம்

கொழும்பு, டிசெ.17

கிரிக்கெட் விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்கு சர்வதேச கிரிக்கெட் சபையும் ஆசிய கிரிக்கெட் சபையும் ஒன்றிணைந்து செயற்படவுள்ளன.

இது தொடர்பில், நேற்று முன்தினம் காலை கொழும்பில் நடைபெற்ற விசேட கூட்டத்தின்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது என்று ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சுமதிபால மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஆசிய பிராந்தியத்தில் இளையோர் கிரிக்கெட் விளையாட்டுத்துறையை மேம்படுத்துவதற்கு சர்வதேச கிரிக்கெட் சபை கொண்டுள்ள ஆர்வத்தையும், அக்கறையையும் வெளிப்படுத்தும் நோக்கிலும், கூட்டொருமைப் பாட்டை உணர்த்தும் நோக்கிலும் சர்வதேச கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி டேவ் றிச்சர்ட்சன் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

ஐக்கிய அமெரிக்காவிலிருந்து டுபாய் திரும்பிய வழியில் நான் விடுத்த வேண்டுகோளை ஏற்று அங்கு செல்லாமல் டேவ்



றிச்சர்ட்சன் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

இலங்கை வருகை தந்த டேவ் றிச்சர்ட்சன் என். சி. சி.யில் நேற்று முன்தினம் நடைபெற்ற 19 வயதுக்குட் பட்டவர்களுக்கான இலங்கை மற்றும் நேபாள அணிகளுக்கு இடையிலான ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் ஆரம்பத்தையும் கண்டு களித்தார்.

இதனை அடுத்து சர்வதேச கிரிக்கெட் சபை மற்றும் ஆசிய கிரிக்கெட் சபை ஆகியவை தொடர்பான புதிய முகாமைத்துவக் கட்டமைப்பு குறித்து கலந்துரையாடியுள்ளோம்.

சர்வதேச கிரிக்கெட் சபை கொள்கையளவில் கடந்த வருடம் சில தீர்மானங்களை எடுத்தது.

போட்டிகள், நிர்வாகம், ஆசிய பிராந்தியம் மட்டுமல்லாமல் ஏனைய பிராந்தியங்களின் கிரிக்கெட் அபிவிருத்தி சம்பந்தமான சகலவிடயங்களையும் ஆகியவற் றைப் பொறுப்பேற்க சர்வ தேச கிரிக்கெட் சபை தீர்மானித்தது.

டாக்கா, மலேசியா, எடின்பரோ ஆகிய இடங்களில் சந்தித்து கலந்துரையாடியபோது ஆசிய பிராந்திய கிரிக்கெட் அபிவித்திக்கென பொதுவான திட்டம் வகுத்தோம்.

உலகின் ஏனைய பிராந்தியங்களை விட ஆசிய பிராந்தியத்திலேயே கிரிக்கெட்டுகான வளங்கள் அதிகளவில் இருக்கின்றன. எனவே ஆசியாவின் எதிர்கால கிரிக்கெட்டிற்காக இணைந்த திட்டம் ஒன்றை வகுத்துள்ளோம்.

இதற்கான சிபாரிசுகளை சர்வசேத கிரிக்கெட் சபையில் முன்வைக்குமாறு டேவ் றிச்சர்ட்சனிடம் கோரியுள்ளோம் என்றும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சர்வதேச கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி டேவ் றிச்சர்ட்சன் தெரிவித்தவை வருமாறு:-

சர்வதேச கிரிக்கெட் துறையை மேம்படுத்துவதே எனது முதலாவது பணியாகும்.

கிரிக்கெட் விளையாடும் நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், ஆற்றல் வெளிப்பாடுகளை அதிகரிப்பதற்கான அதிகாரிகளை நியமித்து கிரிக்கெட்டின் தரத்தை உயர்த்தவும் எண்ணியுள்ளேன்.

முப்பெரும் சக்திகள்

தொடர்பாக கடந்த வருடம் கொண்டுவரப்பட்ட திட்டத்தை அகற்றி அதில் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கும் இலங்கை போன்ற நாடுகளுக்கும் அதிக பங்கு கிடைக்கும் வகையிலான திட்டத்தை அறிமுகப்படுத்தவும், புதிய அவைத் தலைவர் ஷஹாரியார் எண்ணியுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குசல் ஜனித் பெரேராவுக்கு கட்டார் நிறுவனத்திட மிருந்து நட்டஈடுபெற்றுக்கொடுக்க முடியுமா என ஊடகங்கள் கேள்வி எழுப் பியபோது, குசல் ஜனித் பெரேராவும் அவரது சட்டக் குழுவினரும் உரிய நடவடிக்கை எடுத்தால் அதற்கான ஒத்துழைப்பு வழங்க முடியும்" என சர்வதேச கிரிக் கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி பதிலளித்துள்ளார்.

## தாச்சி சங்கத்துக்கு புதிய நிர்வாகம்

சுன்னாகம் டிசெ.17

யாழ். மாவட்ட தாச்சி சங்கத்துக்கு புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

2017 ஆம் ஆண்டுக்கான புதிய தலைவராக எஸ்.சண்முகலிங்கம், செயலாளராக எஸ்.சற்குணலிங்கம், பொருளாளராக பீ.ஜெயவிந்தன், கணக்குப் பரிசோதகராக ஜெனதாஸ் உட்பட 11 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சங்கத்தின் புதிய நிர்வாகத்தினால் கள நடுவர்களின் நலன்களைப் பேணுதல், இளைய தலைமுறைக்கு தாச்சியைக் கற்றுக்கொடுத்தல், உறங்கு நிலையில் உள்ள கழகங்களை இயங்கு நிலைக்குக் கொண்டுவருதல் ஆகிய விடயங்கள் ஆராயப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என்று தலை வர் அறிவித்துள்ளார். ம-54)

## வவுனியா- மன்னார் மாவட்ட நட்புறவை பேணுவதற்கான உதைபந்து சுற்றுப்போட்டி

வவுனியா, டிசெ.17

புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைத்துக் கொள்ளப்பட்ட முன்னாள் போராளிகள் பங்குபற்றிய வவுனியா, மன்னார் மாவட்ட நட்புறவை பேணுவதற்கான உதைபந்துச் சுற்றுப்போட்டி வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி வளாகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

சிறைச்சாலை மறுசீரமைப்பு புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் புனர்நிர் மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் அனுசரணையின் இந்த உதைபந்துப் போட்டி இடம்பெற்றுள்ளது.

வவுனியா புனர்வாழ்வு நிலையத்தின் பணிப்பாளர் கேணல் எம்.ஏ.ஆர்.கமிடோன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்





இணைப்பதிகாரிகள், மாவட்ட பொறுப்பதிகாரிகள், கல்வியியற் கல்லூரி விளையாட்டு பொறுப்பதிகாரி மற்றும் விளையாட்டு பொறுப்பதிகாரிகள் மற்றும் வீரர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வவுனியா, மன்னாரைச் சேர்ந்த C8 அணிகள் பங்கு[illegible]றின (க-100)

## தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் உதைபந்தாட்ட அணிக்கு காசோலை

### அமைச்சர் டெனீஸ்வரன் வழங்கினார்

மன்னார், டிசெ.17

மன்னார் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் மாவட்ட உதைபந்தாட்ட அணிக்குச் சீருடைகளைக் கொள்வனவு செய்வதற்கு வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் நிதியுதவி அளித்தார்.

மேற்படி உதைபந்தாட்ட அணி தேசியரீதியாக இடம்பெறுகின்ற உதைபந்தாட்டப் போட்டிகளுக்குச் செல்வதற்கு சீருடைகளை இல்லை என்றும் அவற்றைத் தந்துதவுமாறும் மன்னார் மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்தக் கோரிக்கையை



ஏற்றுக் கொண்ட டெனீஸ்வரன், அவர்களுக்கான 15 சீருடைகளைக் கொள்வனவு செய்தற்கு 15 ஆயிரம் ரூபா நிதியுதவி அளித்துள்ளார்.

இதற்கான காசோலையை அமைச்சர், மன்னார் மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்ற அதிகாரியிடம் கடந்த வியாழக் கிழமை காலை 10.30 மணிக்கு மன்னாரில் உள்ள அமைச்சின் உப அலுவலகத்தில் வைத்துக் கையளித்துள்ளார். (ம-81)

# இந்தியாவுக்கு எதிரான 5 ஆவது டெஸ்ட்: இங்கிலாந்து அணி நிதானமான ஆட்டம்!



சென்னை, டிசெ.17

இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதும் 5 ஆவது டெஸ்டில் இங்கிலாந்து நிதானமாக ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதும் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 4 போட்டிகள் நடந்து முடிந் துள்ளன.

ராஜ்கோட்டில் நடந்த முதல் டெஸ்ட் சமநிலையில் முடிந்தது.

விசாகப்பட்டினத்தில் நடந்த 2 ஆவது டெஸ்டில் 246 ஓட்டங்கள் வித்தியா சத்திலும், மொகாலியில் நடந்த 3 ஆவது டெஸ்டில் 8 விக்கெட் வித்தியாசத் திலும், மும்பையில் நடந்த 4 ஆவது டெஸ்டில் இன்னிங்ஸ் மற்றும் 26 ஓட்டங்கள் வித்தியாசத்தி லும் இந்திய அணி வெற்றி பெற்றது.

இதனால் 3-0 என்ற கணக்கில் இந்தியா முன்னிலையில் இருக் கிறது.

இரு அணிகள் மோதும் 5 ஆவது மற்றும் கடைசிப் போட்டி சென்னை சேப்பாக்கம் எம்.ஏ.சி மைதானத்தில் நேற்றுத் தொடங்கியது.

இந்திய அணியில் இரு மாற்றங்கள் செய்யப்பட்டு இருந்தன. புவனேஸ்வர் குமாருக்கு பதில் இஷாந்த் சர்மா இடம்பெற்றார். கடந்த போட்டியில் சதம் அடித்த சுழற்பந்து வீச்சாளர் ஜெயந்த் யாதவுக்குப் பதில் அமித் மிஸ்ராவுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

இங்கிலாந்து அணியில் காயம் அடைந்த அண்டர் சன் மற்றும் கிறிஸ்வோக்ஸ் நீக்கப்பட்டனர். அவர்க ளுக்குப் பதில் ஸ்டூவர்ட் பிராட், புதுமுக வீரர் டவ்சன் இடம்பெற்றனர்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கி லாந்து அணி துடுப்பாட் டத்தைத் தேர்வு செய்தது. தொடக்க வீரர்களாக குக், ஜெனிங்ஸ் களம் இறங்கினார்.

6 ஆவது ஓவரில் இங்கிலாந்து முதல் விக் கெட்டை இழந்தது. இஷாந்த் சர்மா பந்தில் ஜெனிங்ஸ் விக்கெட் காப்பாளர் பார்த்தீவ் பட்டே லிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அவர் ஒரு ஓட்டத்தை மாத்திரம் எடுத்தார்.

அடுத்து ஜோரூட் களம் இறங்கினார். அணித் தலை வர் குக் 10 ஓட்டங்களில் ஜடேஜாவின் பந்தில் ஸ்லிப் பகுதியில் பிடியெ டுப்புக்கு ஆளானார். அப்போது இங்கிலாந்து அணியின் ஓட்ட எண் ணிக்கை 21 ஆக இருந்தது. அடுத்து ஜோரூட்டுடன் மொய்ன் அலி ஜோடி சேர்ந்தார். இருவரும் நிதானமாக விளையாடி னர்.

இங்கிலாந்து 23.1 ஓவரில் 50 ஓட்டங்களைத் தொட்டது. மதிய உணவு இடைவேளையின் போது இங்கிலாந்து 29 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 68 ஓட்டங்களை எடுத்தது. ஜோரூட் 88 ஓட்டங்களில் ஜடேஜாவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த பரிஸ்டோவையும் 49 ஓட்டங்களுடன் ஜடேஜா வீழ்த்தினர்.

நேற்றைய நாள் ஆட்ட முடிவில் இங்கிலாந்து அணி 90 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 284 ஓட்டங்களை எடுத்திருந்தது. மொய்ன் அலி 120 ஓட்டங்களு டனும் ஸ்டோக்ஸ் 5 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

## ரொனால்டோ 500 கோல்கள் அடித்து சாதனை




நியூயோர்க், டிசெ.17

கிளப் அணிகளுக்கிடை யிலான உதைபந்தாட்டப் போட்டிகளில் கிறிஸ்டி யானோ ரொனால்டோ 500 கோல்கள் அடித்து சாதனை படைத்துள்ளார்.

போர்த்துக்கல் கால்பந்து அணியின் தலைவர் கிறிஸ் டியானோ ரொனால்டோ. உதைபந்தாட்ட உலகின் முடிசூடா மன்னனாக திகழ்ந்து வரும் இவர் ஸ்பெயினை சேர்ந்த ரியல் மாட்ரிட் அணிக்காக விளையாடி வருகிறார்.

கிளப் அணிகளுக்கு இடையேயான உலகக் கோப்பை உதைபந்தாட்டப் போட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 2 ஆவது அரை இறுதியில் ரியல் மாட்ரிட் அணி 2-0 என்ற கோல் கணக்கில் கிளப் அமெரிக்க அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இதில் ரொனால்டோ ஒரு கோல் அடித்தார். இது அவர் கிளப் போட்டிகளில் அடிக்கும் 500 ஆவது கோலாகும்.

## தொடர்ச்சியான வெற்றிகளினால் மிகை நம்பிக்கை ஏற்படவில்லை!

### விராட் கோஹ்லியின் தன்னடக்கம்



சென்னை, டிசெ.17

எனது தலைமையின் கீழ் 5 டெஸ்ட் தொடர்களை இந்திய அணி வென்ற தனால், மிகை நம்பிக்கை ஏற்படவில்லை என்று இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

நேற்றைய சென்னை டெஸ்ட் போட்டிக்கு முன்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் பேலும் தெரிவித்தவை வருமாறு:-

இன்னும் உலகம் முழு தும் உள்ள அதிகமான மைதானங்களில் ஆட வேண்டியுள்ளது. இப்போதைக்கு அணி நல்லநிலையில் உள்ளது. மாறிவரும் அணி என்ற நிலையிலிருந்து இப்போது வெற்றிபெற தொடங்கியுள் ளோம். ஆனால், இதனை நான் மிகைநம்பிக்கையாக எடுத்துக் கொள்ளமாட் டேன்.

நான் ஏற்கெனவே கூறி யது போல் இது ஒரு தொடர்ச்சியான நடை முறையாகும். இதே வெற்றிப் பாதையை அடுத்த 5 தொடக்கம் 7 அல்லது 8 ஆண்டுகளுக் குத் தக்கவைக்கவேண் டும். அப்போதுதான் முதல் தர அணியாகி உலக கிரிக் கெட்டில் ஓர் அடையா ளத்தை ஏற்படுத்த முடியும். நாங்கள் இதனை அனைத்து வடிவங்களிலும் செய்ய விரும்புகிறோம். இதன் மூலம் உலக அரங் கில் இந்திய கிரிக்கெட் டிற்கு ஒரு சிறந்த அடையா ளத்தை ஏற்படுத்த விரும்பு கிறோம்.

ஆனால், இதற்கு நிறைய திறமைகளும் தீவிர மனோ பாவங்களும் தேவை யாகும். உடலத்தகுதி, கடின உழைப்பு உள்ளிட்டவை எமது அணி இந்த நிலையை அடைய முக்கி யக் காரணிகளாகும்.

நேர்மையாகக் கூற வேண்டுமெனில், வீழ்த்த முடியாத அணி என்றெல் லாம் நாங்கள் நினைக்க வில்லை. ஒவ்வொரு எதிர ணியினரையும் நாங்கள் மதிக்கிறோம். ஒவ்வொரு முறையும் எங்களுக்கு நெருக்கடி கொடுக்கப்ப டுகிறது என்பதை நாங்கள் ஒப்புக் கொள்கிறோம்.

எதிரணிகள் எங்களை நெருக்கடிக்குள் தள்ளும் என்பதை அறிந்தே செயல் படுகிறோம்.- என்று தெரிவித்துள்ளார்.

## சென்னை டெஸ்டில் ஜெயலலிதாவுக்கு கிரிக்கெட் வீரர்கள் அஞ்சலி செலுத்தினர்!



சென்னை, டிசெ.17

சென்னையில் நேற்று ஆரம்பமான 5 ஆவது டெஸ்ட் போட்டியின்போது இந்தியா, இங்கிலாந்து வீரர்கள் மறைந்த முன் னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு அஞ்சலி செலுத்தியுள் ளனர்.

இந்தியா-இங்கிலாந்து இடையிலான 5 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சென்னையில் நேற்று தொடங்கியது.

இந்தப் போட்டி சென்னையில் நடை பெறுமா என்ற சந்தேகம் முன்னர் நிலவியிருந்த போதிலும், பின்னர் போட்டி நடைபெறும் என்று உறுதிப்படுத்தப்பட் டிருந்தது.

கடந்த 4 போட்டிகளில் மூன்றை வென்றதன் மூலம் ஏற்கெனவே தொடரைக் கைப்பற்றி விட்ட இந்திய அணி, இந்தப் போட்டியிலும் இங்கிலாந்தை வீழ்த்தி வரலாற்று வெற்றியை பதிவு செய்யும் முனைப் பில் களமிறங்குகிறது.

போட்டி தொடங்கும் முன்பு இரு அணி வீரர்க ளும் ஜெயலலிதாவின் மறைவுக்காக இரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தி னார்கள். அத்துடன், இரு அணி வீரர்களும் தங்கள் கைகளில் கறுப்புப் பட்டி அணிந்து விளையாடினர் என்பது குறிப்பிடத்தக்கது.

*தற்கொலைத் தாக்குதல் குறித்து பிரபாவை விசாரிக்க கேட்டது போல*

# ஊடகவியலாளரைத் தாக்கியவரிடமே அது பற்றி விசாரிக்கக் கோரும் அரசு

## *கிண்டலடிக்கிறார் நாமல் ராஜபக்ஷ*

அம்பாந்தோட்டையில் ஊடகவியலாளர் மீது தாக்குதலை நடத்தியவர் மீது விசாரணை நடத்தாமல், ஊடகவியலாளரைத் தாக்கிய கடற்படைத் தளபதியிடம் விசாரணை அறிக்கையைக் கோருவது 'திருடனின் தாயிடம் தகவல் கோரியமை'க்குச் சமனாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொலைக் குற்றங்கள் அதிகரித்திருக்கின்ற நிலையில் இது குறித்துத் தேடாமல் நல்லாட்சி அரசு ஊடகவியலாளர்கள் மீது குற்றம் தேடுகின்றது என்றும் நாமல் ராஜபக்ஷ விசனம் வெளியிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மூத்த புதல்வரான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நேற்றைய தினம் பொலிஸ் நிதிமோசடி விசாரணைப் பிரிவில் முன்னிலையாகினார்.

ரக்பி விளையாட்டை மேம்படுத்த எனப் பெற்றுக்கொள்ளப் பட்ட நிதியைத் தனியார் நிறுவனமொன்றின் முதலீட்டுக்காகப் பயன்படுத்திய குற்றச்சாட்டுத் தொடர்பான விசாரணைக்கே நாமல் அங்கு அழைக்கப்பட்டிருந்தார்.

விசாரணைகளின் நிறைவில் பொலிஸ் நிதிமோசடி விசாரணைப் பிரிவு வளாகத்தில் கூடியிருந்த ஊடகவியலாளர்கள் மத்தியில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கருத்துக்களை வெளியிடும் போதே மேற்கண்டவாறு கூறினார். அங்கு நாமல் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

'திருடனின் தாயிடம் தகவல் கேட்டது போல' கடற்படைத் தளபதியால் இழைக்கப்பட்ட தவறு தொடர்பில் அவரிடமே அறிக்கை கோரப்பட்டது. சிறந்த நல்லாட்சி நிலவுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் தற்போதும் செயற்பட்டால் தற்கொலைத் தாக்குதல்கள் தொடர்பில் புலிகளின் தலைவரிடம் அரசு அறிக்கை கோரியிருக்கும்.



இன்று ஊடவியலாளர்களின் ஒழுக்கக்கோவை, அறிக்கையிடல், ஊடகவியலாளர் முறைப்பாடு செய்த பொலிஸ் நிலையம் தொடர்பாக அரசு தகவல் தேடுகின்ற போதிலும், தாக்குதல் நடத்தியவரைத் தேட வில்லை. ஊடகவியலாளரைத் தாக்கியமை பற்றித்தேடுங்கள். ஆனால் அறிக்கை கோரப்பட்டது கடற் படைத் தளபதியிடம். அரசுக்குப் பாரிய நட்டத்தை ஏற்படுத்திய மத்திய வங்கிக் கொடுக்கல் வாங்கல் பற்றித் தேடுவதில்லை.

இந்த நாட்டின் உயர் பீடங்களிலுள்ளவர்களின் புதல்வர்கள் இரவு நேரக் களியாட்ட விடுதிகளுக்குச் சென்று சேதம் விளைவித்தனர். அதற்காகப் பொலிஸ்மா அதிப ருக்குத் தொலைபேசி ஊடாக அழைத்து அமைச்சர்கள் ஆலோசனை வழங்கினார்களா? வழக்குத் தொடர்ந்தார்களா? இல்லை. ஆனால் வெள்ளைக் கோட்டை மீறிச்சென்ற பெண்ணிடம் விசாரணை நடத்துகின்றனர். நாட்டில் கொலைக் குற்றங்கள் அதிகரித்திருக்கின்றன எனச்செய்தி வெளியாகியுள்ளது. நவம்பர் மாதம் 38 கொலைகள் இடம்பெற்றுள்ளன. இதுகுறித்துப் பொலிஸ்மா அதிபர் தேடாமல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிள்ளைகள் வெள்ளைக் கோடுகளை மீறி வாகனம் செலுத்துகின்றமையைப் பற்றித்தான் தேடுகிறார். -என்றார்.

# நண்பனுக்காகக் 'குதிரை ஓடியவரை' காட்டிக்கொடுத்த கைத்தொலைபேசி

*நெடுந்தீவுப் பாடசாலையொன்றில் நேற்றுச் சம்பவம்*

நெடுந்தீவு டிசெ.17

நெடுந்தீவில் உள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்று வரும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தனது நண்பனுக்காகக் குதிரை ஓடிய ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை வசமாக மாட்டிக்கொண்டார். இவரது கைத் தொலைபேசியே இவரைக் காட்டிக்கொடுத்தது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

இலங்கை மின்சார சபையில் பணியாற்றும் இளைஞன் ஒருவரின் பணியை நிரந்தரமாக்குவதற்கு க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் கணிதம் உள்ளிட்ட சில பாடங்களைப் பூரணப்படுத்தவேண்டி இருந்தது. இதனால் அவருக்கு உதவ முன் வந்த அவரது நண்பன், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் அவருக்காகத் தோற்றியுள்ளார்.

ஐந்து பாடங்களுக்குத் தோற்றிய இவர், நேற்று ஆறாவதாக சித்திர பாடத்துக்கும் தோற்றினார். அப்போது அவர் கைத் தொலைபேசியில் உரையாடியமையை அவதானித்த பரீட்சை மேற்பார்வையாளர்கள் தொலைபேசியைப் பறித்தது டன் அவரிடம் விசாரணை மேற்கொண்டனர். அப்போதே அவர் போலிப் பரீட் சார்த்தி என்ற விடயம் தெரிய வந்தது.

யாருக்காக அவர் பரீட்சைக்குத் தோற்றினாரோ அவருடனேயே தொலைபேசியில் உரையாடினார் என்பதும் கண்டறியப் பட்டது.

இதனையடுத்து அவர் பொலிஸாரிடம் கையளிக்கப் பட்டார். பொலிஸார் அவரிடம் நடத்திய விசாரணைகளைத் தொடர்ந்து உண்மையான பரீட்சார்த்தியும் கைது செய்யப்பட்டார். இவர்கள் இருவரும் நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம)

# ஊரணிப் பகுதி மீன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் பலாலி இராணுவ முகாமில் இடம்பெற்ற சந்திப்பின் போது இதற்கான இணக்கம் காணப் பட்டதாகத் தெரிய வருகின்றது.

இந்தச் சந்திப்பில் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எஸ்.சுகிர்தனும் பங்குபற்றினர்.

தையிட்டி, ஊறணிப் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் தமது தொழிலைச் செய்வதாயின் அப்பகுதியில் உள்ள கப்பல்துறை, நடுத்துறை, ஊத்தலடி, பழந்தலடி ஆகிய நான்கு மீனவ இறங்கு துறைகளையும் அவர்கள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்க வேண்டும் என்பதை மாவை சேனாதிராஜா எம்.பி., வடபகுதி படைகளின் தளபதிக்குச் சுட்டிக்காட்டினார்.

இந்த நான்கு துறைகளில் குறைந்தபட்சம் இரண்டையாவது மீனவர்கள் பயன்படுத்துவதற்கு உடனடியாக அனுமதிக்குமாறும் அவர் கேரினார்.

அக்கோரிக்கையைச் சாதகமாகப் பரிசீலித்து அடுத்த ஆண்டின் முதல் கால் பகுதிக்குள் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு எல்லா முயற்சிகளையும் தாம் எடுப்பார் என யாழ். படைகளின் தளபதி, மாவை சேனாதிராஜாவுக்கு உறுதியளித்தார் என நம்பகரமாக அறிய வந்தது.

மேற்படி மீனவ இறங்கு துறைகள் காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து சுமார் 3 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளன.

இதேசமயம், மயிலிட்டிப் பகுதியில் சில பிரதேசங்களை மக்கள் பாவனைக்கு விடுவிப்பது குறித்தும் வடபகுதி கட்டளைத் தளபதி ஆராய்ந்து வருகின்றார் எனத் தெரிவிக்கப்பட்டது.

வலி. வடக்கில் மீளக்குடியமரும் மக்களின் கல்வி வசதிக்காக பலாலி வடக்கு அமெரிக்க மிஷன் பாடசாலைக் கட்டடத்தையும் கல்விப் பாவனைக்கு ஒப்படைக்கும் படியும் மாவை சேனாதிராசா எம்.பி, யாழ். படைகளின் தளபதியிடம் கோரினார் என்றும் -

அது குறித்துப் பரிசீலிக்கப் படும் என படைத்தளதி தெரிவித்தார் என்றும் - தெரிய வந்தது. (உ)

## தமிழகத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையம் எச்சரித்துள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை மாலை அந்தமானுக்கு கிழக்கே காற்றழுத்த தாழ்வு மண்டலம் ஒன்று உருவாகியுள்ளது எனச் சென்னை வானிலை ஆய்வு நிலையம் நேற்றிரவு அறிவித்துள்ளது.

இந்தக் காற்றழுத்த தாழ்வு மண்டலம் வடக்கு மற்றும் வட மேற்கு திசையில் நகர்ந்து அடுத்த நான்கு நாள்களில் தமிழகக் கடலோரப் பகுதிக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது வலுப்பெற்று புயலாக மாறும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

கடந்த வாரம் வந்த 'வர்தா' புயலில் பாதிக்கப்பட்ட சென்னை இதுவரை இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை. சென்னை மக்கள் மின்சாரம், தண்ணீர் இல்லாமல் தவித்து வருகின்றனர். இந்நிலையில் மற்றொரு புயல் அறிவித்தல் வெளியாகியுள்ளது.

இதேவேளை, 'வர்தா' புயலின் தாக்கத்தால் வளி மண்டல மேலடுக்கில் காற்று சுழற்சி ஏற்பட்டு தமிழகத்தில் தற்போதும் பரவலாக மழை பெய்து வருகிறது என வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

# பொலிஸ் அதிகாரி கைதானார்

கொழும்பு, டிசெ.17

ஹோமாகம குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி, பெண் ஒருவரை அவதூறுப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாவலவில் உள்ள தனது வீட்டுக்குள் இந்தப் பொலிஸ் அதிகாரி அத்துமீறி நுழைந்து அட்டகாசம் புரிந்தார் எனச் சம்பந்தப் பட்ட பெண் முறைப்பாடு செய்திருந்தார். அதனடிப்படையிலேயே பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்டார்.

வெலிக்கடை பொலிஸ் பிரிவு குற்றத் தடுப்பு அதிகாரியாக இருந்த சமயம் இந்த அதிகாரிக்கும் பெண்ணுக்கும் இடையில் பழக்கம் ஏற்பட்டிருப்பதாக விசாரணைகளில் தெரிய வந்திருப்பதாகக் கூறப்பட்டது. (உ)

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக் வெல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தற்பொழுது நாட்டின் நிலை மிக ஆபத்தான கட்டத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டு இருக்கின்றது. ஜனாதிபதியோ தன் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டிய முப்படைகளின் அதிகாரங்களைப் பற்றி வாய் திறக்காமல் இருக்கின்றார். ஆனால் பிரதமர் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கையில் எடுத்துக் கொண்டு நாட்டை இரண்டாகப் பிரிப்பதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றமையைப் பார்க்கக் கூடியதாக உள்ளது.

அண்மையில் அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சராக உள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதுவரைக்கும் எதனையும் கூறவில்லை.

ஆனாலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பில் எடுக்கும் நடவடிக்கைகளைப் பார்த்தால் ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பிரதமர் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளார் என்பது தெளிவாகத் தெரிகின்றது. ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டிய அதிகாரங்கள் வேறு ஒருவருக்குக் கொடுக்கப் பட்டுவிட்டனவா? அல்லது யாராவது வலுக்கட்டாயமாக அதிகாரங்களைப் பயன் படுத்துகின்றார்களா? என்ற சந்தேகம் எழுகின்றது.

இப்போதைய நிலைவரப்படி நாட்டின் முப்படைகளை இயக்கும் அதிகாரங்களைப் பிரதமரே தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளார் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

அதேபோன்று அமைச்சர் சரத்பொன்சேகா அம்பாந்தோட்டை தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ளார். இவர் இறைச்சிக்காகப் பின்னால் செல்லும் விலங்கு போல செயற்படும் ஒருவராகவே காணப்பட்டு வருகின்றார் என்பதும் குறிப்பிட்டுக் கூற வேண்டிய ஒன்றாகும்.

சரத்பொன்சேகா யுத்த காலங்களில் தனது கடமையைச் சரிவரப் பயன்படுத்தியுள்ளாரா என்ற சந்தேகம் தற்போது எழுகின்றது. நான் முன்னர் தேசிய பாதுகாப்பு ஊடகப் பேச்சாளராகக் கடமையாற்றியுள்ளேன். - என்றார். (உ)

## நாட்டுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் சமர்ப்பித்து நிறைவேற்றிக் கொள்ள அரசு முயற்சிக்கிறது எனவும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி கூறியுள்ளது.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சி ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று நடைபெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும மற்றும் கெஹலிய ரம்புக் வெல ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்கு கெஹலிய ரம்புக் வெல உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

புதிய அரசமைப்பு ஒற்றையாட்சியைமையமாகக் கொண்டதாகவும், பௌத்தத் துக்கு மாத்திரமே முக்கியத்துவம் கொடுப்பதாகவும் முன்வைக்கப் பட்டால் மாத்திரமே அதனை ஏற்றுக் கொள்ள முடியும்.

நாட்டைப் பிளவுபடுத்தி, பௌத்தத்துக்கும் அதன் கலாசாரத்துக்கும் அழிவுகளை ஏற்படுத்தும் வகையிலேயே புதிய அரசமைப்பு உள்ளது. இதனை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

புதிய அரசமைப்பு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவுடன் நிறைவேற்றப் பட்டு விட்டால் நாடு பிளவுபட்டு இப்போது இருக்கும் சமாதானம் இல்லாமல் போய் முழு நாடுமே அழிந்து போகும் அபாயம் ஏற்படும்.

அப்படி அரசமைப்பு உருவாக்கப்பட்டு விட்டால் 20 வருடங்கள் அல்ல, எத்தனை வருடங்களானாலும் அதனை மாற்றியமைக்க முடியாது என்பதையும் பொதுமக்கள் கருத்திற்கொள்ள வேண்டும்.

அதற்கு நாம் இடம் கொடுத்து விட்டால் எதிர்காலச் சந்ததிகள் எமது கல்லறைகளின் மீது எச்சிலை உமிழ்ந்து, நீங்கள் தான் இவற்றுக்குக் காரணம் என்று கூறிவிடும் நிலை ஏற்படும் என்பதை மக்கள் நினைவில் வைத்து கொள்ள வேண்டும்.

நாட்டைக் கூறு போட்டு விற்பனை செய்யும் மைதானமாக இலங்கையை இந்த அரசு மாற்றி வருகின்றது.

2020ஆம் ஆண்டளவில் இந்த நாடு எலும்புத்துண்டாகவே மாறிவிடும். இலங்கை சர்வதேச போர்த் தளமாக மாறி விடும். ஒரு புறத்தில் பலாலியும், சம்பூர் பகுதியும் இந்தியாவுக்கும், மறு புறத்தில் திருகோணமலை அமெரிக்காவுக்கும் வழங்கப்படுகின்றன.

எமது ஆட்சியின்போது, இந்த அரசுக்கு மேலும் 5 ஆண்டுகளைக் கொடுத் தால் சீனாவின் கொலனியாக இலங்கையை மாற்றிவிடுவார்கள் என்று கூறினார்கள். இன்று சீனாவின் கொலனியாக இந்த நாட்டை மாற்றியமைப்பது யார்?

இங்கு சீனாவின் கொலனியும், அங்கு அமெரிக்காவின் கொலனியும், மற்றைய இடத்தில் இந்தியாவின் கொலனியும் என மாற்றி இந்த நாட்டை விளையாட்டுத் திடலாக்கி இளைஞர்களை மீண்டும் ஆயுதமேந்தும் நிலைக்குத் தள்ளிக் கொண்டிருக்கிறது நல்லாட்சி அரசு.

புதிய அரசமைப்பு தொடர்பில் புதுமையான அவசரம் நிலவி வருகிறது. ஜனவரி 9,10,11 ஆம் திகதிகளில் அறிக்கைகளைச் சமர்ப்பித்துப் பேசவிருக்கின்றனர். ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி புதிய அரசமைப்பை நிறைவு செய்து நாடாளுமன் றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்ற எதிர்பார்க்கின் றனர் என்ற தகவலும் கிடைத்துள்ளது.

தமது பகுதிகளிலுள்ள பிரதிநிதிகளைச் சந்தித்து, இந்தக் கேடு நிறைந்த அரசமைப்புக்கு ஆதரவாகக் கை உயர்த்த வேண்டாம், அவ்வாறு உயர்த்தினால் பிரதேசங்களுக்கு வர இடமளிக்க மாட்டோம் என்பதை மக்கள் அவர்களுக்குக் கூற வேண்டும். தற்பொழுது நாட்டின் நிலை மிக ஆபத்தான கட்டத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டு இருக்கின் றது. - என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

## மலேசியாவில் மரணமடைந்த மட்டக்களப்பு இளைஞரின் சடலம் நேற்று நாட்டுக்கு கொண்டுவரப்பட்டது

மட்டக்களப்பு, டிசெ.17

மலேசியாவில் மரணமடைந்த மட்டக்களப்பு இளைஞரின் சடலம் நேற்று வெள்ளிக்கிழமை இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனை தேவபுரம் பாடசாலை வீதி எனும் முகவரியை சேர்ந்த சந்திரன் சிறிஸ்கந்தராஜா (வயது-23) என்பவரே மலேசியாவில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படிநபர் மலேசியாவில் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

இவர் இறந்த விடயம் கடந்த 10 ஆம் திகதி இரவு தொலைபேசி மூலம் தங்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டது என அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து சடலத்தை இலங்கைக்கு கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளை தாங்கள் மேற்கொண்டனர் எனவும் இறந்தவரின் உறவினர்கள் தெரிவித்தனர். (ம)

### இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை 7.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை நாடு முழுவதும் 661 தேர்தல் மத்திய நிலையங்களில் வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது எனத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தெரிவிக்கின்றது.

தேர்தலுக்காக 916 இளைஞர், யுவதிகள் வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்தனர். வாக்களிப்பதற்காக 340,000 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இளைஞர் நாடாளுமன்றத்தின் 225 ஆசனங்களுக்கு 160 உறுப்பினர்கள் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

### கருணாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் திகதி ஹொங்கொங்கில் இருந்து ஜனாதிபதி செயலகத்துக்கு கொண்டுவரப்பட்டது.

அந்த வாகனம் முன்னாள் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்கவால் துறைமுகத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி செயலகம் அதைக் கருணாவுக்கு வழங்கியது.

இந்த நிலையில், கடந்த பொதுத் தேர்தலின் பின்னர் கருணாவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி கிடைக்காத நிலையில் அவர் அந்த வாகனத்தை மீண்டும் ஜனாதிபதி செயலகத்திடம் ஒப்படைக்கவில்லை.

அது பழுது பார்க்கும் இடத்தில் இருந்து கடந்த ஒக்டோபர் மாதம் 28ஆம் திகதி பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அந்த வாகனத்தை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கருணா கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

இந்த நிலையிலேயே வாகனத்தை மீண்டும் ஜனாதிபதி செயலகத்தில் ஒப்படைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் கிஹான் பிலபிட்டிய நேற்று நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு உத்தரவிட்டார்.

அதற்கமைய நாளை மறுதினம் திங்கட்கிழமை அந்த வாகனம் நிதி மோசடி விசாரணை பிரிவினரிடம் இருந்து ஜனாதிபதி செயலக போக்குவரத்து இயக்குநரால் பெற்றுக் கொள்ளப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது. (ம)

### பொருத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாக வாழ்வதற்கு ஏற்ற வீடுகளே தங்களுக்குத் தேவை என மக்கள் கோரிக்கை விடுத்துள்ள நிலையில், மக்களின் விருப்பத்துக்கு மாறாக பொருத்து வீடுகளை வழங்குவதற்கு மீள்குடியேற்ற அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது எனக் குறை கூறப்படுகின்றது.

ஆனால், பொருத்துவீடுகளே தேவை என்று மக்கள் தன்னிடம் கோரிக்கை விடுத்துள்ளார்கள் என்றும் தான் அவர்களுக்கு அவற்றைக் கட்டிக்கொடுப்பார் என்றும் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் விடாப்பிடியாக நிற்கின்றார்.

அதனால் அவருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே வெளிப்படையாகவே முறுகல் நிலை தோன்றியுள்ளது.

இந்த நிலையிலேயே, பொருத்து வீடுகளை அமைக்க உத்தேசித்திருக்கும் சுவாமிநாதனின் செயலுக்கு எதிர்ப்பு தெரிவித்து கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளதாகத் தெரியவருகின்றது. (ம)

### பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குமூலம் வழங்குவதற்கு ஆஜராகாமல் இருக்கின்றார். அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யவேண்டிய தேவை உள்ளது என பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினர் நேற்று நீதிமன்றில் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

"இவரை கடந்த 04 ஆம் திகதி வாக்குமூலம் பதிவு செய்வதற்கு அழைத்தபோது தலதா மாளிகையில் இடம்பெறும் நிகழ்வொன்றில் கலந்துகொள்ளவுள்ளதால் ஆஜராக முடியாது என அவர் பதிலளித்தார். எனினும், அது தொடர்பாக தாங்கள் ஆராய்ந்தபோது அன்றைய தினம் தலதா மாளிகையில் எவ்வித நிகழ்வுகளும் இடம்பெறவில்லை" என பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினர் நேற்று நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர்.

இதனையடுத்தே அவரை எதிர்வரும் 28,29 ஆம் திகதிகளில் பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவில் ஆஜராகி வாக்குமூலம் வழங்குமாறு நீதிவான் லங்கா ஜயரத்ன உத்தரவிட்டார். (ம)

## லலித், காமினி முன்னர் நடத்திய கட்சி மீண்டும் அரசியலில் ஈடுபடத் தீர்மானம்

### எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும்

ஜனநாயகத் தேசிய ஐக்கிய முன்னணி மீளவும் செயற்பாட்டு அரசியலில் ஈடுபடத் தீர்மானித்துள்ளது எனத் தெரியவருகின்றது.

ஜனநாயக தேசிய ஐக்கிய முன்னணி, முன்னாள் அமைச்சர்களான லலித் அதுலத் முதலி மற்றும் காமினி திஸாநாயக்க ஆகியோரால் நிறுவப்பட்டது. லலித் அத்துலத் முதலி அதன் தலைவராகக் கடமையாற்றியிருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்த லலித் அதுலத் முதலி மற்றும் காமினி திஸாநாயக்க ஆகியோர் 1991 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதஸவுக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டுவர முயற்சித்தனர். இதனால் இந்த இருவரும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து கட்சி உறுப்புரிமை ரத்து செய்யப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கில் தோல்வியடைந்தமையைத் தொடர்ந்து ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் லலித், காமினி உள்ளிட்டவர்கள் முக்கிய பங்காற்றியிருந்தனர்.

எனினும், 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் லலித் அதுலத் முதலி கொல்லப்பட்டிருந்தார். அதே ஆண்டு மே மாதம் முதலாம் திகதி ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச கொலை செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டனர்.

ஆரியவன்ச திஸாநாயக்க இந்தக் கட்சிக்கு தற்போது தலைமை தாங்குகின்றார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஜனநாயக தேசிய ஐக்கிய முன்னணி போட்டியிட உள்ளது எனத் தெரியவருகின்றது. (ம)

## முஸ்லிம் காங்கிரஸ் சர்ச்சைக்கு சுமுகமாகத் தீர்வு காணப்பட்டதாம்!

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் தொடர்பில் நீடித்த சர்ச்சை முடிவுக்கு வந்துள்ளது என அந்தக் கட்சியின் தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கடந்த பேராளர் மாநாட்டில் கட்சியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்ட மன்சூர் ஏ.காதர் கட்சியின் பொதுச்செயலாளராகக் கடமையாற்றுவார் என்றும் தெரிவித்த ஹக்கீம் இது குறித்துத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் அறிவித்துள்ளார் எனவும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஹசன் அலி புதிய செயலாளர் நியமனத்துக்கு ஆட்சேபனை தெரிவித்து தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முறையிட்டமையைக் அடுத்து சர்ச்சை உருவாகியது. எனினும் நேற் றைய தினம் ஹசன் அலி தனது முறைப் பாட்டை வாபஸ் பெற்றுக்கொண்டமையை அடுத்து சிக்கல் சுமுகமாக முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கண்டியில் வைத் துத் தெரிவித்தார்.

## நெற்செய்கைக்கான உரமானியம்; வங்கிகள் ஊடாக விவசாயிகளுக்கு

### வவுனியா கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தகவல்



வவுனியா, டிசெ.17

தற்போது செய்கை பண்ணப்பட்டுள்ள நெற்பயிர் செய்கைக்கான உரமானிய கொடுப்பனவுகளை விவசாயிகள் தாங்கள் சமர்ப் பித்த வங்கிக் கணக்கில் பெற்றுக் கொள்ள முடியும் என வவுனியா கமநல அபிவிருத்தித்திணைக்கள உதவி ஆணையாளர் ஆர்.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் 45 ஆயிரத்து 683 ஏக்கர் நிலப் பரப்பில் செய்கை பண்ணுவதற்காக 17 ஆயிரத்து 551 விவசாயிகள் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் பதிவு செய்திருந்தனர். இவர்களுக்கான உரக்கொடுப்பனவுக்காக ஏக்கர் ஒன்றுக்கு ஐந்தாயிரம் ரூபா வீதம் 226.8 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அக்கொடுப்பனவுக்கான வேலைகள் எமது திணைக்களத்தில் நிறைவு செய்யப்பட்டு மத்திய விவசாய அமைச்சிடம் கையளிக்கப் பட்டுள்ளன. விவசாயிகளுக்கான உரமானியக் கொடுப்பனவுகள் அவர்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. எனவே விவசாயிகள் இன்று முதல் அவற்றை பெறமுடியம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, முதல்கட்டமாக உர்மானியக் கொடுப்பனவுகள் வடக்கில் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் கிழக்கில் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்குரிய விவசாயிகளின் கணக்குகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிய வருகிறது. ஏனைய மாவட்ட உரமானியக் கொடுப்பனவுகளுக்கான வேலைகள் இடம்பெற்று வருகின்றன. (உ- 100)

## நாளை யாழ்ப்பாணத்தில் மின்வெட்டு

யாழ்ப்பாணம், டிசெ.17

பின்வரும் இடங்களில் நாளை ஞாயிற்றுக்கிழமை மின்வெட்டு அமுலில் இருக்கும் என இலங்கை மின்சார சபை அறிவித்தள்ளது.:-

ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கு மேலதிகமாக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக –

18.12.2016 (ஞாயிறு) அன்று யாழ் பிரதேசத்தில் காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை திருநெல்வேலி ஒரு பகுதி, தலங்காவில் பிள்ளையார் கோவிலடி, ஆரியகுளம் சந்தி, அரசடி, மின்சார நிலைய வீதி, ஸ்ரான்லி வீதி, பலாலி வீதி, O.L.R பிரதேசம், வெலிங்கடன் சந்தி, கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதியில் வேம்படி சந்தியிலிருந்து சத்திர சந்தி வரை, கந்தப்பசேகரம் வீதி, மகாத்மா காந்தி வீதி, முனீஸ்வரன் வீதி, மின்சார நிலைய வீதி, பெரியகடை வீதி, கோணாந்தோட்டம், சிவன் பண்ணை வீதியில் ஒரு பகுதி, கே.கே.எஸ். விதியில் முட்டாசுக்கடை சந்தியிலிருந்து துரையப்பா விளையாட்டரங்கு வரை, யாழ்ப்பாணம் 1 ஆம், 2ஆம், 3 ஆம், 4 ஆம் குறுக்குத் தெருக்களின் ஒரு பகுதி, சப்பல் வீதி, வேம்படி வீதியின் ஒரு பகுதி, யாழ். பிரதான வீதியில் துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து விஜிதா கபே வரை, பளை, புலோப்பளை, அல்லிப்பளை, யாழ். பொலிஸ் நிலையம், இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், யாழ். பொது நூலகம், மாவட்ட நீதிமன்றக் கட்டடத் தொகுதி, தேசிய நீர்வழங்கல் வடிகால் சபையின் பிராந்திய முகாமையாளர் அலுவலகம், போதனா வைத்தியசாலை, யாழ். கொமர்சல் வங்கி, யாழ் தேசிய சேமிப்பு வங்கி, யாழ். இலங்கை வங்கி, ரில்கோ விடுதி, சுகாதார திணைக்களம், கார்கில்ஸ் பூட் சிற்றி, யாழ். வைத்தியசாலை (மூன்று மாடிக்கட்டடத் தொகுதி), அபி கட்டடம், யாழ். விடுதி, யாழ். பல்கலைக்கழக ஆண்கள் தங்கு விடுதி, Graduate Studies, Property Developers (PVT) Ltd, AVNOR (PVT) Ltd, Lanka Orixleasing Co.PLC, ஸ்ரான்லி வீதி மொபிட்டல் வாடிக்கையாளர் சேவை நிலையம், லிங்கம் கிறீம் ஹவுஸ், திருநெல்வேலி கொமர்சியல் வங்கி, திருநெல்வேலி இலங்கை வங்கி, நொதேர்ண் பிறைவேற் வைத்தியசாலை, பலாலி வீதி டம்றோ, கிறீன் கிறாஸ் விடுதி, யாழ். புகையிரத நிலையம் சிறி நதியா நகை மாடம், ராஜா திரையரங்கு, BCCAS, ஞனம்ஸ் விடுதி, ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கி, NSR கட்டடத் தொகுதி, HNB வங்கி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (உ- ம)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.12.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.